# முன்னுரை

உங்களது வாகனத்தின் மிக முக்கிய அங்கமான இக்கையேடு நீங்கள் வாகனத்தை விற்கும்போது அல்லது வேறொருவருக்கு அல்லது வேறொரு நிறுவனத்துக்குச் சொந்தமாக்கும் வரை எப்போதும் வாகனத்திலேயே இருக்க வேண்டும். உங்களது புத்தம்புதிய ‘மாருதி சுசூகி ’-ஐ செலுத்த ஆரம்பிப்பதற்கு முன் இக்கையேட்டைக் கவனத்துடன் படிக்கவும்; அவ்வப்போது அதில் குறிப்பிட்டுள்ளவற்றை பரிசீலித்துக் கொள்ளவும். பாதுகாப்பு, இயக்குதல், பராமரிப்பு தொடர்பான முக்கியமான தகவல்கள் கையேட்டில் உள்ளன. கையேட்டில் குறிப்பிட்டுள்ள ’இலவச சோதனைச் சேவைகளை ’ முழுவதுமாக நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது . ‘இலவச சோதனைக்கான ’ 4 கூப்பன்கள் இக்கையேட்டுடன் இணைக்கப்பட்டுள்ளன. மாருதி சுசூகி -ஐ சர்வீஸுக்காக அல்லது வேறு காரணத்துக்காக உங்களது டீலரிடம் கொண்டு செல்லும்போது இக்கையேட்டை அவர்களிடம் கண்டிப்பாகக் காட்டவும்.

உங்களது வாகனத்தின் ‘ ஆயுளை ’ நீட்டிக்கவும் பராமரிப்புச் செலவைக் குறைக்கவும், ‘ கால அளவுக்குள்ளான பராமரிப்புத் திட்டத்தில் ’ அவ்வப்போது மேற்கொள்ளப்பட வேண்டிய பராமரிப்புப் பணிகள் பற்றி “சோதனை மற்றும் பராமரிப்பு ” என்ற பிரிவில் விவரமாகத் தரப்பட்டுள்ளன. பிரச்சினை வராமலிருக்கவும், விபத்துக்களைத் தடுக்கவும் உங்களது திருப்தியையும் பாதுகாக்கவும் உறுதி செய்யவும் இது மிகவும் அவசியமானது.

வாகனத்தின் ஆயுளை நீட்டிக்கவும் பாதுகாப்பான முறையில் வாகனத்தைச் செலுத்தவும் அன்றாட பரிசோதனைக்கான சோதனைப் பட்டியலில் “சோதனை மற்றும் பராமரிப்பு ” என்ற பிரிவில் இக்கையேட்டில் விவரிக்கப்பட்டுள்ளவை மிக அவசியமானவை.

பூவுலகின் இயற்கை வள ஆதாரங்களை சேமித்து, போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று ‘மாருதி சுசூகி இந்தியா லிமிடெட்’ நிறுவனம் பலமாக நம்புகிறது.

வாகனம் வைத்துள்ள ஒவ்வொருவரும் அதை ரீ-சைக்கிள் செய்து, முறையான விதத்தில் வேண்டாமென்று ஒதுக்கவும், பயன்படுத்தப்பட்ட என் ஜின் எண்ணெய், கூலண்ட் மற்றும் பிற திரவங்கள், பேட்டரிகள், டயர்களைச் சரியான விதத்தில் ஒதுக்கவும் வாடிக்கையாளர்களுக்கு அறிவுறுத்துகிறோம்.

**மாருதி சுசூகி இந்தியா லிமிடெட்**

**இக்கையேட்டை அச்சிடும் சமயம் வரை எமது தயாரிப்புக்களைப் பற்றி எமக்குக் கிடைத்துள்ள அண்மைத் தகவல்களின் அடிப்படையில்தான் இக்கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது. மேம்பாடு மற்றும் பிற மாற்றங்களின் காரணமாக உங்களது வாகனத்திற்கும் இங்குத் தரப்பட்டுள்ள தகவல்களுக்கும் ஆங்காங்கே சில வித்தியாசங்கள் இருக்கலாம். எவ்வித முன்னறிவிப்புமின்றி உற்பத்தியில் எப்போது வேண்டுமானாலும் மாற்றங்கள் கொண்டு வரவும் முன்னர் தயாரிக்கப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட வாகனத்தை ஒட்டியே மாற்றங்கள் இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாடின்றி செயல்படவும் மாருதி சுசூகி இந்தியா லிமிடெட் நிறுவனத்துக்கு முழு உரிமை உண்டு.**

**பிற நாடுகளில் நிலுவையில் இருக்கும் தர நிர்ணயங்கள், நெறிமுறைகளுக்கு உகந்ததாக எமது வாகனம் இல்லாமல் போகலாம். பிற நாடுகளில் எமது வாகனைத்தைப் பதிவு செய்ய முயற்சிக்கும் முன்பு, பொருத்தமான நெறிமுறைகள் அனைத்தையும் சோதித்து, தேவைப்படும் திருத்தங்களைச் செய்யவும்.**

## முக்கியமானவை

**எச்சரிக்கை / ⚠ நிதானம் /** ***அறிவிப்பு*** / *குறிப்பு*

இக்கையேட்டைக் கவனமாகப் படித்து அதில் உள்ள குறிப்புக்களைக் கவனமாகப் பின்பற்றவும் சிறப்பான தகவல்களை வலியுறுத்தும் ⚠ பொருட்டு **எச்சரிக்கை , நிதானம்,** ***அறிவிப்பு*** மற்றும் *குறிப்பு* போன்ற வார்த்தைகளும் அவற்றிற்கான குறியீட்டுக்களும் சிறப்பான அர்த்தங்களைக் கொண்டுள்ளன. பின்வரும் குறியீட்டு வார்த்தைகள் மூலம் கூறப்படும் செய்தியை கவனத்துடன் பாருங்கள்.

**⚠ எச்சரிக்கை**

**மரணம் அல்லது மோசமான காயங்களை ஏற்படுத்தக்கூடிய தீங்கு எச்சரிக்கை ஆகும்.**


**⚠ நிதானம்**

**சிறிய அல்லது மிதமான காயங்களை ஏற்படுத்தக்கூடிய தீங்கு நிதானம் ஆகும்.**

***அறிவிப்பு***

**வாகனம் சேதமடையும் நிலையை ஏற்படுத்தக் கூடிய தீங்கு அறிவிப்பு ஆகும்.**

*அறிவிப்பு* :
பராமரிப்புப் பணியைச் சுலபமாக்க அல்லது குறிப்புக்களைத் தெளிவாக்கத் தரப்படும் சிறப்பு விவரங்களைக் குறிக்கிறது



75F135

இக்கையேட்டில் வட்டத்தின் குறுக்கே கோடுள்ள குறியீடு ‘இதைச் செய்யாதீர்கள்’ அல்லது ‘ இது நிகழாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள் ’ என்பதை உணர்த்துகிறது.

## திருத்தம் தொடர்பான எச்சரிக்கை

**⚠ எச்சரிக்கை**

**உங்களது வாகனத்தில் திருத்தம் எதுவும் மேற்கொள்ளாதீர்கள். நீங்கள் மேற்கொள்ளும் திருத்தமானது வாகனப் பாதுகாப்பு, கையாளும் விதம், செயல்திறன், நீடித்திருக்கும் தன்மை ஆகியவற்றைப் பாதிப்பதுடன் அரசு வகுத்துள்ள பல்வேறானநெறிமுறைகளை மீறுவதாகவும் இருக்கலாம். மேலும், திருத்தம் செய்யப்பட்டதால் வாகனத்துக்கு ஏற்படக்கூடிய நஷ்டம் அல்லது செயல்திறன் சார்ந்த பிரச்சினைகள்வாரண்டி காலத்திற்குள் நிகழ்ந்தாலும் கணக்கில் வாராது.**

*அறிவிப்பு*

**செல்போன் அல்லது சிபி (சிட்டிசன் பேண்ட்) ரேடியோ உள்ளிட்ட மொபைல் தொலைதொடர்புக் கருவிகளைச் சரிவரப் பொருத்தாவிடில் வாகனத்தின் இக்னிஷன் சிஸ்டத்தின் மின்னிணைப்புகளில் பிரச்சினை ஏற்பட்டு, வாகனச் செயல்திறன் பிரச்சினைகள் உருவாகக் காரணமாகலாம். அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்சியல் டீலருடன் அடிக்கடி தொடர்பு கொண்டு இத்தகைய மொபைல் தொலைதொடர்புக் கருவிகளைப் பொருத்துவது குறித்த அறிவுரைகளைக் கேட்டுப் பெறவும்.**

*அறிவிப்பு*

**மாருதி சுசூகி நிறுவனம் பரிந்துரைக்காத மோசமான, தரமற்ற எரிபொருள் அல்லது லூப்ரிகேண்டுகளைப் பயன்படுத்தினால் வாகனங்கள் தீவிரப் பாதிப்புக்கு உள்ளாகலாம்.**

# வாரண்ட்டி பாலிசி

மாருதி சுசூகி இந்தியா லிமிடட், (இனி மாருதி சுசூகி என்று குறிப்பிடப்படும்), இந்தியாவில் விநியோகிக்கப்பட்டு அதிகாரபூர்வ மாருதி சுசூகி டீலர்களால் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு புதிய மாருதி சுசூகி வாகனங்களுக்கும் சாதாரண பயன்பாடு மற்றும் சேவைகளின் கீழ் உற்பத்தியின்போது பொருள்கள் மற்றும் தொழிற்திறனில் எந்த வகையான பாதிப்பு இருந்தாலும் பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின்படி இலவசமாக வழங்கப்படும்:

**(1) தகுதி:**

இந்த வாரண்ட்டிக்கு தகுதி பெற:
இந்த உத்தரவாதத்திற்குத் தகுதி பெற வாகனமானது மாருதி சுசூகி யின் அதிகாரபூர்வ டீலர் மற்றும் அமைப்பால் டெலிவரி செய்யப்பட்டு, மாருதி சுசூகி யின் அதிகாரபூர்வ ஒர்க் ஷாப் மூலம் சர்வீஸ் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**(2) காலஅளவு:**

**முதல் உரிமையாளருக்கு வாகனம் டெலிவரி செய்யப்பட்டது முதல் இருபத்தி நான்கு (24) மாதங்கள் அல்லது 72,000 கிலோ மீட்டர் (எது முதலில் வருகிறதோ) வாரண்டியின் கால அளவு அமையும்.**

**(3) மாருதி சுசூகி வாரண்ட்டி கடமை:**

மேற்குறிப்பிட்ட கால அளவிற்குள் மாருதி சுசூகி வாகனத்தில் ஏதாவது பழுது காணப்பட்டால், அந்தப் பழுது அல்லது குறைபாடு உற்பத்தியின்போது அல்லது தொழில்திறனில் ஏதாவது குறைபாடு என்று தெரிந்தால், மாருதி சுசூகி உணர்ந்தால், மாருதி சுசூகி யின் தன் சொந்த விருப்பப்படி அதை பழுது பார்த்தல் அல்லது பழுதடைந்த உதிரிப் பாகத்திற்கு பதிலாக அதே போன்ற புதிய பாகத்தை உரிமையாளரிடம் அதற்கான பணத்தையோ அல்லது அதை மாற்றுவதற்கான கூலியோ கேட்காமல் மாற்றும் பொறுப்பில் உள்ளது. மாற்றப்பட்ட அத்தகைய குறைபாடுள்ள பாகங்கள், மாருதி சுசூகி யின் சொத்துகளாக மாறும். இந்த வாரட்டி நிபந்தனைக்குள் வராத வேறு எந்த பழுதுகள் அல்லது உதிரிப்பாக மாற்றங்களுக்கு வாகனத்தின் உரிமையாளர்தான் பொறுப்பு. மாருதி சுசூகி நிறுவனத்தின் முடிவே இறுதியானது.

**(4) வரையறைகள்:**

இந்த வாரண்ட்டி பின்வருவனவற்றுக்குப் பொருந்தாது:

1) நான்கு இலவச சேவைகள் தவிர சாதாரணமாகத் தேவைப்படும், எண்ணெய், திரவ மாற்றங்கள், நுகர்பொருள்கள், ஹெட்லைட் எய்மிங், ஃபாஸ்ட்னர்கள், ரீ டைட்னிங், சக்கர பாலன்ஸ், சக்கர சீரமைப்பு, டயர் சுழற்சி, இன்ஜெக்டர்களை சுத்தம் செய்தல், கார்ப்ரெட்டர் சரிசெய்தல், இக்னீஷன் டைமிங், கிளட்ச் மற்றும் வால்வ் கிளியரன்ஸ் உட்பட்ட ஆனால் வரையறையில்லாத பராமரிப்பு சேவைகள்.
2) சாதாரணமாக தேய்மானம் ஏற்படும் பாகங்களான பல்புகள், டயர்கள், ட்யூப்கள், ஸ்பார்க் பிளக்குகள், பெல்ட்டுகள், ஹோஸ்கள், ஃபில்டர்கள், வைப்பர் பிளேடுகள், பிரஷ்கள், கான்டாக்ட் பாயின்ட்டுகள், ஃப்யூஸ்கள், கிளெட்ஜ் டிஸ்க், பிரேக் ஷூக்கள், பிரேக் பேடுகள், கேபிள் மற்ற அனைத்து ரப்பர் பாகங்களை (ஆயில் சீல் மற்றும் கிளாஸ் ரன் தவிர) வரையறையில்லாத, மாற்றுதல்.
3) போட்டிகள், பேரணிகள் அல்லது ரேஸ்களுக்குப் பயன்படுத்தப்பட்ட எந்த வாகனமும்.
4) விபத்துகள் அல்லது மோதலின் விளைவால் ஏற்பட்ட எந்த பழுதுகள் அல்லது உதிரிப் பாக மாற்றங்கள்.
5) தவறான உபயோகம், அலட்சியம், அசாதாரண உபயோகம், போதிய கவனமின்மை, விபத்து, திருட்டு, கலவரம், தீ, வெள்ளம் ஆகியவற்றால் ஏற்படுகின்ற எந்தவொரு குறைபாடு/சேதம் – அது மட்டுமில்லாமல் பாகங்களின் உள்ளே தண்ணீர் புகுவதால் ஏற்படும் என்ஜின் சீஸ் ஆகுதல், ஹைட்ரோஸ்டேடிக் லாக் போன்றவை அல்லது பாடி/பாகங்களுக்கு வெளிப்புறத்தில் ஏற்படும் சேதங்கள்.
6) கலப்படம் செய்யப்பட்ட எரிபொருள்/ லூப்ரிகண்டுகள்/ ஆயில்/ கூலன்ட்/ திரவங்கள்/ பாலிஷ் பொருட்கள் மற்றும் உரிமையாளர் கையேட்டில் குறிப்பிடப்படாத எரிபொருள் /லூப்ரிகண்டுகள் / ஆயில் / கூலன்ட்/ திரவங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதால் ஏற்படும் எந்த சேதமும்.
7) வரம்பில்லாமல் மேம்பட்ட செயல்பாட்டுக்காக துணை பாகங்கள் பொருத்துதல், விளக்குகளைப் பெரிதாக்குதல், பிற மாற்றங்கள் மற்றும் வெளிப்புற/ அதனால் ஏற்படுகிற காரணங்கள் உட்பட எந்த வாகனமும் திருத்தப்பட்டால் அல்லது மாற்றப்பட்டால்.
8) மாருதி சுசூகி யால் (எம் எஸ் ஜி ஏ அல்லாத, எம் எஸ் ஜி பி அல்லாத) ஒப்புதல் அளிக்கப்படாத எந்த ஒரு பாகம் அல்லது சாதனங்களைப் பயன்படுத்திய எந்த ஒரு வாகனமும்.

9) மாருதி சுசூகி யின் உரிமையாளர் கையேடு மற்றும் சர்வீஸ் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளபடி உள்ள வாகன ஓட்டுதலுக்கான குறிப்புகளின்படி செயல்படாத எந்த ஒரு வாகனமும்.

10) மாருதி சுசூகி யின் உரிமையாளர் கையேடு மற்றும் சர்வீஸ் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளபடி சர்வீஸ் ஆய்வுகளைப் பெறாத எந்த ஒரு வாகனமும்.

11) மாருதி சுசூகி யின் அங்கீகரிக்கப்பட்ட ஒர்க் ஷாப் தவிர வேறு எங்காவது பொருத்துதல், பிரித்தல், பழுது பார்த்தல் மேற்கொள்ளப்பட்ட எந்த வாகனமும்.

12) எந்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்டதோ அதைத் தவிர வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட எந்த வாகனமும்.

13) காற்றில் பரவும் கழிவு, தொழிற்சாலை கழிவு, அமில மழை, ஆலங்கட்டி மழை அல்லது ஆலங்கட்டி புயல், புயல் காற்று, மின்னல், பறவை எச்சம், எலி போன்ற கொறிப்பு விலங்குகள் கடித்தது மற்றும் வாகனத்திற்கு சேதத்தை விளைவிக்கும் மற்றவை என இவற்றால் ஏற்படும் எந்தவொரு சேதம் அல்லது அழிவு.

14) வாகனத்தின் செயல்பாட்டை பாதிக்காத முக்கியத்துவம் இல்லாத ஒலி, அதிர்வு, திரவ ஒழுகல் குறைபாடுகள் உட்பட்ட ஆனால் வரையறையில்லாத

15) வரம்பில்லாமல் பழையதாகுல், கிழிதல் அல்லது நிறமாற்றம், மங்குதல், உருமாறுதல் மற்றும் துணி சாயம்போதல் போன்ற தரம் கெடுதல் உட்பட இயற்கையான கிழிந்து போதல் எதுவும்.

16) வீட்டு உபயோக எல்.பி.ஜி எரிவாயு/எல்.பி.ஜி. சிலிண்டர் பொருத்துதல் மற்றும் பயன்படுத்துதல்.

17) வி-பெல்ட்டுகள், ஹோஸ்கள் மற்றும் வாயு கசிவு.

18) எல்.பி.ஜி./சி.என்.ஜி. கிட்டுகள் சேர்க்கப்பட்ட எந்த வாகனமும்.

19) ஒட்டு வேலை, பாடி வேலைப்பாடு மற்றும் மோல்டிங் மற்றும் இன்டீரியர் ட்ரிம் செய்தல் உட்பட மீண்டும் பெயின்ட் செய்தல்.

20) அரித்தல், பாடி பாகங்களில் துருப்பிடித்தல்.

21) அங்கீகாரமில்லாமல் மாற்றப்பட்ட ஓடோமீட்டர் அல்லது மாற்றப்பட்ட/ அழிக்கப்பட்ட ஓடோமீட்டர் அளவீடுகளை கொண்ட அல்லது சர்வீஸ் பதிவேடுகள் பொருந்தாத எந்தவொரு வாகனமும்.

22) ஏற்கனவே குறைபாடு இருந்து, வாகனத்தின் உரிமையாளர்/ பயனரின் கவனக்குறைவால் ஏற்படும் சேதங்கள்.

23) வெறுமனே வாகனத்தை நீண்ட காலமாக அப்படியே நிறுத்திவைப்பதால் பேட்டரி/ டயர் போன்றவற்றில் ஏற்படும் எந்தவொரு சேதங்களும்.

### (5) வாரண்ட்டியை விரிவுபடுத்துதல்:

இந்த உத்தரவாதம் மாருதி சுசூகி வாகனங்களுக்காக மாருதி சுசூகி யால் முழுமையாக எழுதி வழங்குவது ஆகும். எந்தவொரு டீலரும் அல்லது இதன் ஏஜன்ட்டும் அல்லது ஊழியரும் இதை நீட்டிப்பதற்கோ அல்லது விரிவாக்கம் செய்வதற்கோ அதிகாரம் கொண்டிருக்கவில்லை. மேலும் எந்தவொரு டீலர் அல்லது இதன் ஏஜன்ட் அல்லது ஊழியர் மாருதி சுசூகி யின் சார்பாக எந்த வகையான வாய்மொழி உத்தரவாதம் அல்லது பிரதிநிதித்துவம் அல்லது உறுதி அளிப்பதற்கும் அதிகாரம் இல்லை.
எந்த மாடலிலும், எந்த நேரத்திலும் ஒரு மேம்பாடுகள் அல்லது மாற்றங்கள் செய்யும் உரிமையை மாருதி சுசூகி பெற்றுள்ளது. அதே மாற்றங்களை ஏற்கெனவே விற்ற வாகனங்களிலும் செய்ய வேண்டும் என்ற எந்த கட்டாயமும் கிடையாது .

### (6) வாரண்ட்டி சேவை:

உத்தரவாத சர்வீஸ் பெறுவதற்கு, உரிமையாளரின் செலவில் எந்த ஒரு அதிகாரபூர்வ மாருதி சுசூகி யின் அங்கீகரிக்கப்பட்ட ஒர்க் ஷாப்பில் முழு வாகனத்தையும் கொண்டு வரவேண்டும்.
சர்வீஸுக்காக வாகனத்தைக் கொடுக்கும்போது வாகனத்திலுள்ள அவரது உடமைகள் அல்லது பொருத்தப்பட்டிருக்கும் பாகங்களுக்கு வாடிக்கையாளரே பொறுப்பாவார், எந்தவொரு சூழ்நிலையிலும் எந்தவொரு கோரிக்கையும் எந்த விதத்திலும் ஊக்குவிக்கப்படாது.

### (7) உரிமையாளரின் வாரண்ட்டி பொறுப்புகள்:

ஒவ்வொரு உரிமையாளரின் பொறுப்புகள் பின்வருமாறு:

- மாருதி சுசூகி யின் அதிகாரபூர்வ ஒர்க் ஷாப்பில் மாருதி சுசூகி யின் உரிமையாளரின் கையேடு மற்றும் சர்வீஸ் கையேட்டில் குறிப்பிட்டுள்ள அனைத்து சோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு விட்டதா என்பதையும் இப்படிப்பட்ட சர்வீஸ் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதற்கான போதுமான நிரூபணங்களையும் வைத்திருக்க வேண்டும்.
- மாருதி சுசூகி அங்கீகரிக்கப்பட்ட ஒர்க் ஷாப்பில் வாகனத்தின் மீது சர்வீஸ் ஆய்வு அல்லது உத்தரவாத சர்வீஸ்

மேற்கொள்ளப்படும் போதெல்லாம் "உரிமையாளரின் கையேடு மற்றும் சர்வீஸ் கையேட்டில்" 'வாடிக்கையாளர் சர்வீஸ் பராமரிப்பு பதிவேடுகள்' என்பதைப் புதுப்பித்து பராமரிக்கவும்.

- சர்வீஸ் சோதனைகள் அல்லது உத்தரவாத சேவைகளுக்காக வரும்போது, மாருதி சுசூகி யின் 'உரிமையாளர் கையேடு மற்றும் சர்வீஸ் குறிப்பேட்டை ' மாருதி சுசூகி யின் அதிகாரப்பூர்வ ஒர்க் ஷாப்பில் காட்ட வேண்டும்.

உரிமையாளர் கையேடு மற்றும் சர்வீஸ் குறிப்பேடு தொலைந்து-போனாலோ அல்லது சேதமடைந்தாலோ அந்த உரிமையாளர், அந்த வாகனத்தை தான் வாங்கிய மாருதி சுசூகி அங்கீகரிப்பட்ட டீலரிடம் மாற்று 'உரிமையாளர் கையேடு மற்றும் சர்வீஸ் குறிப்பேடுகளைப் ' பெறுவதற்கான ஆலோசனை பெற வேண்டும்.

### (8) பின்வரும் விளைவுகளால் ஏற்படும் பாதிப்புகளுக்குப் பொறுப்பாகாமை:

வாகனம் தொலைந்து போதல், நேரம் வீணாதல், அசவுகரியம் அல்லது வேறு விதமான மறைமுக தற்செயல் நிகழ்வுகள் அல்லது வாரண்ட்டி சேவைக்கு உட்பட்ட ஏதாவது குறைபாடால், வாகனத்தை அந்த உரிமையாளர் பயன்படுத்த முடியாமல் போனதால் ஏற்படும் பாதிப்பு ஆகியவற்றுக்கு மாருதி சுசூகி எந்தப் பொறுப்பும் ஏற்காது.

### (9) உரிமையாளர் மாற்றம்:

வாகனத்தில் உரிமையாளர் மாறினாலும்கூட, புதிய உரிமையாளருக்கும் மீதமிருக்கும் வாரண்ட்டி கால அளவு பொருந்தும்.

## புகை வெளியேற்ற வாரண்ட்டி பாலிசி

அனைத்து மாருதி சுசூகி வாகனங்களுக்கும் (வழக்கமான வாரண்டி தவிர, இதுவும் ரெகுலர் பிராடக்ட் வாரண்ட்டி போன்றதுதான்) மாருதி சுசூகி புகைவெளியேற்ற வாரண்ட்டி நான்கு மாநரங்களில் மட்டும் (தில்லி, கொல்கத்தா, மும்பை மற்றும் சென்னை) வழங்கப்படும். இது 2001, ஜூலை 1-ம் தேதியிலிருந்து அமலுக்கு வந்தது.

### விதிமுறைகள்:

முதல் உரிமையாளரிடம் டெலிவரி செய்யப்பட்ட நாளிலிருந்து 80,000 கி.மீ. அல்லது 3 வருடங்கள் (எது முதலில் வருகிறதோ) புகைவெளியேற்ற வாரண்ட்டி செல்லுபடியாகும். வாகன உரிமையில் ஏதாவது மாற்றம் இருந்தாலும் முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் மீதமிருக்கும் வாரண்ட்டி காலம் இவருக்கும் பொருந்தும்.

### நிபந்தனைகள்:

1. 1989-ம் ஆண்டில் மத்திய மோட்டார் வாகன சட்ட விதிமுறைகளின் (சிஎம்விஆர்) விதி எண் 115-ன் துணை விதி (2) யின்படி வாகனம் புகைவெளியேற்ற தர நிர்ணயப்படி இல்லாவிட்டால், புகைவெளியேற்ற வாரண்ட்டியின் கீழ், முதல் கட்ட பரிசோதனையின் அடிப்படையில் தான் வாரண்ட்டி ஏற்றுக் கொள்ளப்படும்.
2. மாருதி சுசூகி அல்லது அதன் டீலரால் நடத்தப்படும் பரிசோதனைக்குப் பிறகே பின்வரும் நிலைகளில் வாரண்ட்டி கோரல் ஏற்றுக்கொள்ளப்படும்.
   (அ) அசல் பாகங்கள் எந்த விதத்திலும் பழுதடையவில்லை.
   (ஆ) குறிப்பிட்ட பகுதி (இணைப்பு -(ஏ)யில் உள்ளபடி) உற்பத்தி குறைபாடு ஏதுமில்லை.
   (இ) உரிமையாளர் கையேட்டிலும், சர்வீஸ் குறிப்பேட்டிலும் கூறப்பட்டுள்ளபடி வாகனத்தை முறையாகப் பராமரித்தும் எரிபொருள் மற்றும் ஆயிலை (என்ஜின் ஆயில், டிரான்ஸ்மிஷன் ஆயில், பிரேக் ஆயில் முதலானவை) பயன்படுத்தியும் புகைவெளியேற்றத் தர நிர்ணயத்தை (1-ல் குறிப்பிட்டுள்ளபடி.) வாகனம் பூர்த்தி செய்யவில்லை.
3. உதிரிப் பாகங்களின் வாரண்ட்டியைத் தீர்மானிப்பதற்கான பரிசோதனை முறையை முடிவுசெய்வது மாருதி சுசூகி மற்றும் அதன் விற்பனையாளர் மட்டுமே. இந்தப் பரிசோதனையின் முடிவுகள் இறுதியானவை, கட்டுப்படுத்துபவை. இந்தப் பரிசோதனைக்குப் பிறகு வாரண்ட்டி பெறுவது உறுதிபடுத்தப்படாவிட்டால், இந்தப் பரிசோதனைக்கான ஒட்டுமொத்த செலவையோ அல்லது ஒரு பகுதி செலவையோ வசூலிக்கும் உரிமை மாருதி சுசூகி க்கும் அதன் விற்பனையாளருக்கும் உண்டு.
4. புகை வெளியேறும் வாரண்ட்டி விதியின் கீழ் உதிரிப் பாகங்கள் (இணைப்பு - (ஏ) பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி) கட்டணமில்லாமல் மாற்றிக் கொடுக்கப்படும். ஆனால் நுகர்வுப் பாகங்களுக்கான கட்டணம் அசல் விலைப்படி வசூலிக்கப்படும்.
5. புகை வெளியேற்ற வாரண்ட்டிக்கு உட்பட்ட ஒரு குறிப்பிட்ட பாகத்தையோ அல்லது அதனுடன் இணைக்கப்பட்டுள்ள பாகங்களையோ, இவை ஒரு முழுமையான அசெம்ப்ளியில் இணைக்கப்பட்டுள்ளவையாக இருக்கும்பட்சத்தில் தனித்தனியாக மாற்ற முடியாவிட்டால், ஒட்டுமொத்த அசெம்ப்ளியை மாற்றிக் கொடுப்பதா அல்லது அந்த அமைப்பின் சில பாகங்களைப் பயன்படுத்தி, உரிய முறையில் பழுது நீக்குவது அல்லது மாற்றிக்கொடுப்பதா என்பதை மாருதி சுசூகி அல்லது அதன் விற்பனையாளர்தான் தீர்மானிப்பார்கள்.
6. புகை வெளியேற்ற வாரண்ட்டி தரத்தைத் தக்கவைப்பதற்காக பின்னர் பழுதுபார்க்க நேர்ந்தாலோ அல்லது சில பாகங்களை மாற்ற வேண்டி வந்தாலோ, பொருள் வாரண்ட்டிக்கு உட்படாத நிலையில், அவற்றுக்கு வாரண்ட்டி பொருந்தாது. இப்படிப்பட்ட பழுதுகள் அல்லது மாற்றப்படும் பாகங்களுக்கு நுகர்பொருளுக்கான அசல் கட்டணம் வசூலிக்கப்படும்.
7. அருகாமையில் உள்ள மாருதி சுசூகி விற்பனையாளரின் பட்டறைக்கு வாகனத்தை கொண்டு செல்வதற்கான செலவுக்கோ அல்லது வாரண்ட்டி கோரலை சமர்ப்பிப்பது, பரிசோதனை செய்வது மாருதி சுசூகி டீலர் பழுது நீக்குவது ஆகிய சந்தர்ப்பங்களில் வாகனத்தைப் பயன்படுத்த முடியாததால் ஏற்படும் இழப்புக்கோ மாருதி சுசூகி பொறுப்பேற்காது.
8. புகை வெளியேற்ற தர நிர்ணயத்தை பின்பற்றாததால் சட்டப்படியான அமைப்புகள் விதிக்கும் எந்தவிதமான அபராதத் தொகைக்கும் மாருதி சுசூகி பொறுப்பேற்காது.

9. அனைத்து உரிய ஆவணங்களும் இருக்கும்பட்சத்தில் வாகன உரிமையாளர் மாறினாலும் புகை வெளியேற்ற வாரண்ட்டி செல்லுபடியாகும்.
10. புகைவெளியேற்ற வாரண்ட்டிக்கான அனைத்துப் பராமரிப்பு நடவடிக்கைகளும் (உரிமையாளர் கையேடு மற்றும் சர்வீஸ் குறிப்பேட்டில் இடம்பெற்றுள்ளபடி) பின்பற்றப்பட வேண்டும், கையேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.
11. மாசுபடுதல் தர அளவு மீறப்பட்டது கண்டுபிடிக்கப்பட்ட சோதனைக்கு முந்தைய காலம் வரை செல்லுபடியாகும் பி.யு.சி. (பொல்லுஷன் அண்டர் கன்ட்ரோல்) வாடிக்கையாளர் சமர்ப்பிக்க வேண்டும். ரசீதுகளும் (வாகனத்தை வாங்கிய தேதியிலிருந்து உரிமையாளர் கையேடு மற்றும் சர்வீஸ் குறிப்பேட்டில் இடம் பெற்றுள்ளபடி வாகன பராமரிப்பு செலவுக்கான) தேவைப்படும்.

**பின்வரும் சந்தர்ப்பங்களில் புகை வெளியேற்ற வாரண்ட்டி பொருந்தாதது.**

1. உரிய பி.யு.சி. சான்றிதழ் பெறாமல் இருப்பது.
2. மாருதி சுசூகி யின் அதிகாரபூர்வ பட்டறையில், உரிமையாளர் குறிப்பேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி வாகனத்தை சர்வீஸ் செய்யாமல் இருப்பது.
3. வாகனத்தை அசாதாரண பயன்பாட்டுக்கு (விபத்து, மோட்டார் ரேஸ், பேரணிகள் அல்லது சாதனை நிகழ்த்துதல் முதலியன) உட்படுத்துதல்.
4. எம்.ஜி.பி. (மாருதி ஜென்யூன் பார்ட்) அல்லாத பாகங்களைப் பயன்படுத்துதல்.
5. அங்கீகரிக்கப்படாத முறையில் வாகனத்தைத் திருத்தி அமைத்தல்.
6. வாகனம் ஓடியிருக்கும் உண்மையான கி.மீ. தொலைவைக் காட்டாமல் இருப்பதற்காக ஓடோ மீட்டரில் தில்லுமுல்லு வேலை செய்தல்.
7. கலப்படம் செய்யப்பட்ட எரிபொருள் மற்றும்/அல்லது குறிப்பிடப்படாத ஆயில்களைப் (என்ஜின் ஆயில், டிரான்ஸ்மிஷன் ஆயில் மற்றும் பிரேக் ஆயில் முதலியன) பயன்படுத்துதல்.

**இணைப்பு – ( ஏ )**

புகைவெளியேற்ற வாரண்ட்டியின் கீழ் வரும் பாகங்களின் பட்டியல்

1. ஃப்யூயல் இன்ஜெக்சன், அசெம்பிளி, பிரஷர் ரெகுலேட்டர், த்ரோட்டில் பாடி அசெம்பிளி.
2. எலக்ட்ரானிக் கன்ட்ரோல் மாடுல் (ஈ.சி.எம்.)
3. இன்டேக் மானிஃபோல்ட்
4. ஈ.ஜி.ஆர். வால்வ்
5. டிஸ்டிபியூட்டர் மற்றும் உள் பாகங்கள்
6. இக்னீஷன் காயில்
7. கேனிஸ்டர் அசெம்பிளி
8. வேபர் லிக்விட் செப்ரேட்டார்
9. ஃப்யூயல் டாங்க் மற்றும் ஃபில்லர் கேப்
10. பி.வி.சி. (பாசிட்டிவ் கிரான்கேஸ் வெண்டிலேஷன்) வால்வ்
11. ஆயில் ஃபில்லர் கேப்
12. கேட்லிடிக் கன்வெர்ட்டர்
13. எக்ஸாஸ்ட் மானிஃபோல்ட்
14. சென்சார்கள் தொடர்பான அனைத்து எரிபொருள் இன்ஜெக்சன்.
15. உயர் அழுத்தம் வாய்ந்த எரிபொருள் பம்ப்.
16. க்ளோ ப்ளக்
17. க்ளோ ப்ளக் கன்ட்ரோலர்
18. மானிவெர்டர்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பியூயல் தொடர்பான பரிந்துரை | 1 |
| வாகனம் ஓட்டுவதற்கு முன்பு | 2 |
| உங்களது வாகனத்தை இயக்குதல் | 3 |
| ஓட்டுவதற்கான குறிப்புக்கள் | 4 |
| மற்ற கட்டுப்பாடுகளும் கருவிகளும் | 5 |
| வாகனத்தில் ஏற்றுவது மற்றும் இழுத்துச் செல்வது | 6 |
| பரிசோதனை மற்றும் பராமரிப்பு | 7 |
| அவசரநிலைக் கால சேவை | 8 |
| தோற்றப்பொலிவு குறித்த பராமரிப்பு | 9 |
| பொதுவான தகவல்கள் | 10 |
| குறிப்புகள் | 11 |
| பாடி கட்டமைப்பிற்கான குறிப்புகள் (சேஸிஸ் வேறுபாடுக்காக) | 12 |

1

# பியூயல் தொடர்பான பரிந்துரை

பியூயல் தொடர்பான பரிந்துரை ............................................ 1-1

# பியூயல் தொடர்பான பரிந்துரை

## (பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)

### பெட்ரோல்

ஆக்டேன் எண் (ஆர்.ஓ.என்.) 91 அல்லது அதைவிட அதிக எண்ணுள்ள அன்லீடட் பெட்ரோலை நீங்கள் பயன்படுத்த வேண்டும்.

• **பெட்ரோல்/எத்தனால் கலவைகள்**

கேஸஹால் என்றும் அறியப்படும் அன்லீடட் பெட்ரோல், எத்தனாலின் கலவைகள் (க்ரெய்ன் ஆல்கஹால்) வணிகரீதியாக சில இடங்களில் கிடைக்கிறது.
இவ்வகைக்கலவைகளில் 10%-க்கு மேல் எத்தனால் இல்லை என்றால் உங்களது கார்களில் பயன்படுத்தப்படலாம். இந்த பெட்ரோல்-எத்தனால் கலவையில் பெட்ரோலுக்கென பரிந்துரைக்கப்பட்ட அதே அளவு ஆக்டேன் ரேட்டிங் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள்.

• **பெட்ரோல் /மெத்தனால் கலவைகள்**

அன்லீடட் பெட்ரோல், மெத்தனால் கலவை (மர ஆல்கஹால்) வணிகரீதியாக சில இடங்களில் கிடைக்கிறது. எச்சூழலிலும் 5%-க்கு மேல் மெத்தனால் உள்ள எரிபொருளை பயன்படுத்தக்கூடாது. இத்தகைய பியூயல் பயன்பாட்டல் எழும் பியூயல் சிஸ்டம் சேதாரமடைதல் அல்லது வாகனச் செயல்திறன் பிரசினைகளுக்கு மாருதி சுசூகிசுசூகி எப்பொறுப்பும் ஏற்காது; இவை புதுவாகனத்தின் வாரண்டியில் அடங்கவும் அடங்காது.
5% அல்லது அதைவிடக் குறைவான மெத்தனால் உள்ள எரிபொருளில் கரைப்பான், அரிமான தடைகள் இருந்தாலும் அதை உங்களது வாகனத்தில் பயன்படுத்த முடியாது.

*குறிப்பு:*
*உங்களது வாகனத்தைச் செலுத்துதல் அல்லது பியூயல் சிக்கனம் பற்றி உங்களுக்குத் திருப்தி ஏற்படாவிடில் ஆல்கஹால் இல்லாத அன்லீடட் பெட்ரோலையே மீண்டும் நீங்கள் பயன்படுத்தியாக வேண்டும்.*

*அறிவிப்பு*

**வெட்பமான சூழலில் பியூயல் விரிவதற்கு ஏதுவாக பியூயல் டேங்கில் ஒரு காற்றிடம் தரப்பட்டுள்ளது. ஃபில்லரின் மூடி தானாவே மூடிக்கொண்டபின் (அ) பியூயல் சரியாக நிரம்பாதபோது எரிபொருளை நிரப்பினால், காற்றிடம் முழுக்க நிரம்பிவிடும். இவ்வாறு பியூயல் நிரம்பிய நிலையில் இருக்கும்போது வெப்பத்தை வெளிப்படுத்துவது பியூயல் விரிவாக்கம் காரணமாக கசிவை ஏற்படுத்தும். இவ்வாறான கசிவைத் தடுக்க ஃபில்லர் மூடி தனாக மூடிக்கொண்ட பின் நிரப்புவதை விட்டுவிடவும் (அ) மாற்று தானியங்கியற்ற அமைப்பை பயன்படுத்துகையில், ஆரம்ப வென்ட் ப்ளோபேக் ஏற்படுகிறது.**

*அறிவிப்பு*

**வெட்பமான சூழலில் பியூயல் விரிவதற்கு ஏதுவாக பியூயல் டேங்கில் ஒரு காற்றிடம் தரப்பட்டுள்ளது. ஃபில்லரின் மூடி தானாவே மூடிக்கொண்டபின் (அ) பியூயல் சரியாக நிரம்பாதபோது எரிபொருளை நிரப்பினால், காற்றிடம் முழுக்க நிரம்பிவிடும். இவ்வாறு பியூயல் நிரம்பிய நிலையில் வெப்பமும் அதில் பட்டால் பியூயல் விரிவாக்கத்தால் அது கசிந்து விடும். இவ்வாறான கசிவைத் தடுக்க ஃபில்லர் மூடி தனாக மூடிக்கொண்ட பின் (அ) மாற்று தானியங்கியற்ற அமைப்பை பயன்படுத்துகையில் ஆரம்பகாலத்தில் எரிபொருளை சரியாக நிரப்ப முடியாதபோது அவ்வாறு நிரப்புவதை விட்டுவிடவும்.**

## (பை-பியூயல் இஞ்ஜின் மாடல்)

### சி.என்.ஜி.

சி.என்.ஜி. (கம்ப்ரெஸ்ட் நேசுரல் கேஸ்) என்பது பிரதானமாக மீத்தேனைக் கொண்டது. சி.என்.ஜி. சுத்தமான எரிபொருளாகக் கருதப்படுகிறது. இதன் குறைவான அடர்த்தியின் காரணமாக, இது 200 பார்கள் வரை அழுத்தப்படுவதால் வண்டியின் மேல்தள பொருட்கள் வைக்கும் திறனைக் கூட்டுகிறது

**⚠ *நிதானம்***

**சி.என்.ஜி. கசிவது அல்லது வெளியேறும் சப்தம் அல்லது சி.என்.ஜி. குழாய் வெளிப்புறம் சேதாரம் அறிகுறி தெரிந்தால் அல்லது விபத்து நடந்தால் பயந்துவிடாதீர்கள்.**

- **வாகனத்தை நிறுத்தி இஞ்ஜினை ஆஃப் செய்து, ஜன்னல்களைத் திறந்து எல்லாக் கதவுகளையும் திறந்து வைக்கவும்.**
- **தானியங்கி வால்வை மறக்காமல் மூடவும்.**
- **மேலும் உதவி தேவையெனில் அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியலுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.**

(டீசல் எஞ்ஜின் மாடலுக்காக)

51-க்கும் மேலான சிடேன் எண் (சிஎன்) கொண்ட, 50 ppm.க்கும் குறைவான கந்தகம் நிரம்பிய டீசல் எரிபொருளையே நீங்கள் பயன்படுத்த வேண்டும். EN590-உடன் ஒத்துப் போகக்கூடிய டீசல் எரிபொருளையே நீங்கள் பயன்படுத்த வேண்டுமென்று மாருதி சுசூகி நிறுவனம் பரிந்துரைக்கிறது. கப்பலுக்கான டீசல் பியூயல், சுடப்பட்ட எண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்த வேண்டாம்.

***அறிவிப்பு***

**தட்பவெப்ப நிலையின்போது பியூயல் விரிவடையும் பொருட்டு பியூயல் டேங்கில் காற்று போய்வரத் தேவையான அறை (இடம்) தரப்பட்டுள்ளது. ஃபில்லரின் மூடி தானாகவே மூடிக்கொண்ட பின்னர் அல்லது உள்ளிருக்கும் எண்ணெய் தளும்ப ஆரம்பிக்கும்போது நீங்கள் தொடர்ந்து பியூயல்பியூயல் நிரப்பிக் கொண்டிருந்தால், காற்று அறை முழுவதும் நிரம்பி விடும். இம்மாதிரி முழுவதும் பியூயல் நிரப்பி, அதிக வெயில் படும் இடத்தில் வாகனம் இருந்தால் பியூயல் விரிவடைந்து கசியும் நிலை ஏற்படலாம். இத்தகைய கசிவைத் தவிர்க்க வேண்டுமெனில், ஃபில்லரின் மூடி தானாகவே மூடிக் கொண்ட பின் அல்லது வேறு மாதிரியான தானியங்கி அமைப்பைப் பயன்படுத்துகையில் உள்ளிருக்கும் எண்ணெய் தளும்ப ஆரம்பிக்கும்போது பியூயல் நிரப்புவதை நிறுத்தவும்.**


***அறிவிப்பு***

**பியூயல் நிரப்புகையில் ஆல்கஹால் உள்ள பியூயல் கீழே சிந்திவிடாமல் பத்திரமாகப் பார்த்து கொள்ளவும். ஆல்கஹால் நிரம்பிய எரிபொருளால் புதுவாகன வாரண்டியில் அடங்காத பெயிண்ட் சேதாரமும் நேரிடலாம்.**

# வாகனம் ஓட்டுவதற்கு முன்பு

சாவிகள் ........ 2-1
கதவிற்கான பூட்டுகள் ........ 2-1
டெயில்கேட் ........ 2-1
ஜன்னல்கள் ........ 2-3
கண்ணாடிகள் ........ 2-3
சீட்டுகள் ........ 2-3
சீட் பெல்ட்டுகள் ........ 2-4
இன்ஸ்ட்ரூமெண்ட் க்ளஸ்டர் ........ 2-9
ஸ்பீடாமீட்டர் ........ 2-10
பியூயல் நிலைகாட்டி ........ 2-10
தகவல் காட்டும் திரை ........ 2-11
வார்னிங் மற்றும் இண்டிகேட்டர் லைட்டுகள் ........ 2-15
லைட்டிங் கண்ட்ரோல் லீவர் ........ 2-18
ஹெட்லைட் லெவலிங் ஸ்விட்ச் ........ 2-19
டர்ன் சிக்னல் கண்ட்ரோல் லீவர் ........ 2-19
ஹஸார்ட் வார்னிங் ஸ்விட்ச் ........ 2-20
வின்ட்ஷீல்டு வைப்பர் மற்றும் வாஷர் லிவர் ........ 2-20
ஹாரன் ........ 2-22
சி.என்.ஜி. சிலிண்டர் வார்னிங் லேபிள் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்) ........ 2-22
சி.என்.ஜி. வார்னிங் லேபிள் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்) ........ 2-22
சி.என்.ஜி. மெனுவல் ஷட்-ஆஃப் வால்வு (கருவி பொருத்தப்பட்டிருந்தால்) ........ 2-23

## சாவிகள்




51KM024

வாகனம் வாங்கும்போது ஒரே மாதிரியான இரண்டு சாவிகள் உங்களுக்குத் தரப்படும். உபரி சாவியைப் பத்திரமான இடத்தில் பாதுகாப்பாக வைக்கவும். ஒரு சாவியே வாகனத்திலுள்ள அனைத்துப் பூட்டுகளையும் திறந்து விடும்.


சாவியின் அடையாள எண்ணானது அத்துடன் தரப்பட்டுள்ள உலோகத் துண்டில் அல்லது சாவியின் மீதே அச்சிடப்பட்டிருக்கும். முடிந்தால் உலோகத் துண்டைத் தனியே பத்திரமாக எடுத்து வைக்கவும். சாவியைத் தொலைத்து விட்டால், இந்த எண்ணைப் பயன்படுத்தி புதிய சாவியைச் செய்து கொள்ளலாம். உங்களது எதிர்காலத் தேவைக்காக இந்த எண்ணைக் கீழே எழுதி வைக்கவும்.

| சாவி எண்: |
|---|
| |

## கதவிற்கான பூட்டுகள்

### பக்கக் கதவிற்கான பூட்டுகள்

#### ஓட்டுநரின் கதவு




76MH0A001


(1) பூட்டவும்
(2) திறக்கவும்
(3) முன்பக்கம்
(4) பின்பக்கம்

வாகனத்தின் வெளிப்பகுதியிலிருந்து ஓட்டுநரின் கதவைப் பூட்ட செய்ய வேண்டியவை:

- சாவியைப் பொருத்தி அதன் மேல்பக்கத்தை வாகனத்தின் முன்பக்கத்தை நோக்கித் திருப்பவும், அல்லது
- பூட்டின் பொத்தானைக் கீழே தள்ளி, இழுத்து கதவை மூடும்போது அதைக் கதவின் கைப்பிடியுடன் சேர்த்துப் பிடிக்கவும்.

சாவியைப் பொருத்தி அதை வண்டியின் பின்பக்கத்தை நோக்கித் திருப்பினால் வாகனத்தின் வெளிப்பகுதியிலிருந்து ஓட்டுநரின் கதவைத் திறக்க முடியும்.


வாகனத்தின் வெளிப்பகுதியிலிருந்து ஓட்டுநரின் கதவைப் பூட்ட, பூட்டின் பொத்தானைக் கீழே தள்ளி, இழுத்து கதவைத் திறக்கும்போது அதை கதவின் கைப்பிடியுடன் சேர்த்துப் பிடிக்கவும்.




54G005


(1) பூட்டவும்
(2) திறக்கவும்

## டெயில்கேட்




77PH025

பூட்டுக் கைப்பிடிகளை (1) இழுப்பதன் மூலம் டெயில்கேட்டைத் திறக்கலாம். மூடும்போது, பூட்டைக் கவனமாகப் பூட்டவும்.




77PM201


டெயில்கேட் செயினைப் பயன்படுத்தி அதனை ஒரு இடைப்பட்ட நிலையிலும் பூட்டலாம் (2).

**அறிவிப்பு**

பயன்பாட்டில் இல்லாதபோது டெயில்கேட் செயினை (2) பின்னுடன் சேர்த்துப் பூட்டவும் (3).

**⚠ எச்சரிக்கை**

- டெயில்கேட் திறந்த/இடைப்பட்ட நிலையில் இருக்கும்போது வாகனத்தை ஓட்டினால் டெயில்கேட் ஊசலாடி மற்ற வாகனங்களை இடிக்கும்; இதனால் காயம் அல்லது மரணமும் ஏற்படலாம்.
- திறந்த/இடைப்பட்ட நிலையில் இருக்கும் டெயில்கேட், பின்புற விளக்குகளைப் பார்க்க முடியாமல் மற்ற ஓட்டுநர்களைத் தடுக்கும்; இதனால் விபத்துக்கள் ஏற்படலாம். வாகனம் ஓட்ட ஆரம்பிக்கும் முன் டெயில்கேட் நன்கு மூடப்பட்டு, பூட்டப் பட்டிருக்கிறதா என்று உறுதி செய்து கொள்ளவும்.
- விபத்து நேரிடும் பட்சத்தில் உள்ளிருக்கும் லக்கேஜ் வெளியே தூக்கி எறியப்பட்டு விடாமல் இருக்க டெயில்கேட் நன்கு மூடப்பட்டு, பூட்டப் பட்டிருக்கிறதா என உறுதி செய்து கொள்ளவும்.
- டெயில்கேட் இடைப்பட்ட நிலையில் பூட்டப் பட்டுள்ளபோது அதில் நிற்கக் கூடாது, அதிக எடையை வைக்கவும் கூடாது.
- டெயில்கேட் முழுவதும் திறந்த நிலையில் இருந்தால் வாகனத்தின் பின்புற விளக்குக் கருவிகளான நிலை விளக்கு, திரும்பும் அறிகுறி இண்டிகேட்டர் மற்றும் நிறுத்தும் விளக்கு ஆகியவை பிறரின் பார்வையிலிருந்து மறைக்கப் பட்டு விடும்.





77PM202

**⚠ எச்சரிக்கை**

- டெயில்கேட் (1) முழுவதும் திறந்த நிலையில் இருக்கும்போது சரக்கு ஏற்றப்பட்டு இறக்கப் பட்டால், அது பற்றி மற்ற வாகன ஓட்டுநர்களை எச்சரிக்க எச்சரிக்கை முக்கோணம் (2) ஒன்று அவர்களுக்குத் தெரியும்படி சாலையில் அமைக்கப்பட வேண்டும்.

## ஜன்னல்கள்


### மனுவல் விண்டோ கண்ட்ரோல்




60G010

கதவு பேனலில் இருக்கும் கைப்பிடியைத் திருப்பி ஜன்னல்களைத் திறக்கலாம், மூடலாம்.

### பின்புற ஜன்னல்





77PH073

ஜன்னலைத் திறக்க வேண்டுமானால் பூட்டை (1) அழுத்தி, ஜன்னலைத் தள்ள வேண்டும்.

## கண்ணாடிகள்

### உட்புறம் உள்ள பின்புறம் பார்க்கும் கண்ணாடி

உட்புறமுள்ள பின்புறம் பார்க்கும் கண்ணாடியைக் கையால் அட்ஜஸ்ட் செய்து, அதன் மூலம் உங்களுக்குப் பின்னால் வரும் வண்டிகளைக் கண்ணாடியில் பார்க்கலாம்.





74LHT0235

### வெளிப்புறம் உள்ள பின்புறம் பார்க்கும் கண்ணாடி(கள்)

வெளிப்புறமுள்ள பின்புறம் பார்க்கும் கண்ணாடிகளை அட்ஜஸ்ட் செய்து அதன் மூலம் வாகனத்தின் பக்கவாட்டுக் காட்சிகளைக் கண்ணாடியில் பார்க்கலாம்.

**⚠ எச்சரிக்கை**

**கண்ணாடியில் பார்த்து மற்ற வாகனங்களின் அளவு அல்லது தூரத்தைக் கணிக்கும்போது மிகவும் கவனத்துடன் செயல்பட வேண்டும். இயற்கையான கண்ணாடியில் பார்ப்பதை விட வாகனங்களிலுள்ள குவிவாடி கண்ணாடியில் பார்க்கும்போது பொருட்கள் சிறியதாகவும் வெகு தூரத்தில் இருப்பது போலவும் தோன்றும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளவும்.**




64P0190

## சீட்டுகள்


### சீட் அட்ஜஸ்ட்மெண்ட் (ஓட்டுநரின் சீட்)

**⚠ எச்சரிக்கை**

**வாகனத்தை ஓட்டிக் கொண்டே ஓட்டுநரின் சீட்டை அட்ஜஸ்ட் செய்ய எப்போதும் முயற்சி செய்யாதீர்கள். சீட் திடீரென்று எதிர்பாராத விதமாக நகர்ந்தால், வாகனம் கட்டுப்பாட்டு இழந்து விடக்கூடும். வாகனத்தை ஓட்ட ஆரம்பிப்பதற்கு முன்னர் ஓட்டுநரின் சீட் சரியான முறையில் அட்ஜஸ்ட் செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்யவும்.**

**⚠ எச்சரிக்கை**

**பெல்ட் லூஸாக இருந்தால் உயிரைப் பாதுகாக்கும் அதன் பயன்பாடு வீணாகி விடும் என்பதால், சீட் பெல்ட் லூஸாக இருப்பதைத் தவிர்க்க சீட் பெல்ட்டுகளை இறுக்கமாக்கும் முன்பு சீட்டுகள் அட்ஜஸ்ட் செய்யப் பட்டுள்ளனவா என உறுதி செய்து கொள்ளவும்.**



77PH087


**சீட் பொஸிஷன் அட்ஜஸ்ட்மெண்ட் லீவர் (1)**
லீவரை மேல் நோக்கி இழுத்து சீட்டைச் சரித்துக் கொள்ளவும்.

அட்ஜஸ்ட் செய்தபின் இணைப்பு சரியாக இருக்கிறதா என்று உறுதி செய்ய சீட்டை முன்பும் பின்புமாக நகர்த்திப் பார்க்கவும்.

**⚠ நிதானம்**

**சீட்டை அட்ஜஸ்ட் செய்யும்போது, சீட்டின் இடுக்கில் கைகள் சிக்கிக் கொள்ளாமலும், அடிபடாமலும் இருக்கக் கவனத்துடன் செயல்படவும்.**

## சீட் பெல்ட்டுகள்




65D231S

**⚠ எச்சரிக்கை**

**பயணத்தின்போது உங்களது சீட் பெல்ட்டை எப்போதும் அணிந்திருக்கவும்.**

**⚠ எச்சரிக்கை**

**உட்காரும் பொஸிஷனில் காற்றுப் பை இருந்தாலும் இல்லாவிட்டலும், ஓட்டுநரும் பயணிகளும் எப்போதும் சீட் பெல்ட்டுகளை அணிந்திருக்க வேண்டும்; அப்போதுதான், விபத்து நேரிடும் தருணங்களில் தீவிரமான காயமடையும் அல்லது மரணமடையும் அபாயத்தை முடிந்தவரை தவிர்க்க முடியும்.**




65D606


**⚠ எச்சரிக்கை**

- **சரக்கு வைக்கும் இடத்தில் அமர்ந்து பயணம் செய்ய யாரையும் எப்போதும் அனுமதிக்காதீர்கள். சீட்டில் அமராமல், சீட் பெல்ட் அணியாமல் வாகனத்தில் பயணிப்பவர்கள் விபத்தின்போது காயமுறும் வாய்ப்பு மிக அதிகமாகும்.**
- **எப்போதும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது போல்தான் சீட் பெல்ட்டுகளை அட்ஜஸ்ட் செய்து கொள்ள வேண்டும்:**
  - **பெல்ட்டின் கீழ்ப்பகுதியை அடிவயிற்றின் குறுக்கே அணிந்து கொள்ள வேண்டுமே தவிர இடுப்பு குறுக்கே அல்ல.**
  - **தோள்பட்டை ஸ்டிராப்புகளைத் தோளுக்கு வெளியே அணிந்து கொள்ள வேண்டுமே தவிர, கைகளுக்கு அடியில் அல்ல.**
  - **தோள்பட்டை ஸ்டிராப்புகள் உங்கள் முகம் மற்றும் கழுத்தை விட்டுச் சற்று தூரம் தள்ளியே இருக்க வேண்டும், அதே வேளையில் அவை தோள்பட்டையை விட்டுக் கீழிறங்கி விடவும் கூடாது.**

(தொடர்ச்சி..)




65D201




65D199

**⚠ எச்சரிக்கை**

(தொடர்ச்சி)

- சீட் பெல்ட்டுகள் பல பாதுகாப்பு அம்சங்களைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதால் அவற்றை இறுக்கமாக அட்ஜஸ்ட் செய்து, ஸ்டிராப்புகள் முறுக்குடன் இல்லாதவாறு அணிந்து கொள்ள வேண்டும். இறுக்கமாக இருக்கும் சீட் பெல்ட்டை விட லூஸாக இருக்கும் பெல்ட்டானது குறைந்த அளவு பாதுகாப்பையே தரும்.
- சீட் பெல்ட்டின் ஒவ்வொரு பக்கிள்களும் அவற்றிற்கான சரியான பக்கிள் துவாரங்களில் செருகப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(தொடர்ச்சி..)

**⚠ எச்சரிக்கை**

(தொடர்ச்சி)

- கர்ப்பவதிகளும் சீட் பெல்ட்டைக் கட்டாயம் அணிந்து கொள்ள வேண்டும்; ஆனால் அவர்கள் பயணம் செய்யும்போது வாகனத்தை எவ்வாறு செலுத்துவது என்பது குறித்துத் மருத்துவ ஆலோசகர் தனிப்பட்ட பரிந்துரைகளைச் செய்வது அவர்களுக்கு உகந்ததாக இருக்கும். பெல்ட்டின் கீழ்ப்பகுதியானது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு முடிந்தவரை அடிவயிற்றின் கீழ் தொடுமாறு அணியப்பட வேண்டும்.
- பாக்கெட்டுகளில் அல்லது ஆடைகளில் உடையக் கூடிய பொருட்கள் வைத்திருந்தால் அவற்றின் மிது படும்படியாக சீட் பெல்ட்டை அணிந்து கொள்ளாதீர்கள். விபத்து நேரிடும் பட்சத்தில் கண்ணாடி, பேனா போன்ற பொருட்கள் சீட் பெல்ட்டுக்கடியில் இருந்தால் காயங்களை உண்டாக்கி விடும்.

(தொடர்ச்சி..)

**⚠ எச்சரிக்கை**

(தொடர்ச்சி)

- ஒன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு ஒரே ஒரு சீட் பெல்ட்டை அணிவிக்காதீர்கள்; மடியில் அமர வைக்கப்பட்டிருக்கும் கைக்குழந்தை அல்லது குழந்தைக்கும் சேர்த்து உங்களது சீட் பெல்ட்டை அணிவிக்காதீர்கள். அவ்வாறு அணிவித்தீர்களானால், விபத்து நேரிடும் பட்சத்தில் தீவிர காயம் ஏற்படும் அபாயம் இருக்கிறது.
- அடிக்கடி பயன்படுத்தப்படும் சீட் பெல்ட்களின் இணைப்புக்களை அவை சேதமடைந்துள்ளனவா என்று அவ்வப்போது சோதித்துப் பார்க்கவும். இணைப்புக்கள் சரியில்லாமல் பெல்ட்டுகள் தேய்மானம் அடைந்திருந்தால் அல்லது சேதமுற்றிருந்தால் அவற்றை உடனடியாக மாற்றவும். இணைப்புக்கள் சேதமுற்றிருப்பது போல் தெரியாவிட்டலும் தீவிர பாதிப்பிற்குப் பின் சீட் பெல்ட்டுகளை முற்றிலுமாக மாற்ற வேண்டியது மிக அவசியமான ஒன்றாகும்.
- சரியாக, பாதுகாப்பாக வைத்துக் கொள்ள முடியுமென்று தோன்றினாலொழிய குழந்தைகள் மற்றும் கைக்குழந்தைகளை வாகனங்களில் ஏற்றிக் கொண்டு பயணிக்கக் கூடாது.
- தோள்பட்டையில் படும் பெல்ட் கழுத்தில் அல்லது முகத்தில் எரிச்சலை ஏற்படுத்தினால் குழந்தைகளை வாகனத்தின் மையப்பகுதிக்கு அருகில் இருக்குமாறு இடமாற்றம் செய்யவும்.
- பாலிஷ், எண்ணெய், வேதிப் பொருட்கள் மற்றும் பேட்டரி அமிலத்தால் சீட் பெல்ட்டுகள் கெட்டுப் போகாதவாறு பார்த்துக் கொள்ளவும். இதமான சோப்பு மற்றும் நீரால் வாகனத்தைப் பாதுகாப்பாகச் சுத்தம் செய்து கொள்ளவும்.

(தொடர்ச்சி..)

**⚠ எச்சரிக்கை**

(தொடர்ச்சி)


- **நாணயம், க்ளிப்புகள் போன்ற பொருட்களை சீட் பெல்ட் பக்கிள்களுக்குள் செருகி வைக்காதீர்கள்; இப்பாகங்களில் திரவம் ஏதும் படாதவாறு பார்த்துக் கொள்ளவும். சீட் பெல்ட்டின் பக்கிளில் வெளிப் பொருள் ஏதும் சிக்கிக் கொண்டால், பெல்ட் சரியாக வேலை செய்யாமல் போய்விடலாம்.**

## மடி-தோள்பட்டை பெல்ட்


### எமர்ஜென்சி லாக்கிங் ரிட்ராக்டர் (ஈ.எல்.ஆர்)

சீட் பெல்ட்டில் ஈ.எல்.ஆர் எனப்படும் எமர்ஜென்சி லாக்கிங் ரிட்ராக்டர் உள்ளது; திடீரென்று வாகனம் நிறுத்தப்பட்டால் அல்லது மோதலுக்கு உள்ளானால் சீட் பெல்ட் தானாக லாக் ஆகும்படி இது வடிவமைக்கப்பட்டுள்ளது உடம்பின் குறுக்கே இப்பெட்டைத் துரிதமாக இழுக்கும் போதும் பெல்ட் தானாகவே லாக் ஆகி விடும். அவ்வாறு நிகழ்ந்தால், பெல்ட் தானாகவே பின்னோக்கி வந்து அவிழும் வரை காத்திருந்து, பெல்ட்டை உங்களது உடம்பின் குறுக்கே மெதுவாக இழுக்கவும்.

### பாதுகாப்பு தொடர்பான நினைவூட்டல்கள்





60A038





60A040

மோதல் ஏற்படும்போது பெல்ட்டுக்கு அடியில் நாம் சரிந்து விடும் அபாயத்தைக் குறைக்க, பெல்ட்டின் மடிப்பகுதி பொஸிஷன் முடிந்த வரை அடிவயிற்றுக்குக் கீழிருக்க வேண்டும்; அதை தோள்பட்டைப் பகுதி பெல்ட்டுடன் சேர்த்து, பக்கிளுக்கு மேல் பெல்ட் இருக்குமாறு நன்றாக இழுத்து விடவும். தோள்பட்டையிலிருந்து குறுக்காகப் போகும் பெல்ட்டு நீளமானது அதைப் போட்டுள்ளவர் தடையின்றி இயங்குவற்கு ஏற்ப தன்னைத் தானே அட்ஜஸ்ட் செய்து கொள்ளக் கூடியது.




60A036

சீட் பெல்ட்டை இறுக்கமாக்க வேண்டுமெனில், நேராக அமர்ந்து சீட்டின் பின்பகுதி வரை சென்று விடவும்; அதன் பின் சீட் பெல்ட்டின் இணைப்பை உடம்பின் குறுக்கே இழுத்து, அதை பக்கிளுக்குள் செல்லுமாறு ஒரு க்ளிக் சப்தம் வரும் வரை நேராக அழுத்த வேண்டும்.





60A039

சீட் பெல்ட்டை அவிழ்க்க பக்கிலில் உள்ள பட்டனை அழுத்தி, பெல்ட்டை மெதுவாக விட வேண்டும். அதேசமயம் ஒரு கையை பெல்ட் அல்லது/மற்றும் லேட்ச் பிளேட்டுடன் வைத்திருக்க வேண்டும். பெல்ட்டின் மீதோ அல்லது/மற்றும் லேட்ச் பிளேட்டில் ஏதாவது ஒரு கை பட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

### ஓட்டுநரின் சீட் பெல்ட் வார்னிங் லைட் / முன்பக்கப் பயணி சீட் பெல்ட் வார்னிங் லைட் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)

**உதாரணம்**




77PM02017

(1) ஓட்டுநரின் சீட் பெல்ட் ரிமைண்டர் லைட்/ முன்பக்கப் பயணி ரிமைனடர் சீட்பெல்ட்.

ஓட்டுநரின் மற்றும் / முன்பக்கப் பயணி தங்கள் சீட் பெல்டை அணிந்திருக்கவில்லை எனில், சீட் பெல்ட் ரிமைண்டர் லைட் ஒளிர்ந்து அல்லது மினுங்கி மற்றும் பஸ்ஸர் ஒலி எழுந்து, ஓட்டுநரின் மற்றும்/ பயணிக்கு சீட் பெல்ட் அணிய நினைவூட்டும். மேலும் விவரங்களுக்கு, கீழே உள்ள விளக்கத்தைக் காணவும்.

**⚠ எச்சரிக்கை**

**டிரைவரும் பயணியும் எப்போதும் சீட் பெல்ட் அணிந்திருக்க வேண்டியது முற்றிலும் அவசியமானது. விபத்து நடக்கும்பட்சத்தில் சீட் பெல்ட் அணியாதவர்களுக்குக் காயம் படுவதற்கான வாய்ப்பு மிகவும் அதிகம். இக்னிஷன் சாவியை அதற்கான இடத்தில் பொருத்தி இஞ்சினை இயங்கச்செய்வதற்கு முன்பே சீட் பெல்ட் அணிவதைப் பழக்கமாக்கிக்கொள்ளுங்கள்.**

*குறிப்பு:*
*ஓட்டுநரின் சீட் பெல்ட் ரிமைண்டர் லைட் / முன்பக்கப் பயணி சீட் பெல்ட் ரிமைண்டர் லைட் ஓட்டுநரின் மற்றும் முன் பக்கப் பயணி இருவருக்குமானது.*

### ஓட்டுநரின் சீட் பெல்ட் ரிமைண்டர்

இக்னிஷன் ஸ்விட்ச் "ON" (ஆன்) ஆகி இருக்கும் போது அல்லது இக்னிஷன் மோட் "ON" (ஆன்)னில் இருக்கும் போது, ஓட்டுநரின் சீட் பெல்ட் அணியப்படாமல் இருந்தால், ரிமைண்டர் கீழ்கண்ட முறையில் செயல்படும்.


1) டிரைவரின் சீட் பெல்ட் ரிமைண்டர் லைட் ஒளிரும்
2) வாகன வேகம் மணிக்கு 15 km/h அடைந்த பிறகு, ஓட்டுநரின் சீட் பெல்ட் ரிமைண்டர் லைட் ஒளிர்ந்து, 95 நொடிகளுக்கு பஸ்ஸர் ஒலி கேட்கும்.
3) ஓட்டுநரின் சீட் பெல்ட் அணியப்படும் வரை ரிமைண்டர் லைட் ஒளிரும்.

ஓட்டுநரின் தனது சீட் பெல்டை அணிந்து கொண்டு அதன் பிறகு, சீட் பெல்டை நீக்கினால், வாகன வேகத்திற்கு ஏற்ப, ரிமைண்டர் அமைப்பு படி (1) அல்லது படி (2) ல் இயங்கும். வாகன வேகம் மணிக்கு 15 km/h குறைவாக இருந்தால் படி (1)ல் இருந்து ரிமைண்டர் துவங்கும். வாகன வேகம் மணிக்கு 16 km/h மேல் இருந்தால் படி (2) ல் இருந்து துவங்கும்.
சீட் பெல்ட் அணியப்பட்டால் அல்லது இக்னிஷன் ஆஃப் செய்யப்பட்டால் அல்லது இக்னிஷன் மோட் OFF (ஆஃப்) செய்யப்பட்டால், ரிமைண்டர் தானாக நின்றுவிடும்.

### முன்பக்கப் பயணி சீட் பெல்ட் ரிமைண்டர்

முன்பக்கப் பயணி இடத்தில் ஒருவர் அமர்ந்திருந்து, இக்னிஷன் ஸ்விட்ச் "ON" (ஆன்) செய்யப்படும் போது அல்லது இன்கேஷன் மோட் "ON" (ஆன்)னில் இருக்கும் போது, முன்பக்கப் பயணி பெல்ட் அணியப்படாமல் இருந்தால், முன்பக்கப் பயணி சீட் பெல்ட் ரிமைண்டர் இயக்கப்படும்.

**உதாரணம்**




69RH203

**(2)** முன்பக்கப் பயணி சீட் பெல்டின் ரிமைண்டரின் சென்சார்.

சீட்பெல்ட் ரிமைண்டர் சென்சார் (2) முன்பயணி சீட்டில் ஒருவர் அமர்ந்திருக்கிறாரா என கண்டறியும். முன்பக்கப் பயணி சீட்பெல்ட் ரிமைண்டர் சீட் குஷனில் இருக்கும். முன்பக்கப் பயணி சீட் பெல்ட் ரிமைண்டர், டிரைவ்பர் சீட் பெல்ட் ரிமைண்டர் போலவே செயல்படும்.

*அறிவிப்பு*

- **முன்பக்கப் பயணி சீட்பெல்ட் ரிமைண்டர் சீட் குஷனில் அமைந்துள்ளது. சீட் குஷன் மீது கணமான அல்லது கூரான பொருட்கள் வைக்கப்பட்டால் அல்லது சீட்டில் மாற்றம் செய்யப்பட்டால் அல்லது அகற்றப்பட்டால், சென்சார் சரியாக வேலை செய்யாது மல்லது பழுதாகிவிடலாம். சீட் குஷனில் கனமான அல்லது கூரான பொருட்களை வைக்க வேண்டாம். முன்பக்க சீட்டை மாற்ற, திருத்த அல்லது அகற்ற வேண்டாம்.**
- **சீட் கவரின் தன்மைக்கேற்ப சென்சார் செயல்பாடு பாதிக்கப்படலாம். இந்த வாகனத்திற்காக மாருதி சுசுகியின் பிரத்யேக சீட் கவரை மட்டும் தான் பயன்படுத்த வேண்டும் என மாருதி சுசுகி தெரிவிக்கிறது.**
- **பயணிகள் சீட் குஷன் மீது வாசனை திரவியம், குளிர்பானம், பழச்சாறு போன்ற திரவத்தை சிந்தினால், சீட் குஷனில் அமைந்திருக்கும் சீட்பெல்ட் ரிமைண்டர் சென்சார் சேதமாகலாம். எனவே, உடனடியாக மென்மையான துணியால் துடைத்து சுத்தமாக்கவும்.**

(தொடர்ச்சி..)

*அறிவிப்பு*

(தொடர்ச்சி)


- **முன்பக்கப் பயணி இருக்கையில் அமர்ந்திருக்கும் போது, சீட்பெல்ட் ரிமைண்டர் அமைப்பு சரியாக செயல்படுவதற்கு, அமர்ந்திருப்பவர், நேராக, சீட் பேக்ரெஸ்ட்டில் சாய்ந்த படி, சீட் குஷன் மையத்தில் அமர்ந்திருப்பது அவசியம். அமர்ந்திருப்பவர் சரியாக அமரவில்லை எனில் (காலை நீட்டியபடி, பக்கவாட்டில், முன்பக்கம் அல்லது பக்கவாட்டில் அமர்வது) அமைப்பின் செயல்பாட்டை பாதிக்கும். அதனால் அமர்ந்திருப்பவரை உணர முடியாது.**

*குறிப்பு:*

- *பயணிகள் சீட்டில் ஒரு பொருளை வைத்தால், அதன் எடை சென்சாரால் உணரப்பட்டு சீட் பெல்ட் ரிமைண்டர் லைட் ஒளிர்ந்து, உள் பஸ்ஸர் ஒலிக்கலாம்.*
- *குழந்தை அல்லது சிறிய உடலமைப்பு கொண்ட நபர் முன்பக்கப் பயணி சீட்டில் அமர்ந்தால் அல்லது அதில் குஷன் வைத்தால், எடை சென்சாரால் உணரப்பட வாய்ப்பில்லை. உள் பஸ்ஸர் ஒலிக்காமல் போகலாம்.*

*குறிப்பு:*
*மாருதி சுசுகியின் அசல் “சீட் கவர்” வாங்குமாறு மாருதி சுசுகி பரிந்துரைக்கிறது.*

## சீட் பெல்ட் ஆய்வு




65D209S


சீட் பெல்ட்டுகளை அவ்வப்போது சீரான கால இடைவெளியில் ஆய்வு செய்து, சரியான முறையில் சேதமின்றி வேலை செய்கின்றனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். இணைப்புக்கள் பக்கிள்கள், லட்ச் பிளேட்ஸ், ரிட்ராக்டர்கள், ஆங்கரேஜுகள் மற்றும் கைடு லூப்புகள் சரியாக உள்ளனவா என்று சோதித்துப் பார்க்க வேண்டும். சரியாக வேலை செய்யாத, சேதமுற்றிருக்கும் சீட் பெல்ட்டுகளை உடனடியாக மாற்றவும்.

**⚠ எச்சரிக்கை**

**எத்தகைய மோதலாக இருந்தாலும் ஒவ்வொரு முறையும் சீட் பெல்ட் இணைப்புக்களைச் சோதனை செய்வதில் கவனமாக இருங்கள். ஒரு மோதலின்போது (சிறிய வகை மோதலாக இருந்தாலொழிய) இடம் பெற்றிருந்த சீட் பெல்ட் இணைப்புக்களை மோசமான சேதாரமாக இல்லாவிட்டாலும் மாற்றியமைக்க வேண்டும். ஒரு மோதலின்போது மோசமான சேதாரமாக இல்லாவிட்டாலும் அவை சரியாகச் செயல்படாவிட்டாலும் சீட் பெல்ட்டுக்களை முழுவதுமாக மாற்றியமைத்தாக வேண்டும்.**

## இன்ஸ்ட்ருமெண்ட் க்ளஸ்டர்

1. ஸ்பீடோமீட்டர்
2. தகவல்காட்டும்திரை
3. டிரிப் மீட்டர் செலக்டர் பட்டன்
4. வார்னிங் மற்றும் இண்டிகேட்டர் லைட்கள்




77PM02001

## ஸ்பீடோமீட்டர்

வாகனத்தின் வேகத்தை ஸ்பீடோமீட்டர்க் குறிக்கிறது.


## ஸ்பீட் அலர்ட் சிஸ்டம்

ஓட்டுநரின் மிகை வேகத்தில் செல்லும் போது, ஸ்பீட் அலர்ட் சிஸ்டம் எச்சரிக்கை ஒலி எழுப்புகிறது. வாகன வேகம் மணிக்கு 80 km/h அதிகமாகும் போது, அடிப்படை எச்சரிக்கையாக, ஒவ்வொரு நிமிடத்திற்கும் இரண்டு பீப் ஒலி கேட்கும். வாகன வேகம் மணிக்கு 120 km/h அதிகமாகும்போது, தொடர் பீப் ஒலியுடன் இரண்டாம் கட்ட எச்சரிக்கை ஒலிக்கும். வாகன வேகம் மணிக்கு 118 km/h குறைந்தால், அடிப்படை எச்சரிக்கை தொடரும். வாகன வேகம் மணிக்கு 78 km/h குறைந்தால் எச்சரிக்கை நின்றுவிடும். பஸ்ஸர் வாகனத்தில் எந்தச் செயல் குறைபாட்டையும் உணர்த்தாது.

## பியூயல் நிலைகாட்டி

**(பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)**


**பெட்ரோல்**




77PM07020


**(பை-பியூயல் எஞ்ஜின் மாடல்)**

**சி.என்.ஜி.**




77PM07019

**(டீசல் என்ஜின் மாடலுக்காக)**




77PH006

இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) ஆகி இருக்கையில் நிலைகாட்டியானது பியூயல் தொட்டியில் உள்ள எரிபொருளின் அளவைத் துல்லியமாகக் காட்டும். “F” என்றால் பியூயல் தொட்டி முழுக்க நிரம்பியுள்ளது என்றும் “E” என்றால் அது காலியாக இருக்கிறது என்றும் அர்த்தம்


பியூயல் மீட்டர் “E” என்று மட்டும் காட்டினால் முடிந்தவரை உடனடியாக நீங்கள் எரிபொருளை நிரப்பியாக வேண்டும்.

*குறிப்பு:*
*இப்பிரிவில் விளக்கு சிமிட்டினால் (விட்டு விட்டு எரிந்தால்) பியூயல் கிட்டத்தட்ட காலியாகி விட்டது என்று அர்த்தம்.*

(1) என்ற மதிப்பீடானது பியூயல் நிரப்பும் தொட்டி உங்களது வாகனத்தின் வலதுபுறம் அமைந்துள்ளதைக் குறிக்கிறது.

## தகவல் காட்டும் திரை


**(பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)**




77PM07029

* பை - எஞ்ஜின் மாடலுக்கு மட்டும் பொருந்தும்

**(டீசல் எஞ்ஜின் மாடலுக்காக)**




77PH109

(1) டிரிப் மீட்டர் செலக்டர் பட்டன்
(2) தகவல்காட்டும்திரை

இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) ஆகி இருக்கையில், தகவல் காட்டும் திரை பின்வரும் விவரங்களை தருகிறது.

**திரை (A)**
பியூயல் நிலைகாட்டி

**திரை (B)**
ஓடோமீட்டர் / டிரிப் மீட்டர் / கடிகாரம் / வெளிச்சம் கட்டுப்பாடு

**திரை (C)**
பியூயல் மோட் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)

### பியூயல் நிலைகாட்டி

இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) ஆகி இருக்கையில் திரை (A) பியூயல் நிலைகாட்டியைக் காட்டுகிறது.


இப்பிரிவில் ‘பியூயல் நிலைகாட்டி’ என்ற உப பிரிவின் கீழுள்ளவற்றைப் பார்க்கவும்.

### ஓடோமீட்டர் / டிரிப் மீட்டர் / கடிகாரம் / வெளிச்சம் கட்டுப்பாடு

இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) ஆகி இருக்கையில், திரை (B) பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றைக் காட்டும். ஓடோமீட்டர், டிரிப் மீட்டர் A, டிரிப் மீட்டர் B அல்லது கடிகாரம்.


திரை (B)-ஐப் பார்க்க வேண்டுமென்றால், டிரிப் மீட்டர் செலக்டர் பட்டன் (1)-ஐ வேகமாக அழுத்தவும்.

**(பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)**




77PH007

**(டீசல் என்ஜின் மாடலுக்காக)**




77PH007

(a) ஓடோமீட்டர்
(b) டிரிப் மீட்டர் A
(c) டிரிப் மீட்டர் B
(d) கடிகாரம்
(e) வெளிச்சக் கட்டுப்பாடு*

* பொஸிஷன் விளக்குகள் மற்றும்/அல்லது ஹெட்லைட்டுகள் 'ஆன்' செய்யப்படும்போது திரையில் 'வெளிச்சக் கட்டுப்பாடு' தோன்றும்.

**⚠ எச்சரிக்கை**

**வாகனம் செலுத்தும்போது திரையை அட்ஜஸ்ட் செய்ய முயற்சித்தால், ஒருவேளை வாகனக் கட்டுப்பாட்டை நீங்கள் இழக்கக்கூடும்.**

**வாகனம் செலுத்தும்போது திரையை அட்ஜஸ்ட் செய்யும் முயற்சியில் ஈடுபடாதீர்கள்.**

*குறிப்பு:*
*பட்டனை அழுத்தி அதிலிருந்து உங்கள் கையை நீங்கள் எடுக்கும்போது குறிப்புக்கள் மாறிவிடும்.*

**ஓடோமீட்டர்**

வாகனம் சென்றுள்ள மொத்த தூரம் வரையிலான தகவல்களை ஓடோமீட்டர் பதிவு செய்கிறது.

*அறிவிப்பு*

**ஓடோமீட்டர் காட்டும் எண்ணைப் பொறுத்து வாகனப் பராமரிப்புப் பணிகளைத் திட்டமிட்டு, தேவைப்படும் சர்வீஸ்களைச் செய்து கொள்ள வேண்டும்.**
**மைலேஜின் அடிப்படியில் தேவையான சர்வீஸ்களை அவ்வப்போது செய்யாமல் இருந்தால் குறிப்பிட்ட சில பாகங்கள் தேய்ந்து அல்லது சேதமடைந்து விடும்.**

### டிரிப் மீட்டர்

குறைந்த தூரமுடைய டிரிப்புகளுக்கு எத்தனை தூரம் ஆகியது, பியூயல் நிரப்பப்படும் வரை வாகனம் எத்தனை தூரம் ஓடியுள்ளது என்பவை டிரிப் மீட்டர் மூலம் தெரிந்து விடும்.
டிரிப் மீட்டர் ‘A’ அல்லது ‘B’ இரண்டையும் தனித்தனியே பயன்படுத்திக் கொள்ளலாம்.

டிரிப் மீட்டரில் ஜீரோவைத் தேர்ந்தெடுத்து டிரிப் மீட்டர் செலக்டர் பட்டனைச் (1) சற்று நேரம் அழுத்திப் பிடித்தால் திரையில் டிரிப் மீட்டரின் அளவுகள் தெரியும்.

*குறிப்பு:*
*டிரிப் மீட்டரில் காட்டப்படும் அதிகபட்ச அளவு 9999.9 ஆகும் அதிகபட்ச அளவை உங்களது வாகனம் தாண்டி விட்டால், டிரிப் மிட்டர் ரீடிங் மறுபடியும் 0.0 என்றுதான் காட்டும்.*

**கடிகாரம்**

திரையில் எப்போதும் நேரம் காட்டப்படும்.

நேரம் காட்டுவதை மாற்ற வேண்டுமென்றால்:

1) நிமிடத்திற்கான இண்டிகேஷன் சிமிட்டும் வரை டிரிப் மீட்டர் செலக்டர் பட்டனை (1) அழுத்திப் பிடிக்கவும்.
2) நிமிடத்திற்கான இண்டிகேஷனை மாற்றுவதற்கு டிரிப் மீட்டர் செலக்டர் பட்டனை (1) மீண்டும் மீண்டும் அழுத்தினால் நிமிட இண்டிகேஷன் சிமிட்ட ஆரம்பிக்கும். நிமிடத்திற்கான இண்டிகேஷன் துரிதமாக மாற்றுவதற்கு டிரிப் மீட்டர் செலக்டர் பட்டனை (1) அழுத்திப் பிடிக்கவும். நிமிடத்திற்கான இண்டிகேஷனை சரியான நிலையில் வைப்பதற்கு மணிநேரத்திற்கான இண்டிகேஷன் சிமிட்ட ஆரம்பித்து ஐந்து நொடி வரை காத்திருக்கவும்.
3) மணிநேர இண்டிகேஷனை மாற்ற, டிரிப் மீட்டர் செலக்டர் பட்டனை (1) நிமிட இண்டிகேஷன் சிமிட்ட ஆரம்பிக்கும் வரை அழுத்திப்பிடிக்கவும். ஐந்து நொடிகள் வரை காத்திருந்தால் மணிநேர இண்டிகேஷன் சிமிட்டத் தொடங்கும். மணிநேர இண்டிகேஷனை மாற்றுவதற்கு டிரிப் மீட்டர் செலக்டர் பட்டனை (1) துரிதமாக அழுத்திப் பிடிக்கவும். மணிநேர இண்டிகேஷனை செட் செய்வதற்கு 5 நொடிகள் வரை காத்திருக்கவும்.

**⚠ எச்சரிக்கை**

**வாகனம் செலுத்தும்போது திரையை அட்ஜஸ்ட் செய்ய முயற்சித்தால், ஒருவேளை வாகனக் கட்டுப்பாட்டை நீங்கள் இழக்கக்கூடும்.**

**வாகனம் செலுத்தும்போது திரையை அட்ஜஸ்ட் செய்யும் முயற்சியில் ஈடுபடாதீர்கள்.**

*குறிப்பு:*
*எதிர்மறை (–) டெர்மினலை பேட்டரியுடன் மீண்டும் இணைக்கும்போது கடிகாரத்திற்கான இண்டிகேஷனும் மீண்டும் செட் செய்யப்படும். இண்டிகேஷனை உங்களது தேவைக்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்ளவும்.*

### வெளிச்சக் கட்டுப்பாடு

பொஸிஷன் லைட்டுகள் மற்றும்/அல்லது ஹெட்லைட்டுகள் “ON” (ஆன்) நிலையில் இருக்கும்போதுதான் உங்களால் மீட்டரின் ஒளிரும் வேகத்தைக் கண்ட்ரோல் செய்ய முடியும்.

டிரிப் மீட்டர் செலக்டர் பட்டனை (1) அழுத்திப் பிடித்து இன்ஸ்ட்ரூமெண்ட் பேனல் விளக்குகளின் வெளிச்சத்தை மாற்றலாம்.

**⚠ எச்சரிக்கை**


**வாகனம் செலுத்தும்போது திரையை அட்ஜஸ்ட் செய்ய முயற்சித்தால், ஒருவேளை வாகனக் கட்டுப்பாட்டை நீங்கள் இழக்கக்கூடும்.**

**வாகனம் செலுத்தும்போது திரையை அட்ஜஸ்ட் செய்யும் முயற்சியில் ஈடுபடாதீர்கள்.**

*குறிப்பு:*
- *வெளிச்சத்தை கண்ட்ரோல் செய்யும் திரையை இயக்கிய 10 நொடிகளுக்குள் டிரிப் மீட்டர் செலக்டர் பட்டனை அழுத்தாவிட்டால், அத்திரை தானாகவே உடனடியாக மறைந்து போய்விடும்.*
- *பேட்டரியுடன் மீண்டும் இணைக்கப்படும்போது இன்ஸ்ட்ரூமெண்ட் பேனல் லைட்டுகளின் வெளிச்சம் மீண்டும் செட் செய்யப்படுகிறது. உங்களது தேவைக்குப் பொறுத்தவாறு வெளிச்சத்தை அட்ஜஸ்ட் செய்து கொள்ளவும்.*

### பியூயல் மோட் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)


வாகனத்தில் பெட்ரோல், ஆட்டோ மற்றும் போர்ஸ்ட் சி.என்.ஜி. மாடல்கள் உள்ளன. ஸ்டீயரிங் வீலுக்கு வலதுபுறம் டாஷ்போர்டில் உள்ள (1) எனும் ஸ்விட்சை அழுத்தி இதை நாம் செலக்ட் செய்யலாம்.



77PM02005

### பெட்ரோல் முறை

உதாரணம்




77PM02002

இந்த மாடலில் வாகனம் பெட்ரோலில் ஓட ஆரம்பித்து பெட்ரோலிலேயே இயங்குகிறது. இதில் பெட்ரோல் இண்டிகேட்டர் தொடர்ந்து வேலை செய்ய, சி.என்.ஜி. இண்டிகேட்டர் 'ஆஃப்' என்ற நிலையில் இருக்கும்.

### ஆட்டோ முறை

உதாரணம்




77PM02003


இந்த மாடலில் எஞ்ஜின் பெட்ரோலில் ஓட ஆரம்பித்து ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள வார்மிங்-அப் நிலையை அடைந்ததும் தானாகவே தானியங்கி மாடலுக்கு செல்லும். இக்னிஷன் ஸ்விட்ச் 'ஆன்' ஆக இருக்க, வாகனம் 'ஆட்டோ மாடலில்' ஆரம்பிக்கும்; சி.என்.ஜி. இண்டிகேட்டர் டிஸ்ப்ளேயில் ஒளிர, பெட்ரோல் இண்டிகேட்டரும் தெரிகிறது. சி.என்.ஜி. மாடலுக்கு மாறியதும் சி.என்.ஜி.-யை காட்டும் இண்டிகேட்டர் ஒளிர, பெட்ரோல் இண்டிகேட்டர் தானாகவே 'ஆப்' ஆகிவிடும்.

*குறிப்பு:*

- *வண்டியை 'ஆட்டோ மாடல்' (A) 'பெட்ரோல் மாடலில்' ஸ்டார்ட் செய்து எஞ்ஜின் ஆயுளை நீடியுங்கள் என பரிந்துரைக்கப்படுகிறது.*
- *இயல்பான/எஞ்ஜின் வெப்பநிலை $0^0C$-க்கும் குறைவாக இருக்கும்போது வாகனம் சி.என்.ஜி. என்ற எரிபொருளுக்கு மாறுவது நடவாதது. அவ்வாறு நிகழ்ந்தால், 'பெட்ரோல் மாடலில்' எஞ்ஜினை சூடாகும் வரை இயக்கி பின்னர் எஞ்ஜினை மீண்டும் ஸ்டார்ட் செய்து சி.என்.ஜி. மாடலுக்கு மாறவும். வண்டியை 'ஆட்டோ மாடலில்' ஸ்டார்ட் செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.*

### ஃபோர்ஸ்ட் சி.என்.ஜி. மாடல்

உதாரணம்




77PM02004

இது அவசரநிலைக்கால மாடல்; வண்டியில் பெட்ரோல் தீரும்போது இந்நிலையைப் பயன் படுத்தலாம். இதில் வண்டி சி.என்.ஜி. மாடலில் ஸ்டார்ட் ஆகி அதிலேயே ஓடும். இக்னிஷன் 'ஆன்' நிலையில் இருக்க எஞ்ஜின் ஓடாமல் இருந்தால், சி.என்.ஜி. இண்டிகேட்டர் வரும் வரை மாற்று ஸ்விட்சை அழுத்தி பிடிக்கவும். இந்த மாடலில் சி.என்.ஜி. இண்டிகேட்டர் ஒளிர, பெட்ரோல் இண்டிகேட்டர் 'ஆஃப்' நிலையில் இருக்கும்.

*குறிப்பு:*

- *பெட்ரோல் டேங்கில் கணிசமான அளவு பெட்ரோலை வைத்திருக்குமாறு உங்களுக்கு பரிந்துரை செய்யப்படுகிறது..*
- *இயல்பான/எஞ்ஜின் வெப்பநிலை $0^0C$-க்கும் குறைவாக இருந்தால் 'ஃபோர்ஸ்ட் சி.என்.ஜி.' மாடலில் வண்டி ஸ்டார்ட் ஆகாமலிருக்கும். வண்டியை 'ஆட்டோ மாடலில்' ஸ்டார்ட் செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.*

### சி.என்.ஜி. மாடலிலிருந்து பெட்ரோல் மாடலுக்கு தானாகவே மாறிக்கொள்வது

எஞ்ஜின் ஓடும்போதே சி.என்.ஜி. தீர்ந்துவிட்டால் வண்டி தானாகவே சி.என்.ஜி. மாடலிலிருந்து பெட்ரோல் மாடலுக்கு மாறும்; சி.என்.ஜி. வேலை செய்யவில்லை என்ற எச்சரிக்கை விளக்கும் ஒளிர ஆரம்பிக்கும். சி.என்.ஜி. இண்டிகேட்டர் தானக 'ஆப்' ஆகிவிட பெட்ரோல் இண்டிகேட்டர் தொடர்ந்து ஒளிர்ந்து கொண்டிருக்கும்.

இத்தகவலைப் பெற்ற அடையாளமாக, மாறும் ஸ்விட்சை ஒருமுறை அழுத்தவும். மாறும் ஸ்விட்சை அழுத்தியதும் சி.என்.ஜி. வேலை செய்யாததை எச்சரிக்கும் விளக்கு ஒளிர ஆரம்பிக்கும்; பெட்ரோல் இண்டிகேட்டர் தொடர்ந்து ஒளிர்ந்து கொண்டிருக்கும்.

ஒவ்வொரு இக்னிஷன் ஆன் – ஆஃப் நிலையில் இருந்து சி.என்.ஜி. ரீஃபில் ஆகும் வரை சி.என்.ஜி மால்ஃபன்க்ஷன் இண்டிகேட்டர் விளக்கு

ஒளிரும். சி.என்.ஜி. ரீஃபில் ஆகிவிட்டால், பியூயல் மாற்று ஸ்விட்சை அழுத்தி சி.என்.ஜி. க்கு மாற்றவும். பின்பு வாகணம் சி.என்.ஜி. நிலையில் செல்லும்.


*குறிப்பு:*

- *பெட்ரோல் டேங்கில் கணிசமான அளவு பெட்ரோலை வைத்திருக்குமாறு பரிந்துரை செய்யப்படுகிறது; இதனால் எஞ்ஜின் நின்று விடுவது தடுக்கப்படுவதுடன் சி.என்.ஜி. மாடலில் இருந்து பெட்ரோல் மாடலுக்கு தானாகவே மாற்றமும் நிகழும்.*

- *மாறும் ஸ்விட்சை அழுத்திய பின்பும் சி.என்.ஜி. வேலை செய்யாமல் எச்சரிக்கும் விளக்கு ஒளிர்ந்துக் கொண்டே இருந்தால், வண்டியை அருகில் உள்ள மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப்பில் சென்று சோதிக்கவும்.*

## வார்னிங் மற்றும் இண்டிகேட்டர் லைட்டுகள்

### பிரேக் சிஸ்டம் வார்னிங் லைட்



82K170

வாகனத்தின் தன்மையைப் பொறுத்து நான்கு வகையான இயக்கும் விதங்கள் உள்ளன.

1) இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) பொஸிஷனுக்குத் திருப்படும்போது சிறிது நேரம் லைட் எரியும்.
2) இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) பொஸிஷனில் இருந்து பார்க்கிங் பிரேக் பயன்படுத்தப்பட்டால் லைட் எரிய ஆரம்பிக்கும்.
3) மேற்சொன்ன ஒன்று அல்லது இரண்டும் நிகழும்போதும் லைட் எரிய ஆரம்பிக்கும்.
4) பிரேக் திரவத் தொட்டியின் திரவம் குறிப்பிட்ட ஒரு மட்டத்திற்குக் கீழே குறையும்போதும் லைட் எரிய ஆரம்பிக்கிறது.

என்ஜினை இயக்கி பார்க்கிங் பிரேக்கை அழுத்தியதும் பிரேக் ஃப்லியுட் ரிசர்வாயர் திரவம் போதுமான அளவில் இருந்தால் லைட் உடனடியாக அணைந்துவிட வேண்டும்.

வாகனத்தை ஓட்டும்போதே பிரேக் சிஸ்டம் வார்னிங் லைட் எரிய ஆரம்பித்தால், பிரேக் சிஸ்டத்தில் பெரிய பிரச்சினை இருக்கிறது என்று அர்த்தம். அவ்வாறு நிகழ்ந்தால், நீங்கள் செய்ய வேண்டியவை:

1) சாலையின் ஓரத்தில் வாகனத்தைக் கவனமாக நிறுத்தி வைக்கவும்.

**⚠ எச்சரிக்கை**

**நிறுத்த வேண்டிய தூரம் அதிகமாக இருந்து நீங்கள் பெடலை அதிக அழுத்தத்துடன் மிதித்தால் வழக்கத்தை விட கீழான மட்டம் வரை பெடல் செல்லக்கூடும்.**

2) சாலையின் ஒரு ஓரத்தில் வாகனத்தை நிறுத்தி வண்டியைச் சில தடவைகள் ஆன் மற்றும் ஆஃப் செய்து பரிசோதிக்கவும்.
   – பாதுகாப்பானதுதான் என்று தோன்றினால், வாகனத்தைக் கவனமாக, குறைந்த வேகத்தில் செலுத்தி அருகாமையிலுள்ள டீலரிடம் சென்று பழுது பார்த்துக் கொள்ளவும், அல்லது
   – அருகாமையிலுள்ள அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் வாகனத்தைக் கொண்டு சென்று பழுது பார்த்துக் கொள்ளவும்.


**⚠ எச்சரிக்கை**

**பின்வரும் நிகழ்வுகளின் ஏதாவது நேரிட்டால், உடனடியாக உங்களது மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரை அணுகி பிரேக் சிஸ்டத்தைச் சோதித்துக் கொள்ளவும்.**

- **என்ஜின் இயக்கப்பட்டு, பின்னர் பார்க்கிங் பிரேக் முழுவதுமாக விடப்பட்ட பின்னரும் பிரேக் சிஸ்டம் வார்னிங் லைட் அணையாமல் இருந்தால்**
- **இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) பொஸிஷனில் வைக்கப்பட்ட பின்னரும் பிரேக் சிஸ்டம் வார்னிங் லைட் எரியவில்லை என்றால்;**
- **வாகனம் ஓட்டும்போது எந்த நிலையிலாவது பிரேக் சிஸ்டம் வார்னிங் லைட் எரிய ஆரம்பித்தால்;**

*குறிப்பு:*
*பிரேக் சிஸ்டம் தானாகவே அட்ஜஸ்ட் செய்து கொள்ளக் கூடியது என்பதால் பிரேக் பேடுகள் சேதமடைந்தால் திரவத்தின் மட்டம் குறைந்து விடும். பிரேக் திரவத் தொட்டியில் திரவத்தை மீண்டும் நிரப்புவது சாதாரண பராமரிப்புப் பணிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது*

### மால்ஃபங்ஷன் இண்டிகேட்டர் லைட்



63J031


கம்ப்யூட்டரால் நிர்வகிக்கப்படும் மாசு கட்டுப்பாடு சிஸ்டம் உங்களது வாகனத்திற்குள் பொருத்தப் பட்டுள்ளது. இன்ஸ்ட்ரூமெண்ட் பேனலில் மாசு கட்டுபாடு சிஸ்டத்தை சர்வீசுக்கு விட வேண்டியதை நினைவூட்ட ஒரு மால்ஃபங்ஷன் இண்டிகேட்டர் லைட் தரப்பட்டுள்ளது. இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) பொஸிஷனுக்குத் திருப்பப்படும்போது மால்ஃபங்ஷன் இண்டிகேட்டர் லைட் எரிய ஆரம்பிக்கும்; என்ஜின் இயங்கும்போது லைட் அணைந்து விடும். இதனால் லைட் வேலை செய்வதை நீங்கள் உறுதி செய்து கொள்ளலாம்.

என்ஜின் இயங்கும்போது மால்ஃபங்ஷன் இண்டிகேட்டர் லைட் எரிய ஆரம்பித்தால், வாகனத்தின் மாசு கட்டுப்பாடு கண்ட்ரோல் சிஸ்டத்தில் பிரசினை இருக்கிறதென அர்த்தம். வாகனத்தை அருகிலுள்ள மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் எடுத்துச் சென்று சேதத்தைச் சரிசெய்து கொள்ளவும்.

*அறிவிப்பு*

**மால்ஃபங்ஷன் இண்டிகேட்டர் லைட் எரிகையில் தொடர்ந்து வாகனத்தைச் செலுத்தினால் வாகனத்தின் மாசு கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு நிரந்தரமாகப் பாதிக்கப்படலாம்; இதனால் பியூயல் சிக்கனமும் வாகனம் ஓட்டும் நிலையுமே கூட பாதிப்புக்குள்ளாகலாம்.**

### ஆயில் பிரஷர் லைட்




50G051

இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) பொஸிஷனுக்குத் திருப்பப்படும்போது “ON” (ஆன்) செய்யப்படும் இந்த லைட், என்ஜின் இயங்க ஆரம்பிக்கும்போது அணைந்து விடுகிறது. போதுமான ஆயில் பிரஷர் இல்லாதபோது எரிய ஆரம்பிக்கும் லைட் அப்படியே நிலைத்து நின்று விடும். வாகனம் ஓடுகையில் லைட் எரிய ஆரம்பித்தால் முடிந்தவரை சீக்கிரம் சாலையின் ஒரு ஓரத்தில் வாகனத்தை நிறுத்தி என்ஜினை முழுவதுமாக அணைத்து விடவும்.
ஆயில் மட்டத்தைச் சோதித்து, தேவையானால் பரிந்துரைக்கப்பட்ட என்ஜின் ஆயிலையே எப்போதும் சேர்க்கவும். ஆயில் போதுமான அளவு இருந்தால், மீண்டும் வாகனத்தைச் செலுத்த ஆரம்பிப்பதற்கு முன் அதன் லூப்ரிகேஷன் சிஸ்டத்தை உங்களது மாருதி சுசூகி கமர்ஷியல் டீலர் மூலம் ஆய்வு செய்து கொள்ளவும்.

*அறிவிப்பு*

- **இந்த லைட் எரியும்போது என்ஜினை இயக்கினால் என்ஜின் மோசமான அளவில் சேதமடையலாம்.**
- **ஆயிலைச் சேர்ப்பதற்கான தேவை பற்றித் தெரிந்து கொள்ள ஆயில் பிரஷரர் லைட்டை மட்டுமே நம்பி இருக்காதீர்கள். என்ஜின் ஆயில் மட்டத்தை அவ்வப்போது சோதிக்க மறக்காதீர்கள்.**

### சார்ஜிங் லைட்



50G052

இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) பொஸிஷனுக்குத் திருப்பப்படும்போது “ON” (ஆன்) செய்யப்படும் இந்த லைட், என்ஜின் இயங்க ஆரம்பிக்கும்போது அணைந்து விடுகிறது. பேட்டரி சார்ஜின் சிஸ்டத்தில் கோளாறு எதுவும் இருந்தால் லைட் எரிய ஆரம்பித்து நிலைத்து நின்று விடும். என்ஜின் ஓடும்போது லைட் எரிய ஆரம்பித்தால் மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் சென்று சார்ஜின் சிஸ்டத்தை உடனடியாக சோதிக்கவும்.

### ஓட்டுநரின் சீட் பெல்ட் வார்னிங் லைட்/ முன்பக்கப் பயணி சீட்பெல்ட் வார்னிங் லைட்  (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)




60G049

ஓட்டுநரின் அல்லது முன்பக்க சீட் பயணி தன் சீட் பெல்டை அணியாவிட்டால், லைட் ஒளிரும் அல்லது மின்னும்.

சீட் பெல்ட் ரிமைண்டர் விவரங்களுக்கு, “சீட் பெல்ட் மற்றும் சைல்டு ரெஸ்டிரைண்ட் சிஸ்டம்” பார்க்கவும்.

### ஹை என்ஜின் கூலண்ட் தட்பவெப்பநிலை வார்னிங் லைட் (சிவப்பு நிறம்)




54G344

இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) பொஸிஷனுக்குத் திருப்பப்படும்போது லைட் வேலை செய்வது உங்களுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காகச் சிறிது நேரம் லைட் எரிந்து அணைந்து விடும். வாகனம் ஓட்டும்போது லைட் சிமிட்டினால் என்ஜின் அதிகம் சூடாகி விட்டதென அர்த்தம். என்ஜின் அதிகம் சூடாகும் தட்பவெப்ப நிலைக் காலத்தில் வாகனம் ஓட்டுவதைத் தவிர்க்கவும். லைட் சிமிட்டாமல் எரிந்தால் என்ஜின் அதிகம் சூடாகிக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம். ’எமர்ஜென்ஸி சர்வீஸ்’ பிரிவில் ‘என்ஜின் அதிக சூடாகும்போது’ என்ற தலைப்பின் கீழுள்ள குறிப்புக்களைப் படித்துப் பின்பற்றவும்.

| *அறிவிப்பு* |
| --- |
| **என்ஜின் சூடாகும்போது தொடர்ந்து வாகனத்தை ஓட்டினால் என்ஜின் மிக மோசமான பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும்.** |


### டர்ன் சிக்னல் இண்டிகேட்டர்ஸ்



50G055

இடது அல்லது வலப்புற டர்ன் சிக்னல்களை ஆன் செய்யும்போது இன்ஸ்ட்ரூமெண்ட் பேனலில் அதற்கேற்ற பச்சை அம்பு விளக்கு அதற்குரிய டர்ன் சிக்னல் விளக்குகளுடன் ஒளிரும். ஹஸார்ட் வார்னிங் ஸ்விட்சை ஆன் செய்தால் இரு பச்சை அம்புகளும் அனைத்து டர்ன் சிக்னல் விளக்குகளுடன் சேர்ந்து ஒளிரும்.

### மெயின் பீம் (ஹை பீம்) இண்டிகேட்டர் லைட்



50G056

மெயின் பீம் (ஹை பீம்) ஆன் ஆகும்போது இந்த இண்டிகேட்டர் ஒளிர ஆரம்பிக்கும்.


### பியூயல் ஃபில்டர் வார்னிங் லைட் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)



60A541

இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) பொஸிஷனுக்குத் திருப்பப்படும்போது லைட் வேலை செய்வது உங்களுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காகச் சிறிது நேரம் லைட் எரிந்து அணைந்து விடும்.
வாகனம் ஓடும்போது லைட் எரிந்தால், பியூயல் ஃபில்டரில் தண்ணீர் சேர்ந்து விட்டது என்று அர்த்தம். தண்ணீரை முடிந்த வரை சீக்கிரமாக வடித்து விடவும். தண்ணீரை வடித்து விடுவது பற்றி விவரங்கள் தெரிந்து கொள்ள ‘ஆய்வு மற்றும் பராமரிப்பு’ பிரிவில் ‘பியூயல் ஃபில்டர்’ தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளவற்றைப் படிக்கவும்.


### க்ளோ ப்ளக் இண்டிகேட்டர் லைட்(கருவி பொருத்தப்பட்டிருந்தால்)



60A543

கூலண்ட்டின் தட்பவெப்பநிலை சில்லென்று இருந்தால், இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) செய்யப் படும்போது லைட் எரியும்; இன்ஜின் இயக்கம் பெறத் தேவையான அளவு க்ளோ ப்ளக் சூடானால் இந்த லைட் அணைந்து விடுகிறது.

### சி.என்.ஜி. மால்ஃபங்ஷன் வார்னிங் லைட் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)



77PMC015

இக்னிஷன் ஸ்விட்ச் ‘ஆன்’ ஆகும்போது சி.என்.ஜி. பழுதை எச்சரிக்கும் விளக்கு எரியும்; இதனால் சி.என்.ஜி. பழுதை எச்சரிக்கும் விளக்கு நன்கு எரிவதைப் பரிசோதிக்கலாம்.

- சி.என்.ஜி. பழுதை எச்சரிக்கும் விளக்கு தொடர்ந்து எரிந்தால் இக்னிஷன் ‘ஆன்’ ஆக இருக்கையில் சி.என்.ஜி. அமைப்பில் பிரச்சினை இருப்பது தெரியவருகிறது. உடனே அருகில் உள்ள மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப்பில் சென்று வண்டியைச் சோதிக்கவும்
- என்ஜின் ஓடும்போது சி.என்.ஜி. பழுதை எச்சரிக்கும் விளக்கு ஒளிர்ந்தால், சி.என்.ஜி.யில் பிரச்சனை உள்ளதென்றும் அந்நிலையில் வண்டி அதிகநேரம் ஓடாதென்றும் அர்த்தம்; வண்டி அப்போது தானாகவே பெட்ரோல் மாடலுக்கு மாறிவிடும். அருகில் உள்ள மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப்பில் சென்று வண்டியைச் சோதிக்கவும்.

*குறிப்பு:*
*இக்னிஷன் ஸ்விட்ச் ‘ஆன்’ ஆக இருந்து என்ஜின் ஓடாவிடில், சி.என்.ஜி. விளக்கு ஒளிர்வது பெட்ரோல் மூடி திறந்துள்ளதையே குறிக்கும். இந்நிலையில் வண்டி ஸ்டார்ட் ஆகாது. மூடியை மூடிவிட்டு வண்டியை மீண்டும் ஸ்டார்ட் செய்யவும்.*

## லைட்டிங் கண்ட்ரோல் லீவர்

உதாரணம்



65D611

**⚠ எச்சரிக்கை**

**ஸ்டீயரிங் வீல் வழியே கைகளை விட்டு கண்ட்ரோல்களை இயக்காமல் இருந்தால் காயமுறுவதைத் தவிர்க்கலாம்.**

### லைட்டிங் ஆபரேஷன்

உதாரணம்



77PH110

லீவரின் முனையில் உள்ள பட்டனைத் திருப்பி லைட்டுகளை “ON” (ஆன்) அல்லது “OFF” (ஆஃப்) செய்யலாம். மூன்று பொஸிஷன்கள் பின்வருமாறு:

**OFF (ஆஃப்)**

அனைத்து விளக்குகளும் அணைந்து விட்டன.




முன்புற பொஸிஷன் லைட்டுகள், டெயில் லைட்டுகள், லைசென்ஸ் ப்ளேட் லைட்டுகள் மற்றும் இன்ஸ்ட்ரூமெண்ட் லைட்டுகள், ‘ஆன்’ ஆகியுள்ளன; ஹெட்லைட்டுகள் ‘ஆஃப்’ ஆகி விட்டன.



முன்புற பொஸிஷன் லைட்டுகள், டெயில் லைட்டுகள், லைசென்ஸ் ப்ளேட் லைட்டுகள், இன்ஸ்ட்ரூமெண்ட் லைட்டுகள் மற்றும் ஹெட்லைட்டுகள் ஆகிவை ‘ஆன்’ ஆகியுள்ளன.

உதாரணம்




77PH111

ஹெட்லைட்டுகள் 'ஆன்' ஆகியுள்ளபோது, லீவரை முன்புறம் தள்ளி விட்டு ஹைபீமுக்கு (மெயின் பீம்) அல்லது லீவரை உங்கள் பக்கம் இழுத்து விட்டு லோபீமுக்கு மாறிக் கொள்ளவும். ஹைபீம்கள் (மெயின் பீம்கள்) 'ஆன்' செய்யப் பட்டால், மெயின் பீம் (ஹை பீம்) இன்ஸ்ட்ரூமெண்ட் பேனலில் உள்ள இண்டிகேட்டர் லைட்டும் 'ஆன்' ஆகிவிடும். எப்போது வேண்டுமானாலும் ஹைபீம்களைக் (மெயின் பீம்கள்) கடந்துசெல்லும் சிக்னல்களாக இயக்க, லீவரைச் சற்றே உங்கள் தரப்புக்கு இழுத்து, பின் நீங்கள் சிக்னலை முடித்த பின்பு அதை விடுவித்து விடவும்.

## ஹெட்லைட் லெவலிங் ஸ்விட்ச்

உதாரணம்




77PH010

இந்த ஸ்விட்சைத் திருப்புவதன் மூலம் வாகனத்தின் எடை நிலைக்கு ஏற்ப ஹெட்லைட் பீமை மட்டப்படுத்தலாம். பல்வேறு எடையுள்ள வண்டிகளின் நிலைக்கு ஏற்ற பொருத்தமான ஸ்விட்ச் பொஸிஷன் பற்றிப் பின்வரும் அட்டவணை விவரமாகச் சொல்கிறது.

**(பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)**

| வாகன எடை நிலவரம் | ஸ்விட்ச் பொஸிஷன் |
|---|---|
| ஓட்டுநர் மட்டும் | 0 |
| ஓட்டுநர் + மொத்த சரக்கு (லோடு ப்ளாட்பார்மில் சரிசமமாகப் பிரித்தளிக்கப்பட்ட லோடு). | 2 |

**(டீசல் என்ஜின் மாடலுக்காக)**

| வாகன எடை நிலவரம் | ஸ்விட்ச் பொஸிஷன் |
|---|---|
| ஓட்டுநர் மட்டும் | 0 |
| ஓட்டுநர் + மொத்த சரக்கு (லோடு ப்ளாட்பார்மில் சரிசமமாகப் பிரித்தளிக்கப்பட்ட லோடு). | 3 |

## டர்ன் சிக்னல் கண்ட்ரோல் லீவர்

உதாரணம்



65D611


**⚠ எச்சரிக்கை**

**ஸ்டீயரிங் வீல் வழியே கைகளை விட்டு கண்ட்ரோல்களை இயக்காமல் இருந்தால் காயமுறுவதைத் தவிர்க்கலாம்.**

### டர்ன் சிக்னல் ஆபரேஷன்

இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) பொஸிஷனில் இருக்கும்போது லீவரை மேலு கீழுமாக இயக்கி வலது/இடது புறத்தில் அமைந்துள்ள டர்ன் சினல்களைச் செயல்படுத்தவும்.

உதாரணம்





77PH112

லீவரை மேல்நோக்கி அல்லது கீழ்நோக்கி நகர்த்தினால் சினனல் கிடைக்கின்றது. டர்ன் முடிந்ததும் சிக்னல் நீங்கி லீவர் தனது இயல்பான பொஸிஷனுக்கு திரும்பி விடும்.

## ஹஸார்ட் வார்னிங் ஸ்விட்ச்

உதாரணம்





77PH028

(1) ஆன்
(2) ஆஃப்

ஹஸார்ட் வார்னிங் ஸ்விட்சை இழுத்து ஹஸார்ட் வார்னிங் லைட்டுகளை இயக்கவும். அனைத்து டர்ன் சிக்னல் லைட்டுகளும், இரண்டு டர்ன் சிக்னல் இண்டிகேட்டர்களும் ஒரே நேரத்தில் சிமிட்ட ஆரம்பிக்கும். லைட்டுகளை அணைக்க, ஸ்விட்சைக் கீழ்நோக்கி அழுத்தவும். அவசரநிலைக் காலத்தில் பார்க்கிங் செய்யவும். உங்களது வாகனம் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும்போது பிற வாகனங்களை எச்சரிக்கவும் ஹஸார்ட் வார்னிங் லைட்டுகளை பயன்படுத்தலாம்.

## வின்ட்ஷீல்டு வைப்பர் மற்றும் வாஷர் லிவர்

உதாரணம்



65D611

**⚠ எச்சரிக்கை**


**ஸ்டீயரிங் வீல் வழியே கைகளை விட்டு கண்ட்ரோல்களை இயக்காமல் இருந்தால் காயமுறுவதைத் தவிர்க்கலாம்.**

### வைப்பர் ஆபரேஷன் (வைப்பரின் செயல்பாடு)

இக்னிஷன் ஸ்விட்ச் “ON” (ஆன்) பொஸிஷனில் இருக்கும்போதுதான் உங்களால் வைப்பர் லீவரைப் பயன்படுத்த முடியும்.

## விண்ட்ஷீல்டு வைப்பர்கள்

உதாரணம்





77PM02015

லீவரின் முனையிலுள்ள பட்டனைத் திருப்பி ஏதாவதொரு பொஸிஷனில் வைப்பதன் மூலம் விண்ட்ஷீல்டு வைப்பர்களை 'ஆன்' செய்யலாம். "LO" (குறைவான) பொஸிஷனில் வைப்பர்கள் குறைந்த வேகத்தில் சீராகச் செயல்படும். "HI" (உயர்) பொஸிஷனில் வைப்பர்கள் உயர் வேகத்தில் சீராகச் செயல்படும். லீவரைப் பின்புறம் திருப்பி 'ஆஃப்' பொஸிஷனில் வைப்பதன் மூலம் வைப்பர்களை "OFF" (ஆஃப்) செய்யலாம்.

## விண்ட்ஷீல்டு வாஷர் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)

உதாரணம்




77PM02016

விண்ட்ஷீல்டு வாஷர் திரவத்தைத் தெளிக்க, லிவரை உங்கள் பக்கம் நோக்கி இழுக்கவும்.

**⚠ எச்சரிக்கை**

விண்ட்ஷீல்டு வாஷர் ரிசர்வேயரில் ரேடியேட்டர் ஆன்டிஃப்ரீஸைப் பயன்படுத்த வேண்டாம். அப்படி பயன்படுத்தினால் விண்ட்ஷீல்டில் அது தெளிக்கப்பட்டவுடன், பார்வைத் திறனைப் பாதிக்கும், மேலும் வாகனத்தின் பெயின்ட்டையும் சேதப்படுத்தும்.


***அறிவிப்பு***

விண்ட்ஷீல்டு வைப்பர் மற்றும் வாஷர் சிஸ்டம் காம்போனன்ட்டுகள் சேதமடைவதைத் தடுக்க, பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

- விண்ட்ஷீல்டு வாஷர் திரவத்தை தெளிக்காமல் இருக்கும்போதும் அல்லது வாஷர் மோட்டார் சேதமடைந்திருக்கும்போதும் லிவரைத் தொடர்ந்து பிடித்துக் கொண்டிருக்கக்கூடாது.
- உலர்வான விண்ட்ஷீல்டில் உள்ள அழுக்கை வைப்பர்களைக் கொண்டு அகற்ற முயற்சிக்க வேண்டாம், அப்படிச் செய்தால் விண்ட்ஷீல்டும் வைப்பர் பிளேடுகளும் சேதமடையக்கூடும். வைப்பர்களை ஆப்பரேட் செய்வதற்கு முன்னர், வாஷர் திரவத்தைக் கொண்டு விண்ட்ஷீல்டை எப்போதும் ஈரப்படுத்த வேண்டும்.
- வைப்பர்களைப் பயன்படுத்துவதற்கு முன்பு, வைப்பர் பிளேடுகளில் உள்ள ஐஸ் அல்லது பனிக்கட்டிகளை அகற்ற வேண்டும்.
- தொடர்ந்து வாஷர் திரவ நிலையைச் சரிபார்க்க வேண்டும். வானிலை மோசமாக இருக்கும்போது அடிக்கடி பாருங்கள்.
- குளிர் காலங்களில் வாஷர் திரவ ரேசர்வேயரில் 3/4 பங்கு மட்டும் திரவத்தை நிரப்புங்கள். ஏனெனில் வெப்பநிலை மிகவும் குறையும்போது திரவம் உறைவதற்கு கொஞ்சம் இடம் தேவைப்படும்.

## ஹாரன்

உதாரணம்




77PH029

ஸ்டியரிங் வீலில் உள்ள பட்டனை அழுத்தி ஹாரனை ஒலிக்கச் செய்யவும். இக்னிஷன் ஸ்விட்ச் எந்த பொஸிஷனில் இருந்தாலும் ஹாரன் வேலை செய்யும்.

## சி.என்.ஜி. சிலிண்டர் வார்னிங் லேபிள் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)

உதாரணம்





77PM02006

சி.என்.ஜி. சிலிண்டரில் இந்த லேபிளை நீங்கள் பார்க்கலாம்:

## சி.என்.ஜி. வார்னிங் லேபிள் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்) முன்புற டிரைவர் கதவு


உதாரணம்





77PM02007

சி.என்.ஜி. எச்சரிக்கை லேபிள் முன்புற வலது கதவில் அமைந்துள்ளது.

## சி.என்.ஜி. மேனுவல் ஷட்-ஆஃப் வால்வ் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)





77PM02011





77PM02014

### வலது புறப்பக்கம் (RHS)




77PM02012

### இடது புறப்பக்கம் (LHS)




77PM02013

மேனுவல் ஷிஃப்ட் வால்வானது வண்டியின் வயிற்றுப்பகுதியில் உள்ள சி.என்.ஜி. சிலிண்டர் மேல் அமைந்துள்ளது.

தலா ஒரு மேனுவல் ஷட்-ஆப் வால்வ் கொண்ட 2 சி.என்.ஜி. சிலிண்டர்கள் உள்ளன.

மேனுவல் ஷட்-ஆப் வால்வு 1 மற்றும் வால்வு 2 ஆகியவற்றை முறையே வண்டியின் வலப்புறமிருந்தும் இடப் புறமிருந்தும் அணுகலாம்.

சி.என்.ஜி. சிலிண்டர்களின் மேலும் உள்ள மேனுவல் ஷட்-ஆஃப் வால்வை மூடுவதன் சி.என்.ஜி. சப்ளையை ஸ்விட்ச் ஆப் செய்யலாம்.
**வால்வை மூடுதல்:** குமிழை கடிகாரச்சுற்றுப் பக்கம் திருப்பி (பார்வை Aயிலிருந்து) இஞ்ஜினுக்கான சி.என்.ஜி. சப்ளையை மூடலாம்.
**வால்வை திறத்தல்:** குமிழை எதிர்கடிகாரச்-சுற்றுப்பக்கம் திருப்பி (பார்வை Aயிலிருந்து) இஞ்ஜினுக்கான சி.என்.ஜி. சப்ளையை திறக்கலாம்.

**⚠ நிதானம்**

**மேனுவல் ஷட்-ஆஃப் வால்வை (2) தொடும் போது உங்களது கைகள் புகைக்குழாயில் படாமல் கவனமாக இருக்கவும். வண்டியை அணைத்தபின் புகைக்குழாய் கையை எரித்து விடும் அளவுக்கு வெப்பத்துடன் இருக்கும்.**

*குறிப்பு:*

- *மேனுவல் ஷட்-ஆஃப் வால்வை முழுதும் திறக்காவிட்டால், எஞ்ஜின் சரியாக ஓடாது.*
- *மேனுவல் ஷட்-ஆப் வால்வ் மூடியிருந்தால் சிலிண்டரில் சி.என்.ஜி.யை நிரப்புவது சாத்தியம் ஆகாது.*

*குறிப்பு:*

- *அரசு விதிமுறைப்படி, சி.என்.ஜி. சிலிண்டர் அடையாளத் தகட்டில் குறிப்பிட்டுள்ளபடி சி.என்.ஜி. சிலிண்டர் முதல் சோதனைக்குப்பின் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை சோதிக்கப்பட்டு சான்றளிக்கப்பட வேண்டும்.*
- *அரசு அங்கீகாரம் பெற்ற சோதனை நிலையத்தில் வாடிக்கையாளர் வண்டியைச் சோதித்துக் கொள்ளலாம்.*
- *சிலிண்டரை சோதிக்கத் தவறினால் சி.என்.ஜி. நிலையம் சி.என்.ஜி. நிரப்ப மறுக்கும் (A) அரசு அதிகாரிகள் வண்டியைக் கைப்பற்றக்கூடிய நிலையும் ஏற்படலாம்.*
- *சி.என்.ஜி. சிலிண்டர் சோதனைக்கான எல்லா செலவுகளும் வாடிக்கையாளரையே சேரும்.*
- *அரசு விதிமுறைப்படி, சி.என்.ஜி. சிலிண்டர் அடையாளத் தகட்டில் குறிப்பிட்டுள்ளபடி சி.என்.ஜி. சிலிண்டரை முதலில் சோதிக்கப்பட்டு 20 ஆண்டுகளுக்குள் ஒழித்துக்கட்டப்பட வேண்டும்.*
- *அரசு அங்கீகாரம் பெற்ற ஸ்கிராப் ஏஜன்சி மூலம் வாடிக்கையாளர் சிலிண்டரைத் தன் செலவில் ஒழித்துக்கட்ட வேண்டும்.*
- *பழுதுகள் பற்றிய அறிக்கை, பழுதுபார்த்தவரின் சான்றிதழ், சோதித்தவரின் அறிகை ஆகியவை முக்கிய கண்காணிப்பாள-ருக்கு சமர்ப்பிக்கப்பட்டு மீண்டும் நிரப்புவதற்கு அவரது அனுமதியும் பெறப்பட்டாக வேண்டும். அதுவரை உபவிதி (2)-ன் கீழ் பழுது பார்க்கப்பட்ட எந்த சிலிண்டரையும் யாரும் எந்த வாயுவாலும் திரும்ப நிரப்பக்கூடாது.*

**⚠ எச்சரிக்கை**


- **சிலிண்டர் அசெம்பிளியிலிருந்து சிலிண்டர் வால்வை எப்போதும் அகற்றாதீர்கள். உதவி தேவைப்பட்டால் அருகிலுள்ள மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப்பை அணுகவும்.**
- **சிலிண்டரை ஒருபோதும் சுத்தம் செய்ய முயற்சிக்காதீர்கள்.ஏதேனும் சிக்கல் இருந்தால், அங்கீகரிக்கப்பட்ட மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப்பை அணுகவும்.**
- **சிலிண்டர் அசெம்பிளியிலிருந்து அகற்றப்பட்ட (A) ஒருமுறை மாற்றப்பட்ட சிலிண்டர் வால்வை மீண்டும் பயன்படுத்த வேண்டாம்.**
- **சிலிண்டரிலிருந்து சிஎன்ஜி எஞ்ஜின் முழுதும் நிற்கும்வரை பயன்படுத்தப்பட்டாலும் சில சி.என்.ஜி. துகள்கள் (அழுத்தம் காரணமாக) டேங்கில் மீதமிருக்கும் வாய்ப்புள்ளது.**

# உங்களது வாகனத்தை இயக்குதல்

எக்ஸாஸ்ட் கேஸ் எச்சரிக்கை ................................................ 3-1
தினசரி பரிசோதனைக்கான சோதனைப்பட்டியல்.................. 3-1
எஞ்ஜின் ஆயில் செலவினம் .................................................. 3-2
இக்னிஷன் ஸ்விட்ச் ............................................................... 3-2
பார்க்கிங் பிரேக் லீவர்............................................................ 3-4
பெடல்.................................................................................... 3-4
எஞ்ஜினை இயக்க வைக்க ஆரம்பிப்பது ................................ 3-5
(பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)..... 3-5
டிரான்ஸ்மிஷனை பயன்படுத்துவது ...................................... 3-6
பார்க்கிங் சென்சார்கள் ................................................ 3-8
பிரேக்கிங் ......................................................................... 3-12

## எக்ஹாஸ்ட் கேஸ் வார்னிங்

உதாரணம்



82DY03

**⚠ எச்சரிக்கை**

**புகைபோக்கி வாயுக்களை சுவாசிப்பதைத் தவிர்க்கவும் வண்ணமற்ற, நறுமணமற்ற கார்பன் மோனாக்சைடு என்ற நச்சு வாயு புகைபோக்கி வாயுக்களில் கலந்துள்ளது. கார்பன் மோனாக்சைடைக் கண்டறிவது கடினம் என்பதால், பின்வரும் முன்னெச்சரிக்கைகளைக் கையாண்டு கார்பன் மோனாக்ஸைடு உங்களது வண்டிக்குள் புகாமல் பாதுகாத்துக் கொள்ளவும்.**

- **காரேஜ் அல்லது பிற மூடப்பட்ட இடங்களில் என்ஜின் ஓடிக் கொண்டிருக்கும்படி விட்டு விட்டுச் சென்று விடாதீர்கள்.**

(தொடர்ச்சி..)

**⚠ எச்சரிக்கை**


(தொடர்ச்சி)

- **என்ஜின் ஓடிக் கொண்டிருக்கும்படி வாகனத்தை வெகுநேரம் வரை திறந்த வெளியில் விட்டு விட்டுச் சென்று விடாதீர்கள்.**
- **வாகனத்தின் காற்றோட்டம் சிஸ்டம் சரிவரச் செயல்படுவதற்கு, முன்புறம் உள்ள காற்றுப் உட்புகும் கிரில்லில் பனித்துளி, இலைகள் மற்றும் பிற தடை ஏற்படுத்தும் பொருட்கள் எப்போதும் சேர்ந்து விடாமல் பார்க்கவும்.**
- **எக்ஸ்ஹாஸ்ட் பைப் ஏரியாவில் ஸ்னோ மற்றும் பிற மெட்டீரியல்களை வைக்காமல் சுத்தமாக வைத்துகொள்ள வேண்டும். அப்படி சுத்தமாக வைத்துகொள்ளுதல், வாகனத்தின் கீழ் வெளியாகும் எக்ஸ்ஹாஸ்ட் கேஸ்களின் பில்டப்பைக் குறைக்க உதவும். குறிப்பாக பிலிசார்ட் கண்டிஷனில் பார்க் செய்திருக்கும்போது இது மிகவும் முக்கியமாகும்.**
- **புகைபோக்கி அமைப்பை சீரான கால இடைவெளியில் அவ்வப்போது ஆய்வு செய்து சேதம், கசிவு இருக்கிறதா என்று பார்க்கவும். சேதம் அல்லது கசிவு இருந்தால் அவற்றை உடனடியாகப் பழுது பார்க்கவும்.**

## தினசரி ஆய்வுக்கான சோதனைப்பட்டியல்

### ஓட்டுவதற்கு முன்னால்

உதாரணம்



82DY011

1) ஜன்னல்கள், கண்ணாடிகள், விளக்குகள் மற்றும் ரிஃப்ளெக்டர்கள் போன்றவை சுத்தமாகவும் இடையூறின்றியும் இருப்பதை உறுதி செய்யவும்.
2) கீழ்க்காணும் அம்சங்களுக்காக டயர்களை நீங்களே பார்த்து சோதிக்கவும்:
   – டயரிலுள்ள ட்ரெட்டின் ஆழம்
   – அசாதாரணமான தேய்மானம், பிளவு, சேதம்
   – சக்கரங்களின் நட்டுகள்/போல்ட்டுகள் லூஸாக இருப்பது
   – ஆணி, கல் உள்ளிட்ட அந்நியப் பொருட்கள் டயரில் ஒட்டிக் கொண்டிருப்பது.

   "ஆய்வு மற்றும் பராமரிப்பு" பிரிவில் "டயர்கள்" என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைப் பார்க்கவும்.
3) எண்ணெய்/திரவக் கசிவு இருக்கிறதா என்று ஆய்வு செய்யவும்.
4) என்ஜின் கம்பார்ட்மெண்ட் முழுதும் மூடப்பட்டு, பூட்டப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ளவும்.

5) ஹெட்லைட்டுகள், டர்ன் சிக்னல் லைட்டுகள், பிரேக் லைட்டுகள் மற்றும் ஹாரன் ஆகியவை சரியாக இயங்குகின்றனவா என சோதிக்கவும்.
6) ஓட்டுநரின் சீட்டை அட்ஜஸ்ட் செய்யவும்.
7) பிரேக் பெடல், பார்க்கிங் பிரேக் லீவர் ஆகிய இரண்டையும் ஆய்வு செய்யவும்.
8) கண்ணாடிகளை அட்ஜஸ்ட் செய்யவும்.
9) நீங்களும் பிற பயணிகளும் சீட் பெல்ட்டுகளைச் சரியாக அணிந்துள்ளதை உறுதி செய்யவும்.
10) சாவி செருகப்பட்டு “ON” (ஆன்) பொஸிஷனுக்கு வந்தவுடன் அனைத்து வார்னிங் லைட்டுகளும் எரியத் தொடங்குவதை உறுதி செய்யவும்.
11) அனைத்து அளவிடும் கருவிகளையும் சோதித்துப் பார்க்கவும்.
12) பார்க்கிங் பிரேக் விடப்படும்போது பிரேக் சிஸ்டம் வார்னிங் லைட்யை அணைத்து விட்டதை உறுதி செய்து கொள்ளவும்.

வாரந்தோறும் அல்லது ஒவ்வொரு முறை பியூயல்பியூயல் நிரப்பும்போதெல்லாம் பின்வரும் சோதனைகளைச் செய்யவும்:

1) என்ஜின் ஆயில் நிலை மட்டம்
2) கூலண்ட் நிலை மட்டம்
3) பிரேக் திரவ நிலை மட்டம்
4) வின்ட்ஷீல்டு வாஷர் திரவ நிலை மட்டம் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)
5) பேட்டரி எலக்டிரோலைட் நிலை மட்டம்
6) தாழ்ப்பாள், கீல்கள் மற்றும் பூட்டுகள் செயல்பாடுகள் “சோதனை மற்றும் பராமரிப்பு” பிரிவில் “அவ்வப்போது பராமரிப்பது பற்றிய திட்டம்” என்பதன் கீழ் “சேஸிஸ் மற்றும் பாடி” என்ற தலைப்பில் அனைத்து தாழ்ப்பாள், கீல்கள் மற்றும் பூட்டுகள இணைப்புக்கள் குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கவும்.

மாதந்தோறும் அல்லது ஒவ்வொரு முறை பியூயல் நிரப்பும்போதும் டயரின் பிரஷரை டயர் பிரஷர் காஜின் மூலம் சோதனை செய்யவும். மேலும், உபரியாக உள்ள டயரின் பிரஷரையும் சோதிக்கவும்.

## என்ஜின் ஆயில் செலவினம்


வாகனம் ஓடும்போது மிகக் குறைந்த அளவில் என்ஜின் ஆயில் செலவாவது இயல்பானதே.

ஆயிலின் பாகுநிலை, தரம் மற்றும் வாகனம் ஓட்டப்படும் நிலையைப் பொறுத்தே ஆயில் செலவாகும்.
அதிக வேகத்தில் வாகனம் ஓட்டப்படும்போதும் வேகத்தை அடிக்கடி குறைத்து, கூட்டும்போதும் ஆயில் அதிகம் செலவாகும். வாகனத்தில் அதிக எடை ஏற்றப்படும்போதும் என்ஜின் ஆயில் அதிக அளவு செலவாகும்.
பிஸ்டன்கள், பிஸ்டன் வளையங்கள் மற்றும் சிலிண்டரின் சுவர்கள் ஆகியவை புதிதாக இருப்பதால் புதிய என்ஜின் பயன்படுத்தும்போது அதிக அளவு ஆயில் செலவாகும். 5000 km (3000 miles) வரை ஓடிய பின்னரே இயல்பான அளவு ஆயில் செலவாகும் நிலையைப் புதிய என்ஜின்கள் அடையும்.

**ஆயில் செலவினம்:**
**1000 km அதிகபட்சம் 1.0 லிட்டர்**
**(600 miles ஒரு Qt.)**

ஆயில் செலவினத்தைக் கணக்கிடும்போது, ஆயில் நீர்த்துப்போகும் என்பதையும் அதனால் அதன் உண்மையான மட்டத்தைத் துல்லியமாக கண்டுபிடிப்பது கடினம் என்பதையும் நினைவில் கொள்ளவும்.
உதாரணமாக, சிறிய பயணங்களுக்கு அடிக்கடி வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு அதிக ஆயில் செலவானால், 1000 கி.மீ. (600 மைல்) வரை சென்றிருந்தாலும் ஆயில் குறைந்துள்ளதை டிப்-ஸ்டிக் காட்டாது. ஏனெனில் பியூயல் அல்லது ஈரப்பதத்தின் காணமாககொஞ்சம் கொஞ்சமாக ஆயில் நீர்த்துப் போவதால், அது செலவானது போன்று தோற்றமளிப்பதில்லை.
வாகனத்தை அதிக வேகத்தில் செலுத்தும்போது நீர்க்கச் செய்யும் காரணிகள் ஆவியாகி விடுவதால் வேகமாகச் சென்றதால்தான்ஆயில் அதிகம் செலவாவது போல் தோன்றுகிறது.

## இக்னிஷன் ஸ்விட்ச்




65D611

**⚠ எச்சரிக்கை**

**ஸ்டீயரிங் வீல் வழியே கைகளை விட்டு கண்ட்ரோல்களை இயக்காமல் இருந்தால் காயமுறுவதைத் தவிர்க்கலாம்.**

உதாரணம்




77PH002

இக்னிஷன் ஸ்விட்ச் பின்வரும் நான்கு நிலைகளில் அமைந்திருக்கும்:

### LOCK (லாக்)

இதுதான் வாகனத்தின் இயல்பான நிலை. இந்நிலையில் தான் சாவியை வாகனத்திலிருந்து எடுக்க முடியும்.

ஸ்டீயரிங் லாக்கை விடுவிக்க, சாவியைப் பொருத்தி அதை கடிகார திசையில் திருப்பி மூன்று நிலைகளில் ஏதாவதொரு நிலையில் வைக்கவும். சாவியைத் திருப்பி ஸ்டீயரிங்கை விடுவிப்பதில் பிரச்சினை இருந்தால் சாவியைத் திருப்பும்போது ஸ்டீயரிங் வீலை இடது (அ) வலது புறம் சற்றே திருப்பவும்.

### ACC (ஏ.சி.சி.)

உபகரணங்கள் வைக்கப்பட்டுள்ள சாக்கெட்டும் இயங்கும்; ஆனால் இன்ஜின் ‘ஆஃப்’ செய்யப் பட்டுள்ளது.

### ON (ஆன்)

இதுதன் இயல்பான இயங்கும் நிலையாகும். அனைத்து மின்சார சாதனங்களும் ‘ஆன்’ நிலையில் உள்ளன.

### START (ஸ்டார்ட்)

ஸ்டார்ட்டர் மோட்டாரைப் பயன்படுத்தி என்ஜினை இயக்குவது இந்த நிலையில்தான். என்ஜின் இயங்க ஆரம்பித்ததும் இந்த பொஸிஷனில் இருந்து சாவியை விடுவித்து விட வேண்டும்.

உதாரணம்



82DY04


**⚠ எச்சரிக்கை**

- **வாகனம் ஓடும்போது இக்னிஷன் சாவியை அகற்றக் கூடாது. அவ்வாறு செய்தால் ஸ்டீயரிங் வீல் தானாகவே லாக் ஆகி விடும்; உங்களால் வாகனத்தைச் செலுத்த முடியாமல் போய்விடும்.**
- **வாகனத்தை விட்டுக் குறைந்த நேரம் வெளியே செல்ல வேண்டியிருந்தாலும் இக்னிஷன் சாவியை அகற்றாமல் இருக்காதீர்கள். நிறுத்தப்பட்டுள்ள வாகனத்திற்குள் குழந்தைகளைத் தனியே விடாதீர்கள். மிதமான அல்லது சூடான தட்ப வெப்பநிலையால் அவர்கள் மயக்கமடையும் சூழல் ஏற்படலாம். இதனால் தீவிரமான காயங்கள் அல்லது மரணம் சம்பவிக்கலாம்.**

*அறிவிப்பு*

- **ஒரு நேரத்தில் ஸ்டார்ட்டர் மோட்டாரை 30 விநாடிகளுக்கு மேல் பயன்படுத்தாதீர்கள். என்ஜின் இயங்க ஆரம்பிக்கவில்லை என்றல், 15 நொடிகள் வரை காத்திருந்து பின்னர் மீண்டும் முயற்சி செய்யவும். பல முறை முயற்சி செய்தபின்னும் என்ஜின் ஸ்டார்ட் ஆகவில்லையென்றால் பியூயல் மற்றும் இக்னிஷன் அமைப்புக்களைச் சோதித்துப் பார்க்கவும்; அல்லது உங்களது மாருதி சுசூகிசுசூகி கமர்ஷியல் டீலரைத் தொடர்பு கொள்ளவும்.**
- **இன்ஜின் இயங்காதபோது இக்னிஷன் ஸ்விட்சை “ON” (ஆன்) பொஸிஷனில் விட்டு விட்டால் பேட்டரி சார்ஜ் குறைந்து விடும்.**

## பார்க்கிங் பிரேக் லீவர்




77PH030

(1) ஆரம்பிக்க
(2) விடுவிக்க
(3) விடுவிக்க

பார்க்கிங் பிரேக் லீவர் சீட்டுகளுக்கிடையில் அமைக்கப்பட்டுள்ளது. பார்க்கிங் பிரேக்கை இயக்க, பிரேக் பெடலை அழுத்திப் பிடித்து, பார்க்கிங் பிரேக் லீவரை முடிந்தவரை மேல்நோக்கி இழுக்கவும். பார்க்கிங் பிரேக்கை விடுவிக்க, பிரேக் பெடலை அழுத்திப் பிடித்து, பார்க்கிங் பிரேக் லீவரை மேல்நோக்கி இழுத்து, லீவரின் முனையிலுள்ள பட்டனை உங்களது கட்டை விரலால் அழுத்தி, லீவரை மீண்டும் அதன் இயல்பான நிலையில் வைத்து விடவும்.

**⚠ எச்சரிக்கை**

- பார்க்கிங் பிரேக் ‘ஆன்’ ஆக இருக்கும்போது வாகனத்தைச் செலுத்தாதீர்கள்: அதிக வெப்பம் அடைவதால் பின்புற பிரேக்கின் பயன்பாடு குறையலாம், ப்ரேக்கின் ஆயுள் குறையலாம் அல்லது பிரேக் நிரந்தரமாக சேதமடையலாம்.
- பார்க்கிங் பிரேக் வாகனத்தைப் பாதுகாப்பாகப் பிடிக்கவில்லை அல்லது முழுவதுமாக விடுவிக்கவில்லை என்றால், உடனடியாக அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்சியல் டீலரிடம் வாகனத்தைப் பரிசோதித்துக் கொள்ளவும்.


**⚠ எச்சரிக்கை**

வாகனத்தை விட்டுக் கீழே இறங்கும் முன்பு பார்க்கிங் பிரேக்கை முழுவதுமாக இயங்கும் நிலையில் வைக்க வேண்டும்;
இல்லையெனில் வாகனம் நகர்ந்து, காயம் அல்லது சேதத்தை உண்டாக்கும்.
வாகனத்தை நிறுத்தும்போது, கியர்ஷிஃப்ட் லீவர் பின்புற நிலையிலோ அல்லது முதலாவது கியரிலோ இருப்பதை உறுதி செய்யவும். வாகனம் கியரில் இருந்தாலும், பார்க்கிங் பிரேக்கை முழுவதுமாக செட் செய்ய வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

**⚠ எச்சரிக்கை**

அதீதமான குளிரில் வாகனத்தை பார்க்கிங் செய்யும்போது பின்வரும் செயல்பாட்டைக் கடைப்பிடிக்கவும்:
1) பார்க்கிங் பிரேக்கை செட் செய்யவும்,
2) என்ஜினை ஆஃப் செய்து, அதை பின்புற அல்லது முதல் கியருக்கு மாற்றவும்.
3) வாகனத்தை விட்டு வெளியேறி, சக்கரங்களுக்கு அடியில் நகராதவாறு கட்டைகளை வைக்கவும்.
4) பார்க்கிங் பிரேக்கை விடுவிக்கவும். வாகனத்திற்குத் திரும்ப வரும்போது பார்க்கிங் பிரேக்கை செட் செய்து, மரக்கட்டைகளை அகற்றி விடுங்கள், இவற்றை மறக்காதீர்கள்.

## பெடல்




80J2121

### க்ளட்ச் பெடல் (1)
என்ஜினை இயக்கும்போதும், நிறுத்தும்போதும் கியர்ஷிஃப்ட் லீவரை மாற்றும் போதும் சக்கரங்களை இயக்க க்ளட்ச் பெடல் பயன்படுத்தப்படுகிறது. பெடலை அழுத்தினால் க்ளட்ச் விடுபடுகிறது.

**⚠ எச்சரிக்கை**

**க்ளட்ச் பெடலின் மேல் உங்களது பாதங்களை வைத்து வாகனத்தைச் செலுத்தாதீர்கள். இதனால் க்ளட்ச் தேய்ந்து போகலாம், சேதம் அடையலாம் அல்லது எதிர்பாராதவிதமாகத் திடீரென்று என்ஜின் பிரேக்கிங் கோளாறாகலாம்.**

### பிரேக் பெடல் (2)
உங்களது வாகனத்தின் முன்புறம் டிஸ்க் பிரேக்குகளும் பின்புறம் டிரம் பிரேக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. பிரேக் பெடலை அழுத்தினால் இரண்டு வகை பிரேக்குகளும் இயக்கப் படுகின்றன.

பிரேக்கை அழுத்தும்போது எப்போதாவது ‘கிரீச்’ சப்தம் கேட்கலாம். சுற்றுப்புற சூழல் காரணிகளான குளிர், பனி, ஈரப்பதம் போன்றவற்றால் ஏற்படும் இது மிகவும் இயல்பான ஒரு நிலைதான்.

**⚠ எச்சரிக்கை**

**ஒவ்வொரு முறை பிரேக்கை அழுத்தும்போதும் அதிகமாக ‘க்ரீச்’ சப்தம் வந்தால், மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் பிரேக்குகளைச் சோதனை செய்யச் சொல்லவும்.**


**⚠ எச்சரிக்கை**

**பிரேக்குகளைத் தொடர்ந்து இடைவிடாமல் அழுத்துவதோ அல்லது பாதங்களை பெடல் மீது வைப்பதோ கூடாது. இதனால் பிரேக்குகள் அதிக சூடாகி, எதிர்பாராத பிரெக்கிங் செயல்பாட்டுக் குறைவும் நிரந்தர பிரேக் சேதாரமும், வாகனத்தை நிறுத்தும்போது அதிகதூரம் வரை செல்வதும் ஏற்படலாம்.**

### ஆக்சிலரேட்டர் பெடல் (3)
என்ஜினின் வேகத்தை இந்தப் பெடல்தான் கண்ட்ரோல் செய்கிறது. ஆக்சிலரேட்டர் பெடலை அழுத்துவதன் மூலம் அதிக விசையும் வேகமும் கிடைக்கிறது.

## என்ஜின் இயக்க வைக்க ஆரம்பிப்பது

### என்ஜின் இயக்க ஆரம்பிப்பதற்கு முன்




77PH014

1) பார்க்கிங் பிரேக் முழுவதுமாக செட் செய்யப் பட்டிருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.
2) “N” (நியூட்ரல்) என்ற குறியீட்டுக்கு மாறி, க்ளட்ச் பெடலை அது தரையைத் தொடும் வரை அழுத்தவும். என்ஜினை ஸ்டார்ட் செய்யும்போது க்ளட்ச் பெடலைப் அழுத்தி பிடிக்கவும்.

**⚠ எச்சரிக்கை**

**என்ஜினை ஸ்டார்ட் செய்யும் முன்பு பார்க்கிங் பிரேக் செட் செய்யப்பட்டு டிரான்ஸ்மிஷன் ‘நியூட்ரல்’ நிலையிலிருப்பதை உறுதி செய்யவும்.**

## (பெட்ரோல் மற்றும் பை-பியூயல் என்ஜின் மாடலுக்காக)

### சில்லென்ற மற்றும் இளஞ்சூட்டில் இருக்கும் என்ஜின் ஸ்டார்ட் செய்வது

ஆக்சிலரேட்டர் பெடலிலிருந்து பாதத்தை எடுத்தவுடன் இக்னிஷன் சாவியை “ஸ்டார்ட்” என்ற பொசிஷனுக்குத் திருப்பிவும்.

***அறிவிப்பு***

- **என்ஜின் ஸ்டார்ட் ஆனவுடன் ஸ்டார்ட்டரை ஆன் செய்வதை நிறுத்தவும்; இல்லையெனில் ஸ்டார்ட்டர் சிஸ்டம் சேதாரமடையக்கூடும்.**
- **ஒரு தடவைக்கு 12 நொடிகள் வரை மட்டுமே என்ஜினை இயக்கத்தில் வைக்கவும். முதல் முயற்சியில் என்ஜின் கிளம்பாவிடில், 15 நொடிகள் பொறுத்து அதன்பின்னர் மீண்டும் முயற்சி செய்யவும்.**

12 நொடிக்குப் பின்னரும் என்ஜின் ஸ்டார்ட் ஆகாவிடில், 15 நொடி வரை காத்திருக்கவும்,

பின்பு ஆக்சிலரேட்டர் பெடலை 1/3 பங்கு வரை அழுத்தி எஞ்ஜினை திரும்பவும் ஸ்டார்ட் செய்ய முயற்சிக்கவும். எஞ்ஜின் ஸ்டார்ட் ஆனவுடன் சாவியை விட்டு விட்டு ஆக்சிலரேட்டர் பெடலை மிதிக்கவும்.

எஞ்ஜின் ஸ்டார் ஆகாவிடால், ஆக்சிலரேட்டர் பெடலைத் தரையில் படும்படி அழுத்தி திரும்ப ஸ்டார்ட் செய்யவு. எஞ்ஜினில் எந்த விதமான அடைப்பு இருந்தாலும் இதனால் சரியாகி விடும்.

*குறிப்பு:*

*(பை-பியூயல் இஞ்ஜின் மாடலுக்காக)*

- *பெட்ரோலிலிருந்து சி.என்.ஜி. மாடலுக்கு மாற ஆக்சிலரேட்டர் பெடலை அழுத்தாதீர்கள்.*
- *இக்னிஷன் 'ஆன்' ஆக இருந்து இஞ்ஜின் இயங்காமல் இருந்தால், சி.என்.ஜி. பழுதானதை எச்சரிக்கும் விளக்கானது பியூயல் மூடி திறந்துள்ளதைச் சுட்டிக்காட்டும். இந்நிலையில் வாகனம் ஸ்டார்ட் ஆகாது.*
- *வண்டியை 'ஆட்டோ' (அ) 'பெட்ரோல்' மாடலில் ஸ்டார்ட் செய்தால் இஞ்ஜின் ஆயுள் நீடிக்கும் என்று பரிந்துரைக்கப்படுகிறது.*
- *இயல்பான நிலை/இஞ்ஜின் வெப்பநிலை $0^0C$-க்கும் குறைவாக இருக்கும்போது இஞ்ஜின் ஸ்டார்ட் செய்யப்பட்டால் சி.என்.ஜி.யாக பியூயல் மாற்றம் நிகழாது. அவ்வாறான நிலையில் இஞ்ஜினை பெட்ரோ, மாடலில் அது சூடாகும் வரை இயக்கி பின்னர் இஞ்ஜினை மீண்டும் ஸ்டார்ட் செய்து சி.என்.ஜி. மாடலுக்கு மாறிக் கொள்ளவும்.*
- *பெட்ரோல் டேங்கில் கணிசமான பெட்ரோல் வைத்திருக்கும்படி பரிந்துரைக்கப்படுகிறது.*
- *இயல்பான நிலை/இஞ்ஜின் வெப்பநிலை $0^0C$-க்கும் குறைவாக இருக்கும்போது ஃபோர்ஸ்ட் சி.என்.ஜி. மாடலில் வாகனம் ஸ்டார்ட் ஆகாது. வாகனத்தை 'ஆட்டோ' மாடலில் ஸ்டார்ட் செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.*
- *தானியங்கி நிலையில் சி.என்.ஜி. மாடலில் இருந்து பெட்ரோல் மாடலுக்கு வண்டி மாறும்போது இஞ்ஜின் நின்றுவிடுவதைத் தடுக்க பெட்ரோல் டேங்கில் கணிசமான அளவு பெட்ரோல் வைத்திருக்க பரிந்துரைக்கப் படுகிறது.*
- *மாறும் ஸ்விட்சை அழுத்திய பின்பும் சி.என்.ஜி. பழுதை எச்சரிக்கும்விளக்கு ஒளிர்வ்து நிற்காவிடில் வண்டியை அருகிலுள்ள அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப்புக்குக் கொண்டு செல்லவும்.*

**(டீசல் என்ஜின் மாடலுக்காக)**

**சில்லென்ற என்ஜின்**

இக்னிஷன் ஸ்விட்சை "ON" (ஆன்) பொஸிஷனுக்குத் திருப்பி, க்ளோ ப்ளக் இண்டிகேட்டர் எரிய ஆரம்பித்து அணையும் வரை காத்திருக்கவும். இக்னிஷன் சாவியை "START" (ஸ்டார்ட்) பொஸிஷனுக்குத் திருப்பி, என்ஜினை ஸ்டார்ட் செய்யவும். என்ஜின் இயங்க ஆரம்பித்ததும் சாவியை விடுவிக்கவும்.

*அறிவிப்பு*

- **என்ஜின் இயங்க ஆரம்பித்ததும் உடனடியாக ஸ்டார்ட்டரைத் திருப்பாதீர்கள்; இவ்வாறு செய்தால் ஸ்டார்ட்டர் அமைப்பு சேதமடையும்.**
- **ஒரு நேரத்தில் என்ஜினை 30 விநாடிகளுக்கு மேல் ஸ்டார்ட் செய்ய முயற்சிக்காதீர்கள். என்ஜின் இயங்க ஆரம்பிக்கவில்லை என்றால், 15 நொடிகள் வரை காத்திருந்து பின்னர் மீண்டும் முயற்சி செய்யவும்.**

**மிதமான சூடான என்ஜின்**

இக்னிஷன் சாவியை "START" (ஸ்டார்ட்) பொஸிஷனுக்குத் திருப்பி, என்ஜினை ஸ்டார்ட் செய்யவும். என்ஜின் இயங்க ஆரம்பித்ததும் சாவியை விடுவிக்கவும்.

**டர்போ-சார்ஜர் என்ஜின் நிறுத்தும்போது கவனமாக இருக்கவும்**
சரிவில் ஏறிவிட்டு அல்லது அதிவேகத்தில் சென்றபின் என்ஜினை நிறுத்தும்போது, என்ஜின் ‘ஐடில்’ பொஸிஷனில் ஒரு நிமிடம் அல்லது அதற்கு அதிகமான நேரம் வரை (அவ்வாறு செய்வது தடை செய்யப்படவில்லை என்றால்) இருந்தால்தான் டர்போ-சார்ஜரும் என்ஜின் ஆயிலும் சில்லென்ற நிலைக்குத் திரும்பும். என்ஜின் ஆயில் மேலும் கெட்டுப் போகாமல் இருப்பதை இது தடுக்கும். கெட்டுப் போன என்ஜின் ஆயில் டர்போசார்ஜரின் பியரிங்குகளைச் சேதப்படுத்தும்.

**‘பியூயல் காலி’ என்ற நிலைமை ஏற்பட்டதும் டீசல் என்ஜினை மீண்டும் ஸ்டார்ட் செய்தல்.**
என்ஜின் நின்று போனதும் குறைந்த பியூயல் வார்னிங் லைட் மற்றும் மால்ஃபங்ஷன் இண்டிகேட்டர் லைட்டும் எரிய ஆரம்பித்தால், பின்வரும் செய்முறையைக் கடைப்பிடிக்கவும்:


1) பியூயல் டேங்க்கை நிரப்பவும்
2) இக்னிஷன் சாவியை “ON” (ஆன்) பொஸிஷனில் 5-10 விநாடிகள் வரை வைத்திருந்து எரிபொருளை நிரப்பவும்
3) மேற்சொல்லப்பட்ட ஸ்டார்ட் செய்முறையைப் பயன்படுத்தி என்ஜினை ஸ்டார்ட் செய்யவும்

என்ஜின் இயங்க ஆரம்பித்த பின் மால்ஃபங்ஷன் இண்டிகேட்டர் லைட் தொடர்ந்து எரிந்தால், என்ஜினில் பிரசினை இருக்கிறதென்று அர்த்தம். மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் சென்று என்ஜினை சோதனை செய்து கொள்ளவும்.

# டிரான்ஸ்மிஷனைப் பயன்படுத்துதல்

## மனுவல் டிரான்ஸ்மிஷன்

**உதாரணம்**




65D038

**ஆரம்பித்தல்**
க்ளட்ச் பெடலை அது தரையில் படும் வரை அழுத்தி முதல் அல்லது 2-வது கியருக்குச் சென்று இயக்க ஆரம்பிக்கவும். பார்க்கிங் பிரேக்கை விடுவித்த பின், க்ளட்சைப் படிப்படியாக விடவும். என்ஜினின் சப்தத்தில் மாற்றம் தெரிந்தால், ஆக்சிலரேட்டரை மெதுவாக அழுத்தி, க்ளட்சைப் படிப்படியாக விடவும்.

**குறிப்பு:*
- இயல்பான நிலையில் வாகனம் செலுத்த, அதை இயக்க ஆரம்பிப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்ட கியர் பொஸிஷன் 2-வது கியர் ஆகும்.
- குறுக்கு பயணம் செல்லும்போதும், மெதுவாக அல்லது எடையைத் தூக்கிச் செல்லும்போதும் பரிந்துரைக்கப்பட்ட கியர் பொஸிஷன் 1-வது கியர் ஆகும்.

**மாற்றுதல்**
எல்லா முன்புற கியர்களும் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன; இதனால் அமைதியான, சுலபமான விதத்தில் மாற்றலாம். கியர்களை மாற்றுவதற்கு முன்பு க்ளட்ச் பெடலை மறக்காமல் எப்போதும் அழுத்தவும்.

**அதிகபட்சமாக அனுமதிக்கப்பட்ட வேகத்தை மாற்றுதல்**

**(பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)**

| வேகத்தை மாற்றுதல் | km/h |
|---|---|
| 2-வதிலிருந்து 1-வதுக்கு | 20 |
| 3-வதிலிருந்து 2-வதுக்கு | 70 |
| 4-வதிலிருந்து 3-வதுக்கு | 100 |
| 5-வதிலிருந்து 4-வதுக்கு | 130 |

**(டீசல் எஞ்ஜின் மாடலுக்காக)**

| வேகத்தை மாற்றுதல் | km/h |
|---|---|
| 2-வதிலிருந்து 1-வதுக்கு | 5 |
| 3-வதிலிருந்து 2-வதுக்கு | 40 |
| 4-வதிலிருந்து 3-வதுக்கு | 60 |
| 5-வதிலிருந்து 4-வதுக்கு | 85 |

**குறிப்பு:*
*ஓட்டும் சூழல் மற்றும்/அல்லது வாகனத்தின் நிலைமையைக் கருதி அதிகபட்சமாக*

*அனுமதிக்கப்பட்ட வேகத்தை நீங்கள் அதிகரிக்க கூடாது.*

**அறிவிப்பு**

**குறைந்த கியருக்கு மாறும்போது, அதிபட்சம் அனுமதிக்கப்பட்ட வேகத்தை விட அதிகமான வேகத்தில் இல்லாததை உறுதி செய்யவும்; இல்லையேல், என்ஜின் தீவிரமான சேதத்துக்கு உள்ளாகும்.**

**⚠ எச்சரிக்கை**

- **சரிவில் கீழ்நோக்கிப் பயணிக்கும்போது அல்லது நீளமான, செங்குத்தான பாதையில் செல்லும்போது வேகத்தைக் குறைத்து, குறைவான கியருக்கு மாறவும். குறைவான கியரில் சென்றால் பிரேக்கிங் வசதியைத் தர என்ஜினுக்குப் பேருதவியாக இருக்கும். பிரேக்கை அழுத்தி பயணிப்பதைத் தவிர்க்கவும்; அல்லது அவை மிகவும் சூடாகி பிரேக்குகள் வேலை செய்யாமல் போய்விடும்.**
- **வழுக்கும் பாதைகளில் வாகனம் ஓட்டும்போது, கியர் மாற்றுவதற்கு முன் வேகத்தைக் குறைக்க மறந்து விடாதீர்கள். என்ஜின் வேகத்தில் அதிக/திடீர் மாற்றங்கள் இருந்தால் உராய்வு சக்தி குறைவதுடன் உங்களால் வாகனத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடியாமலும் போகலாம்.**

**அறிவிப்பு**

**ரிவர்ஸ் கியருக்குச் செல்லும் முன் வாகனம் அசையாமலிருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.**

**அறிவிப்பு**

- **வாகனம் ஓட்டும்போது அல்லது சரிவுப் பாதையில் செல்லும்போது க்ளட்ச் சேதமடைவதைத் தவிர்க்க க்ளட்ச் பெடலைப் பாதத்தை வைக்கப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும். கியர் மாற்றும்போது க்ளட்சை நன்கு அழுத்தவும்.**
- **மாறும்போது அல்லது ஸ்டார்ட் செய்யும்போது என்ஜினின் வேகத்தை அதிகரிக்கக் கூடாது. அவ்வாறு செய்தால் என்ஜினின் ஆயுள் பாதிக்கப் படுவதுடன் எளிய முறையில் கியர் மாறுவதும் பாதிக்கப்படும்.**

## பார்க்கிங் சென்சார்கள்

### (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)

- பார்க்கிங் சென்சார் அமைப்பு, பம்பர் அருகே உள்ள தடைகளை அறிய அல்ட்ராசானிக் சென்சார்களை பயன்படுத்துகிறது. காரை பார்க் செய்யும் போது அல்லது மெதுவாக இயக்கும் போது, ஏதேனும் தடைகள் உணரப்பட்டால், பஸ்ஸர் ஒலி மூலம் உங்களை எச்சரிக்கும்.
- இந்த அமைப்பு அல்ட்ராசானிக் அலையை வெளிப்படுத்துகிறது. தொடர்புடைய சென்சார்,அது தடைகள் மீது பட்டு திரும்புவதை உணர்கிறது. அல்ட்ரானிக் அலை தடையை அடைந்து, திரும்பி வருவதற்கான நேரத்தை அமைப்பு கணக்கிட்டு அதன் அடிப்படையில் தடையின் இருப்பிடத்தைத் தீர்மானிக்கிறது.
- இக்னிஷன் ஸ்விட்சை "ON" (ஆன்) செய்து, கியர்ஷிப்ட் லீவரை "R" பொசிஷனில் வைத்திருக்கும்போது பார்க்கிங் சென்சாரைப் பயன்படுத்தலாம். சாலை ஓரமாக காரை நிறுத்த முயலும் போது,, பக்கவாட்டில் பார்க் செய்யும் போது, காரேஜில் வாகனத்தை நிறுத்தும்போது, குறுகிய சந்தில் செல்லும்போது, தடைகள் உள்ள பகுதியில் மெதுவாகச் செல்லும்போது, இந்த அம்சம் பயனுள்ளதாக இருக்கும்.

**⚠ எச்சரிக்கை**


- **பார்க்கிங் சென்சார் பஸ்ஸர் மூலம் தடைகளை உணர்த்தினாலும் நீங்களும் கவனமாக ஓட்ட வேண்டும்.**
- **குறிப்பிட்ட பகுதிக்குள் உள்ள தடைகளை மற்றும் குறிப்பிட்ட வேகத்தில் இயக்கப்படும் போது மட்டுமே சென்சாரால் தடைகளை உணர முடியும். எனவே சிக்கலான இடங்களில், நேராக மற்றும் பக்கவாட்டுக் கண்ணாடியில் பார்த்தபடி நீங்கள் மெதுவாக இயக்க வேண்டும். பார்க்கிங் சென்சார் மட்டுமே கொண்டு வாகனத்தைக் கட்டுப்படுத்தினால் விபத்து ஏற்படும் அபாயம் அதிகம்.**

*குறிப்பு:*
*கியர்ஷிப்ட் லீவர் "R" பொசிஷனுக்கு மாற்றப்படும் போது, பஸ்ஸர் ஒரு முறை ஒலிக்கும்.*

**அறிவிப்பு**

**பார்க்கிங் சென்சார்கள் டிரைவருக்கு உதவுவதற்கு மட்டுமே.**

சென்சார் பொருத்துமிடம்
பின்பக்க பம்பரில்




77PM03002

(1) ரியர் சென்சார் (2 இடங்கள்)

**அறிவிப்பு**

- சென்சார் பகுதியில் இடிப்பது அல்லது அதிக அழுத்தம் கொண்ட கார் வாஷர் முனையைச் செலுத்துவதைத் தவிர்க்கவும். இல்லை எனில் சென்சார் சேதமாகும்.
- பம்பர் கடின்மான பொருள் மீது மோதினால், அதில் உள்ள சென்சார் சரியாக வேலை செய்யாமல் போகலாம். இவ்வாறு நிகழ்ந்தால், மாருதி சுசுகி அங்கிகரிக்கப்பட்ட ஒர்க்ஷாப்பில் சென்சாரை சோதனை செய்யவும்.


## சென்சார் செயல்பாடு

கியர்ஷிப்ட் லீவரின் கீழ்கண்ட நிலைகளுக்கு ஏற்ப சென்சார்கள் இயங்கும்:

| கீர் ஷிப்ட் லிவர் பொசிஷன் | R | N, 1 முதல் – 5 வரை |
|---|---|---|
| ரியர் சென்சார் | ON (ஆன்) | OFF (ஆஃப்) |

### தடைகள் உணரப்படக்கூடிய உத்தேசமான பகுதிகள்

உதாரணம்



78MM05003

- சென்சாரிடமிருந்து 20 cm (8 in) அல்லது சென்சார் அடையில் உள்ள தடையை உணர முடியாது
- வாகனத்தின் பின் பக்கத்தில் இருந்து 1.5 m (5 ft) சுவர் போன்ற தடைகளை சென்சார்கள் உணரும்.

**⚠ எச்சரிக்கை**

கீழ்கண்ட நிலைகளில், சென்சார்களால் தடைகளைச் சரியாக உணர முடியாததால், பார்க்கிங் சென்சார் அமைப்பு வழக்கமான முறையில் செயல்படாமல் போகலாம்.

- சென்சார்கள், மண், ஐஸ் அல்லது பிற பொருட்களால் சூழப்பட்டிருந்தால். (வழக்கமான செயல்பாட்டிற்கு, இந்தப் பொருட்களை அகற்ற வேண்டும்).
- தண்ணீர் பாய்ச்சியதால் அல்லது மழையால் சென்சார்கள் ஈரமாக இருந்தால்.
- சென்சார் கைகளால், ஸ்டிக்கர், துணை பொருட்களால் மறைக்கப்பட்டிருந்தால்
- சென்சார் உணரும் பகுதியில் துணை பொருள், வேறு பொருள் இருந்தால்.
- டோ ஹுக், கார்னர் போல்கள், ரேடியோ ஆண்டனா போன்றவை சென்சாரில் பொருத்தப்பட்டிருந்தால்.
- சஸ்பன்ஷன் மாற்றம் அல்லது இதர காரணங்களால் பம்பர் உயரம் மாறியிருந்தால்.
- நேரடி சூரிய வெளிச்சம் அல்லது குளிர் நிலையால் சென்சார் பகுதி உஷ்ணமாக அல்லது குளிர்ச்சியாக இருந்தால்.
- வாகனம் கடினமாக, தரை, கற்கள் நிறைந்த சாலை, வயலில் இருந்தால்.
- வாகனம் செங்குத்தான முறையில் இருந்தால்.

(தொடர்ச்சி)

**⚠ எச்சரிக்கை**

(தொடர்ச்சி)

- சென்சார் மற்ற வாகன ஹார்னில் இருந்து, எஞ்சினில் இருந்து, ஏர்பிரேக்கிங் அமைப்பில் இருந்து (பெரிய வாகனங்கள்) அல்லது பார்க்கிங் சென்சாரில் இருந்து அல்ட்ர்சானிக் இறைச்சல் குறுக்கிட்டால்.
- தடைகள் சென்சாருக்கு மிகவும் அருகில் இருந்தால்.
- கண்ணாடி போன்ற பிரதிபலிக்கும் பொருள்களின் கோணத்தில் சென்சார்கள் இருந்தால், (தடையில் இருந்து அல்ட்ராசானிக் அலைகள் திரும்பி வராது).

- கீழ்க்கண்ட பொருட்களை சென்சார் சரியாகக் கண்டறிய முடியாது.
- கம்பி வலை, கயிறு போன்ற மெலிதான பொருட்களால் ஆனவை.
- சதுர கற்கள் அல்லது கூறான முனை கொண்ட பொருட்கள்.
- சாலை குறியீடு போன்ற மேல்பகுதியில் பெரிதாக இருக்கும் உயரமான பொருட்கள்
- மைல்கல் போன்ற குறைந்த சுயவிவர பொருள்கள்.
- பருத்தி மற்றும் பனிபோன்ற ஒலியை உள்வாங்கிக்கொள்ளும் பொருட்கள்.

*குறிப்பு:*

*(பை-பியூயல் இஞ்ஜின் மாடலுக்காக)*

- *மெல்லிய கம்பங்கள் அல்லது சென்சாரை விடத் தாழ்வாக இருக்கும் பொருட்கள், தொலைவில் இருக்கையில் உணரப்பட்டாலும்கூட வாகனம் அருகில் வரும்போது உணரப்படாமல் போகலம்.*
- *சாலை அறிவிப்பு அல்லது அதே போன்ற பொருளை உண்மையான தொலைவைவிடக் குறைந்த தொலைவில் இருப்பதாக அமைப்பு கணக்கிடலாம்.*

**பார்க்கிங் சென்சாரின் தடை அறிகுறி**

தடையைக் கண்டறிந்ததும் பார்க்கிங் சென்சார் உள் பஸ்ஸரை ஒலிக்கச்செய்யும்.

- பின்பக்கம் உள்ள சென்சார் தடையைக் கண்டறியும்போது, பின் சீட் பின்னே உள்ள பஸ்ஸர் ஒலிக்கும்.
- சுவர் போன்ற தடைகள் சென்சாரால் உணரப்பட்டதும் எச்சரிகை.

| தொலைவு தோராமையாக | பஸ்ஸர் |
|---|---|
| 100 – 150 cm<br>(39 – 59 in) | சிறிய இடைவெளியில் சிறிய பீப் |
| 60 – 100 cm<br>(24 – 39 in) | சிறிய இடைவெளியில் சிறிய பீப் |
| குறைவாக<br>60 cm (24 in) | தொடர் பீப் |


### வார்னிங் மற்றும் இண்டிகேட்டர் செய்திகள்

பார்க்கிங் அமைப்பு தொடர்பாக பிரச்னை அல்லது வார்னிங் இருந்தால், பஸ்ஸர் அதை தெரிவிக்கும். அதன் வழிமுறைகளை பின்பற்றவும்.

- பஸ்ஸர் இடைவிடாமல் ஒலிக்கும். இது சென்சார் பாதிப்பை உணர்த்தும். மென்மையான துணியால் துடைக்கவும். துடைத்த பிறகும் பஸ்ஸர் நிற்காவிட்டால்,பார்க்கிங் சென்சார் அமைப்பில் பிரச்சனை இருக்கலாம். மாருதி சுசுகி அங்கீகரிக்கப்பட்ட ஒர்க்ஷாப்பில் வாகனத்தைச் சோதனை செய்யவும்.

## பிரேக்கிங்

உதாரணம்



60G165S

வாகனம் வேகமாகச் சென்று கொண்டிருந்தால் வாகனத்தை நிறுத்தும்போது தேவைப்படும் தூரமும் அதிகரிப்பது இயல்பானது. மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் (37 மைல்) செல்லும்போது வாகனத்தை நிறுத்தத் தேவையான தூரமானது பிரேக்கிங் தூரமான மணிக்கு 30 கி.மீ. (19 மைல்) என்பதை விட 4 மடங்கு அதிகமாக இருக்கும்.

உங்களுக்கும் வாகனம் நிறுத்தப்பட வேண்டிய இடத்துக்கும் அதிக தூரம் இருக்கும்போது பிரேக்கை அழுத்தி, படிப்படியாக வேகத்தைக் குறைக்கவும்.

**⚠ எச்சரிக்கை**

**பிரேக் டிரம்முக்குள் தண்ணீர் புகுந்துவிட்டால் பிரேக்கின் செயல்பாடு மோசமாகவும் கணிக்க இயலாததாகவும் ஆகலாம்.**
**தண்ணீரில் பயணம் செய்தபின் அல்லது வாகனத்தின் அடிப்பகுதியைச் சுத்தம் செய்தபின் வாகனத்தைக் குறைந்த வேகத்தில் செலுத்தி பிரேக்குகளைச் சோதனை செய்து அவை இயல்பாக இயங்குகிறதா என்று பார்க்கவும். பிரேக்குகள் வழக்கமான இயங்கும் நிலையைக் காட்டாதபோது, மெதுவாகச் செலுத்தும்போது அவற்றை அடிக்கடி இயக்கி, அவை பழையபடி ஆகும்வரை இதை மீண்டும் மீண்டும் செய்யவும்.**

### பவர் உதவியில் பிரேக்குகள்

பவர் உதவியில் பிரேக்குகள் உங்களது வாகனத்தில் உள்ளன. என்ஜின் நின்று விட்டால், வேறு காரணங்களால் மின்சக்தி உதவி இல்லாமால் போனால் உபரி பவர் உதவியில் பிரேக்குகள் உள்ளது. பிரெக் பெடலை ஒரு முறை அழுத்தி கீழ்நோக்கிப் பிடித்தால் வாகனத்தை முழுவதும் நிறுத்திவிட முடியும். பிரேக் பெடலை அழுத்தும்போது உபரி பவர் கொஞ்சம் பயன்படுத்தப்படுகிறது; ஒவ்வொரு முறை பெடல் அழுத்தப்படும்போதும் அதன் அளவு குறைகிறது. பெடலை மிருதுவாக, சீராக அழுத்தவும். பெடலை பம்ப் செய்யாதீர்கள்.


**⚠ எச்சரிக்கை**

**பிரேக் அமைப்பில் உபரி பவர் இல்லா விட்டாலும், பிரேக் பெடலை வழக்கத்தை விடக் கடினமாக அழுத்துவதன் மூலம் வாகனத்தை உங்களால் நிறுத்த முடியும். ஆயினும் நிறுத்தும் தூரம் அதிகமாகி விடலாம்.**

# ஓட்டுவதற்கான குறிப்புக்கள்

ரன்னிங்-இன்.......................................................................... 4-1
கேட்லிடிக் கன்வெர்ட்டர்....................................................... 4-1
எரிபொருள் சிக்கனத்தை மேம்படுத்துவது .............................. 4-2
நெடுஞ்சாலைகளில் வாகனத்தை ஓட்டுவது ........................... 4-3
மலைப் பிரதேசங்களில் வாகனத்தை ஓட்டுவது ...................... 4-3
வழுகும் தன்மையுடைய சாலைகளில் வாகனத்தை
ஓட்டுவது ............................................................................... 4-4
ஈரமான சாலைகளில் வாகனத்தை ஓட்டுவது ......................... 4-4
பாதுகாப்பாக வாகனத்தை ஓட்டுவதற்கு
‘செய்ய வேண்டியவை’ மற்றும் ‘செய்யக் கூடாதவை’ ............. 4-5
பாதுகாப்பு எல்லைக்கோடு .................................................... 4-6

உதாரணம்



52D078S

**⚠ எச்சரிக்கை**

- சீட் பெல்ட்டை எப்போதும் தவறாமல் அணியவும். சீட் பெல்ட்டுக்களைப் பயன்படுத்தி ஓட்டுநரும் பயணிகளும் எப்போதும் பத்திரமாக இருக்க வேண்டும். சீட் பெல்ட்டுகளை முறையாகப் பயன்படுத்துவது பற்றித் தெரிந்து கொள்ள 'சீட் பெல்ட்' பிரிவில் தரப்பட்டுள்ள குறிப்புக்களைப் படிக்கவும்.
- மது அருந்தி விட்டோ அல்லது வேறு மாத்திரை உட்கொண்ட பின்னரோ வாகனம் ஓட்டாதீர்கள். மது, மாத்திரைகள் பாதுகாப்பாக ஓட்டும் உங்கள் திறமையை மோசமாகப் பாதித்து, உங்களுக்கும் பிறருக்கும் காயம் உண்டாகும் அபாயத்தையும் அதிகரிக்கும். களைப்பாக இருக்கும்போதும், உடல்நலம் சரியாக இல்லாதபோதும், எரிச்சல்/மன அழுத்தத்தில் இருக்கும்போதும் வாகனத்தை ஓட்டுவதைத் தவிர்க்கவும்.

## ரன்னிங்-இன்


*அறிவிப்பு*

ஆரம்பகாலத்தில் காட்டும் கவனத்தைப் பொறுத்தே என்ஜினின் வருங்கால செயல்திறன் மற்றும் நம்பகத்தன்மை இருக்கும். வாகனம் ஓட்ட ஆரம்பித்த முதல் 960 கி.மீ. வரை கீழுள்ள முன்னெச்சரிக்கைகளைப் பின்பற்றுவது மிகவும் முக்கியம்.

- வாகனத்தைச் செலுத்த ஆரம்பித்ததும் உடனே என்ஜினின் வேகத்தை அதிகரிக்க வேண்டாம். அதன் வேகத்தைப் படிப்படியாக அதிகரிக்கவும்.
- நிலையான வேகத்தில் நீண்ட காலம் வரை வாகனத்தை இயக்குவதைத் தவிர்க்கவும். வேகத்தை அடிக்கடி மாற்றினால் நகரும் பாகங்கள் உடையக் கூடும்.
- நிறுத்தப்பட்ட வண்டியைக் கிளப்பும்போது மெதுவாக வாகனத்தைச் செலுத்தவும். அதிவேகத்தில் வாகனத்தைக் கிளப்ப வேண்டாம்.
- முதல் 320 கி.மீ. வரை வாகனத்தை ஓட்டும்போது பிரேக்கை மிக அதிக அழுத்தத்துடன் அழுத்தாமல் இருக்கவும்.
- டிரான்ஸ்மிஷன் உயர்ந்த கியரில் இருக்கும்போது வாகனத்தை மெதுவாகச் செலுத்தாதீர்கள்.
- மிதமான என்ஜின் வேகத்திலேயே வாகனத்தைச் செலுத்தவும்.
- எதையும் வாகனத்துடன் கட்டி இழுக்காதீர்கள்.

## கேட்லிடிக் கன்வெர்ட்டர்

உதாரணம்



77PH201

வாகனம் உமிழும் புகையில் இருக்கும் தீங்கு தரும் மாசுக்களைக் குறைப்பதே கேடலிடிக் கன்வெர்ட்டரின் பலனாகும். கேடலிடிக் கன்வெர்ட்டர்கள் உள்ள வாகனங்களில் லீடட் எரிபொருளைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. ஏனெனில், கேட்டலிஸ்ட் அமைப்பின் மாசுக்களைக் குறைக்கும் அம்சங்களை லீட் செயலிழக்க வைத்து விடுகிறது.

அன்லீடட் எரிபொருளைப் பயன்படுத்தினால் இயல்பான பயன்பாட்டில் வாகனத்தின் ஆயுள் முழுவதும் வரும்படிதான் கன்வெர்ட்டர் வடிவமைக்கப் பட்டுள்ளது. கன்வெர்ட்டருக்கென்று சிறப்பான பராமரிப்பு எதுவும் தேவைப்படாது. என்ஜினைச் சரியாக சர்வீஸ் செய்து வைப்பது மிக முக்கியமானது. சரியாக டியூன் செய்யப்படாத என்ஜின் சரியாக வேலை செய்யாததால் கேடலிஸ்ட் அதிகம் சூடாகும் நிலை ஏற்படலாம். இதனால் கேடலிஸ்டும் வாகனத்தின் பிற பாகங்களும் நிரந்தர சூடாகும் சேதாரம் நிகழலாம்.

*அறிவிப்பு*


**கேடலிஸ்ட் மற்றும் வாகனத்தின் பிற பாகங்கள் சேதமடைவதைத் தவிர்க்க:**

- **என்ஜினை எப்போதும் முறையான செயல்பாட்டு நிலையில் பராமரிப்பது.**
- **என்ஜினில் மால்ஃபங்ஷன் அதாவது என்ஜின் பழுது அல்லது செயல்பாட்டுக் கோளாறு ஏற்பட்டால் வாகனத்தை உடனடியாக சர்வீஸ் செய்து கொள்ளுங்கள்.**
- **டிரான்ஸ்மிஷன் கியரில் உள்ளபோது வாகனம் இயக்கத்தில் இருக்கும்போது என்ஜினை ஆஃப் செய்யாதீர்கள்.**
- **தள்ளியோ, கட்டி இழுத்தோ அல்லது சரிவில் பயணித்தோ என்ஜினை ஸ்டார்ட் செய்ய முயற்சிக்காதீர்கள்.**
- **'ஐட்லிங்' சரியாக இல்லையென்று தோன்றினால் அல்லது வேறு கோளாறுகள் இருந்தால் வாகனத்தை 'ஐடில்' பொஸிஷனில் நீண்ட நேரம் வரை வைக்காதீர்கள்.**
- **வாகனத்தை சும்மாவே வைத்திருப்பது கடினமானதாக இருந்தாலோ (அல்லது) வேறெந்தக் குறைபாடும் இல்லாமல் இருந்தால் நீண்டகாலம் வரை வாகனத்தை இயக்காமல் சும்மா வைத்திருக்காதீர்கள்.**
- **பியூயல்பியூயல் தொட்டி கிட்டத்தட்ட காலியாகும் வரை எரிபொருளை நிரப்பாமல் இருக்காதீர்கள்.**
- **அதிக வேகத்தில் வாகனத்தைச் செலுத்துவதைத் தவிர்க்கவும்.**

**⚠ எச்சரிக்கை**

**வாகனத்தை எங்கு பார்க்கிங் செய்கிறீர்கள்/செலுத்துகிறீர்கள் என்பது பற்றி கவனமாக இருக்கவும்; கேடலிடிக் கன்வெர்ட்டர் மற்றும் இதர பாகங்கள் மிகவும் சூடாகி விடாமல் பார்த்துக்கொள்ளவும். மற்ற வாகனங்களைப் போலவே, தீப்பற்றக்கூடிய பொருள்களாகிய காய்ந்த புல்/இலைகளை வாகனத்தின் சூடான புகைபோக்கி சிஸ்டத்தின் அருகில் இருக்கும் இடத்தில் வாகனத்தை பார்க் செய்யாதீர்கள் அல்லது ஓட்டாதீர்கள்.**

**உதாரணம்**



82DY05

## பியூயல் சிக்கனத்தை அதிகரித்தல்

பியூயல் சிக்கனத்தை அதிகரிக்கப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

**வாகனத்தை அதிக நொடிகள் வரை 'ஐடிலிங்'ல் விடுவதைத் தவிர்க்கவும்.**
பார்க்கிங் செய்யும்போது ஒரு நிமிடத்துக்கு மேல் காத்திருக்க வேண்டுமானால் என்ஜினை ஆஃப் செய்து விட்டு பின்னர் "ON" (ஆன்) செய்யவும். சில்லென்றிருகும் என்ஜினைச் சூடாக்கும்போது, அதை ஐடிலிங்-ல் விடாமல் முழு த்ராட்டிலைக் கொடுத்து என்ஜின் அதிகபட்ச வெப்பநிலையை அடையும் வரை காத்திருக்கவும். வாகனம் ஓட்டும்போது என்ஜின் தானாகவே சூடாவதற்கு அனுமதிக்கவும்.


**திடீரேன வேகத்துடன் ஓட்டுவதைத் தவிர்க்கவும்**
எடுத்தவுடன் அதிவேகத்தில் ஓட்டினால் அல்லது ஓட்டும்போது துரிதமாக வேகத்தைக் கூட்டினால் தேவையில்லாம பியூயல் வீணாவதுடன் என்ஜினின் ஆயுளும் குறைந்து விடும். வாகனத்தை மெதுவாகக் கிளப்பவும்.

**தேவையற்ற இடங்களில் வாகனத்தை நிறுத்த வேண்டாம்.**
தேவையில்லாமல் வேகத்தைக் குறைத்து வாகனத்தை நிறுத்தாதீர்கள். முடிந்தவரை மெதுவான, சீரான வேகத்திலேயே வாகனத்தைச் செலுத்தவும். மெதுவாக ஓட்டி விட்டுப் பின் வேகமெடுத்தால் பியூயல் அதிக அளவில் செலவாகும்.

**சீரான வேகத்தைக் கடைப்பிடிக்கவும்**
சாலை, போக்குவரத்து நிலவரம் அனுமதிக்கும் சீரான வேகத்தில் வாகனத்தைச் செலுத்தவும்.

**ஏர்-க்ளீனர் சுத்தமாக வைத்திருக்கவும்**

**உதாரணம்**



60A183S

ஏர்-க்ளீனரில் தூசி இருந்தால் மின்சக்தி குறைந்த அளவில் வெளிவரும், அதனால் பியூயல் அதிகம் செலவாகும்.

**எடையை முடிந்தவரை குறைவாக வைக்கவும்**
எந்த அளவுக்கு எடை அதிகமாகிறதோ, அந்த அளவுக்கு எரிபொருளும் செலவாகும். தேவைப்படாத லக்கேஜ்/சரக்குகளை வாகனத்தில் வைக்காமல் எடுத்து விடுங்கள்.

**டயரில் காற்றழுத்தம் சரியான அளவில் இருக்க வேண்டும்**
காற்றழுத்தம் குறைந்த டயர்கள் எரிபொருளை வீணாக்குவதுடன் டயர்களின் எதிர்ப்புச் சக்தியைக் குறைத்து விடுகின்றன. ஓட்டுநரின் கதவு லாக் செய்யும் பில்லரில் உள்ள லேபிளில் சொல்லியுள்ளதைப் போன்று சரியான காற்றழுத்தத்தில் டயர்களை வைத்திருக்கவும்.

## நெடுஞ்சாலைகளில் வாகனத்தைச் செலுத்துதல்


நெடுஞ்சாலைகளில் வாகனத்தில் பயணிக்கையில் பின்வருவனவற்றைக் கவனிக்கவும்:

- வாகனத்தின் வேகத்தைப் பொறுத்து அதை நிறுத்தும் தூரமும் அதிகரிக்கும். நிறுத்தும் இடத்திற்குச் சற்று முன்னதாகவே பிரேக்குகளை அழுத்தினால் நிறுத்தும் தூரம் சற்று அதிகமாக உங்களுக்குக் கிடைக்கும்.
- மழை நாட்களில் ஹைட்ரோ-ப்ளேனிங் நிகழலாம். சாலையின் பரப்புக்கும் வாகனத்தின் டயர்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு இல்லாத நிலையே (மழைநீர் தேங்கி விடுவதால்) ஹைட்ரோ-ப்ளேனிங் எனப்படும் ஹைட்ரோ-ப்ளேனிங் சமயத்தில் ஸ்டீயரிங்கைச் செலுத்துவது கடினமாக இருக்கலாம்; வாகனம் கட்டுப்பாடை இழக்கும் நிலையும் உருவாகலாம். சாலைப் பரப்பு ஈரமாக இருக்கும்போது குறைந்த வேகத்தில் வாகனத்தைச் செலுத்தவும்.
- அதிக வேகத்தில் செலுத்தினால், வாகனம் காற்றால் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது. எனவே, வேகத்தைக் குறைத்து, எங்கிருந்தாவது அடிபடுமா எனக் கவனத்துடன் பார்த்து (கால்வாய்ப் பக்கம், மலைப்பகுதி அல்லது வேறு பெரிய வாகனங்கள் ஓவர்டேக் செய்யும்போது இது நேரலாம்) வாகனத்தை ஓட்ட வேண்டும்.

## மலைப் பகுதிகளில் வாகனத்தை ஓட்டுவது

- சரிவான மலைப்பகுதிகளில் ஏறும்போது, வாகனத்தின் வேகம் குறைந்து மின்சக்தியும் குறையக்கூடும். அவ்வாறு நிகழ்ந்தால், குறைவான கியருக்கு மாறினால்தான் என்ஜின் மீண்டும் வழக்கமான செயல்பாட்டு நிலைக்குத் திரும்பும். வாகனம் தன் வேகத்தை இழக்கும் முன்னரே கியரைச் சீக்கரமாக மாற்றவும்.
- மலைப்பகுதியில் கீழ்நோக்கிப் பயணிக்கும்போது வேறு குறைவான கியருக்கு மாறுவதற்கு மட்டுமே என்ஜின் பயன்படுத்தப்பட வேண்டும்.

**உதாரணம்**




77PH003

**⚠ எச்சரிக்கை**

**மலைப்பகுதியில் கீழிறங்கும்போது ப்ரேக் பெடலை அடிக்கடி / நீண்ட நேரம் வரை அழுத்திப் பிடிக்காமல் இருக்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பிரேக்குகள் அதிகச் சூடாகி பிரேக்குகளின் செயல்திறன் குறையலாம். இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையைச் செய்யா விட்டால் ஓட்டுபவர் வாகனத்தின் கட்டுப்பாட்டை இழக்கக்கூடும்.**


**சமதளத்திலிருந்து மலைப்பகுதிக்கு மேல்நோக்கி / கீழ்நோக்கிப் பயணிக்கும்போது**

- பார்க்கிங் பிரேக்கை உறுதியாக அழுத்தி, வாகனம் பின்புறம் சென்று விடாதபடி பார்த்துக் கொள்ளவும்.
- க்ளட்ச் பெடலை அழுத்தி கியர்ஷிஃப்ட்லீவரை 1-வது செலக்ட் பொஸிஷனுக்கு மாற்றவும்.
- க்ளட்சை எப்போதும் விட்டு விடாதீர்கள்.
- கிளம்பத் தயாரானவுடன் ஆக்சிலரேட்டர் பெடலை அழுத்தி அதேநேரம் க்ளட்ச் பெடலையும் மெதுவாக ரிலீஸ் செய்யவும். வாகனம் நகரத் தொடங்கியவுடன், பார்க்கிங் பிரேக்கைப் படிப்படியாக விடுவிக்கவும்.

*அறிவிப்பு*

**மலைப்பகுதியிலிருந்து சமதளத்துக்கு இறங்கும் சமயத்தில், இக்னிஷன் சாவியை ஒருபோதும் "LOCK" (லாக்) நிலைக்குத் திருப்பவே திருப்பாதீர்கள். அப்படிச் செய்தால் மாசுக் கட்டுப்பாடு அமைப்பு பாதிக்கப்படலாம்.**

## வழுக்கும் சாலைகளில் வாகனத்தை ஓட்டுவது



82DY06

காய்ந்திருக்கும் சாலைகளில் ஓட்டுவதை விடக் குறைவான வேகத்தில் ஈரமான சாலைகளில் வாகனத்தை ஓட்டினால் பிரெக் பிடிக்கும்போது டயர்கள் வழுக்குவது தவிர்க்கப்படும். ஐஸ் கட்டிகள் நிறைந்த, பனிமூடிய அல்லது சேறு அதிகமுள்ள சாலைகளில் ஓட்டும்போது வாகனத்தின் வேகத்தைக் குறைத்து திடீரென வேகமெடுப்பதையும், சட்டென்று பிரேக் போடுவ்தையும், ஸ்டீயரிங்கை உடனுக்குடன் திருப்புவதையும் தவிர்க்க வேண்டும்.

### வாகனம் சாலையில் மாட்டிக் கொண்டால்

உங்களது வாகனம் பனி, சேறு அல்லது மணலில் சிக்கிக் கொண்டால், பின்வருவனவற்றைச் செய்து பார்க்கவும்:

1) டிரான்ஸ்மிஷன் கியரை முன்னும் பின்னும்; அதாவது 1-வது கியருக்கும் ரிவர்ஸ் கியருக்கும் இடையே இயக்கவும். இதனால் ஏற்படும் குலுக்கிய இயக்கத்தால் வாகனத்தை விடுவிக்கத் தேவையான வேகம் உங்களுக்குக் கிடைக்கலாம். ஆக்சிலரேட்டரை மெதுவாக அழுத்தி சக்கரங்கள் குறைந்தபட்சச் சுழலும் நிலையில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும். கியரை மாற்றும்போது உங்களது பாதத்தை ஆக்சிலரேட்டரிலிருந்து எடுத்து விடுங்கள். என்ஜினின் வேகத்தை அதிகரிக்காதீர்கள். சக்கரங்கள் அதிக அளவில் சுழன்றால் டயர்கள் மண்ணுக்குள் மேலும் ஆழமாக மாட்டிக் கொண்டு அதனால் வாகனத்தை நகர்த்துவது இன்னும் கடினமாகலாம்.
2) சில நிமிடங்கள் வரை முயன்ற பின்னும் வாகனம் நகரவில்லை என்றால், வேறொரு வாகனத்தில் கட்டி அதை வெளியே இழுக்கவும்.

**⚠ எச்சரிக்கை**

**வாகனத்தை வெளியே எடுக்க முயலும்போது யாரையும் அருகில் நிற்க விடாதீர்கள்; சுழலும் சக்கரங்களின் வேகம் மணிக்கு 40 கி.மீ.-க்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். சக்கரங்கள் வேகமாகச் சுழன்றால் ஓட்டுநருக்குக் காயம் மற்றும்/அல்லது வாகனத்துக்கும் சேதம் ஏற்படலாம்.**


*அறிவிப்பு*

**சக்கரங்களைச் சுழலவிட்டு வாகனத்தை வெளியே எடுக்கும் முயற்சியைச் சில நிமிடங்களுக்கு மேல் மேற்கொள்ள வேண்டாம். இம்முயற்சியைத் தொடர்ந்து மேற்கொண்டால் என்ஜின் அதிகச் சூடாகலாம் அல்லது டிரான்ஸ்மிஷன் சேதமடையலாம்.**

## ஈரமான சாலைகளில் வாகனத்தைச் செலுத்துவது

அறிவிப்பு

- **ஈரமான சாலைகளில் வாகனத்தை ஓட்டும்போது சாலையில் இருக்கும் அதிக அளவு தண்ணிரைத் தாண்டி ஓட்டுவதைத் தவிர்க்கவும். என்ஜினில் அதிக அளவு தண்ணீர் நுழைந்தால் அதனால் என்ஜின் சேதமடையலாம். மேலும் அதன் மின்னணு பாகங்களும் பாதிக்கப்படலாம்.**
- **ஆழமாகத் தேங்கியுள்ள நீரில் வாகனம் மாட்டிக் கொண்டால், தண்ணீர் மட்டம் குறையும் வரை வாகனத்தைக் கிளப்ப முயற்சிக்க வேண்டாம்.**
- **தண்ணீர் அமுக்க இயலாத பொருள். எனவே என்ஜினுக்குள் இருக்கும் தண்ணீர் அதைச் சேதப்படுத்தி விடும்.**



82DY07

**⚠ எச்சரிக்கை**

**ஓட்டுவது பற்றி இப்பிரிவில் மேற்சொன்ன குறிப்புக்களுடன் சேர்த்து பின்வரும் முன்னெச்சரிக்கைகளைக் கடைப்பிடிப்பதும் மிக அவசியமாகும்.**

- **டயர்கள் எப்போதும் நல்ல நிலையில் இருப்பதை உறுதி செய்து, அவற்றின் காற்றழுத்தத்தையும் அவ்வப்போது சோதித்து வரவும். 'ஆய்வு மற்றும் பராமரிப்பு' பிரிவில் 'டயர்கள்' என்ற தலைப்பிலுள்ள விவரங்களைப் படிக்கவும்.**
- **மாருதி சுசூகி நிறுவனம் பரிந்துரைக்காத எந்த பிராண்டு டயர்களையும் பயன்படுத்த வேண்டாம். வெவ்வேறு அளவு/வகையான டயர்களைப் பின்/ முன்புற சக்கரங்களுக்குப் பயன்படுத்த வேண்டாம். ஓட்டுநரின் அருகில் உள்ள டோர் லாக் பில்லரிலுள்ள 'டயர் தகவல் லேபிளை' பார்த்து நாங்கள் குறிப்பிடும் டயர் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளவும்.**
- **அதிக அளவுள்ள டயர்கள் அல்லது விசேஷ 'ஷாக் அப்சார்பர்களை'ப் பயன்படுத்தி வாகனத்தின் உயரத்தை அதிகரிக்க முயற்சி செய்ய வேண்டாம். இதைச் செய்தால், வாகனத்தைக் கையாளும் பல செய்முறைகளை இது பாதிக்கும். பள்ளத்தில் செல்கையில் அதிக அளவுள்ள டயர்கள் வாகனத்தின் பிற பாகங்களுடன் உராய்ந்து சேதாரத்தை விளைவிக்கலாம் அல்லது டயர்களும் பாதிக்கப்படலாம்.**
- **தண்ணீரைத் தாண்டி வாகனத்தை ஓட்டியவுடன் மிதமான வேகத்தில் பிரேக்குகளைச் சோதித்து அவற்றின் இயல்பான பலன் தரும் நிலை கெட்டு விட்டதா என்பதைச் சோதிக்கவும். வழக்கம்போல் பலன் தரும் நிலையில் அவை இல்லையென்றால், மெதுவாக ஓட்டிக் கொண்டே பிரேக்குகளை மீண்டும் மீண்டும் அழுத்தி அவற்றின் இயல்புநிலை திரும்பும் வரை அவற்றைக் காய வைக்கவும்.**

## பாதுகாப்பாக வாகனம் ஓட்டுவதற்குச் 'செய்ய வேண்டியவை' மற்றும் 'செய்யக் கூடாதவை'


வாகனத்தைக் கையாளும்பொது அதீதமான அக்கறை தேவையில்லை. உங்களது பாதுகாப்புடன் சேர்த்து தெருவில் இருக்கும் பிறரின் பாதுகாப்பைப் பற்றியும் அக்கறையுடன் இருந்து, மிகச் சிறந்த, மிகவும் வசதியான ஓட்டும் அனுபவத்தைப் பெறவும்.

பாதுகாப்பான ஓட்டும் அனுபவத்தைப் பெற பின்வரும் அடிப்படை விதிகளைப் பின்பற்றவும். அவற்றைக் கவனமாகப் படித்து, புரிந்து கொண்டு பாதுகாப்பான, மகிழ்ச்சி தரும் வாகன ஓட்டும் அனுபவத்தை உணருங்கள்.

### ஸ்டார்ட் செய்தல்

1) முறையான டிரைவிங் பொஸிஷனில் ஓட்டுநரின் சீட்டை அட்ஜஸ்ட் செய்யவும்.
2) பின்புறக் காட்சியைப் பார்க்கும் கண்ணாடியை அட்ஜஸ்ட் செய்து முடிந்தவரை அனைத்தையும் பார்க்கும் நிலையில் செட் செய்யவும்.

**உதாரணம்**





77PM04002

3) நகர்வதற்கு முன், வாகனத்தை ஒட்டிச் சுற்றிலும் பார்த்து பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.
4) உடனடியாக வேகமாகச் செல்ல முயலாதீர்கள், இது ஆபத்தானது மட்டுமின்றி எரிபொருளையும் வீணாக்கும்.

### பொதுவான வாகனம் ஓட்டும் முறை

1) 'நில்' என்ற வாசகம் அல்லது குறியீடு தென்பட்டால் வாகனத்தை நிச்சயம் நிறுத்தவும். டிராஃபிக் விளக்குகள் அல்லது குறியீடுகள் இல்லாத போக்குவரத்து ஜங்ஷன் வழியே செல்லும்போது மெதுவாகச் சென்றால்தான் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும்.
2) மற்ற வாகனங்களுகிடையே செல்லும்போது போதுமான, பாதுகாப்பான இடைவெளி இருந்தால் மட்டுமே முன்செல்லும் வாகனம் திடீரென்று நிறுத்தப்பட்டால் நாம் அதன் மீது மோதாமல் தடுக்க முடியும்.
3) ஒரு வளைவில் திரும்புவதற்கு அல்லது வேறு பாதையில் செல்வதற்குக் குறைந்தபட்சம் 30 மீட்டருக்கு முன்பே 'டர்ன்' சிக்னலைப் போட்டு விட்டால் வாகனங்கள் இடித்துக் கொள்வதைப் பெருமளவில் தடுக்கலாம்.
4) ஒரு மூலையை நோக்கிச் செல்லும் முன்பு, வேகத்தைப் பாதுகாப்பான அளவு குறைக்கவும். வாகனம் வளைவில் செலுத்தும்போது பிரேக்கை அழுத்தினால் சறுக்கும் நிலை ஏற்படலாம்.
5) மற்ற வாகனங்களை ஓவர்டேக் செய்யும்போது எதிரில் வரும் வாகனங்கள் பற்றியும் கவனமாக இருந்தால் பாதுகாப்பை உறுதி செய்ய முடியும்.
6) இங்குமங்கும் இடைவெளிக்குள் நுழைந்து வாகனத்தை ஓட்ட முயற்சித்தால் வாகனத்தின் மீது உங்களுக்கு இருக்கும் கட்டுப்பாடு குலைந்து விபத்தில் கொண்டு போய் விடும்.
7) கண்மூடித்தனமான வேகத்தில் வாகனத்தைச் செலுத்துவதைத் தவிர்க்கவும்; சாலைக்கேற்ற பாதுகாப்பான வேகத்தில் மிதமான வேகத்தில் செலுத்துவது எப்போதுமே நல்லது.
8) வேகம் எந்த அளவுக்கு அதிகரிக்கிறதோ அந்த அளவுக்கு ஓட்டுநரின் பார்வை வீச்சும்

குறையும். அவ்வாறான நிலையில், ஓட்டுநர் களைப்படைந்து விடுவதால் எந்தத் தீங்கையும் எதிர்பார்த்து கவனமாக வாகனத்தைச் செலுத்த முடியாது.



77PM04001

9) அதிவேகத்தில் வாகனத்தைச் செலுத்தும்போது ‘ஷார்ப் ஹேண்ட்லிங்’ செய்ய முயற்சிக்காதீர்கள். அப்படிச் செய்தால் வாகனத்தின் மீதான உங்களது கட்டுப்பாட்டை முழுவதும் இழக்க நேரிடும்.
10) அதிவேகத்தில் பிற வாகனங்களை ஓவர்டேக் செய்யும்போது அல்லது பாதை மாறும்போதும் வாகனங்களுக்கிடையே போதுமான தூரம் இருப்பதை உறுதி செய்யுங்கள்.

**பிரேக்கிங்**

1) வாகனத்தைப் பார்க்கிங் செய்யும்போது பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு, பார்க்கிங் பிரேக்குகளை பயன்படுத்தி கியர்ஷிஃப்ட் லீவரை முதல் கியர் அல்லது பின்புற கியருக்கு மாற்றவும்.
2) தவிர்க்க முடியாத சூழல் ஏற்பட்டாலொழிய கை பிரேக்குகளைப் பயன்படுத்தாதீர்கள். இதனால் வாகனம் சறுக்கி, வேறு வாகனத்துடன் மோதி விடலாம். தேய்ந்து போன டயர்கள் இருக்கும்போது இது இன்னும் ஆபத்தான விஷயம்; ஏனெனில் அவை அதிகம் சறுக்கக் கூடியவை.

பாதங்களுக்குருகே உள்ள பிரேக்குகளை மூன்று நிலைகளில் பயன்படுத்தவும்
1. பின்னால் வரும் வாகனங்களுக்கு எச்சரிக்கைச் செய்தியை அனுப்பவும்
2. பிரேக்கைப் படிப்படியாக அழுத்தவும்
3. வாகனத்தை உடனடியாக நிறுத்தி விடுங்கள்

3) சரிவுப் பாதையில் கீழ்நோக்கிச் செலுத்தும் போது பிரேக்கை அழுத்தாமல் என்ஜின் பிரேக்கைப் பயனுள்ள முறையில் பயன்படுத்தவும். பாதத்திற்கருகிலுள்ள பிரேக்கை அதிகமாகப் பயன்படுத்தினால் பிரேக்கின் பயன்பாடு மிகவும் பாதிக்கப்படும்.

**வாகனத்தை நெடுந்தொலைவு ஓட்டிச் செல்லுதல்**

1) நெடும்பயணத்துக்குக்கிளம்பும் முன் பாதுகாப்பு தொடர்பான அனைத்துச் சோதனைகளையும் செய்து விடுங்கள்.
2) சீரான இடைவெளியில் அவ்வப்போது ஓய்வு எடுத்துக் கொண்டால் தூக்கக் கலக்கத்தால் அல்லது களைப்பால் விபத்து நேரிடுவதைத் தவிர்க்கலாம்.

**இரவு நேரத்தில் வாகனம் ஓட்டுதல்**

1) பார்வைத் தூரம் இரவில் குறைந்து விடுவதால் வாகனத்தில் பகலில் செல்வதை விடஇரவில் குறைந்த வேகத்தில் செலுத்தவும்.
2) இரவு நேரத்தில் மற்ற வாகனங்களை முந்திச் செல்வதைத் தவிர்க்கவும். வேகமாகச் செல்ல வேண்டும் என்ற எண்ணமும், வாகனங்களுக்கிடையில் இருக்கும் தூரத்தைக் கணிக்கும் உங்களது அனுமானமும் இரவு நேரங்களில் பாதிக்கப்படலாம்.
3) தேவைப்பட்டாலொழிய ஹெட்லைட்டுகளை ‘ஹை பீம்’ முறையில் பயன்படுத்த வேண்டாம். ஹைபீம் லைட்டுகள் எதிரில் வரும் அல்லது முன்புள்ள வாகன ஓட்டுநரின் கண்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம்; இதனால் விபத்துக்கள் நேரிடலாம்.
4) ஜன்னல் கண்ணாடிகளைத் துடைத்து சுத்தமாக வைத்திருக்கவும். விண்ட்ஷீல்ட் கண்ணாடி காய்ந்திருக்கும்போது விண்ட்ஷீல்ட் வைப்பரைப் பயன்படுத்தாதீர்கள்; இதனால் கண்ணாடிகள் சேதமடையக்கூடும்.

## பாதுகாப்பு எல்லைக்கோடு

வாகனத்தை ஓட்டும்போது உங்களுக்கென்று ஒரு பாதுகப்பு எல்லைக்கோட்டை வரைவது முக்கியம்; அப்போதுதான் மற்றவர்களது எதிர்பார்க்காத தவறுகளை உங்களால் சமாளிக்க முடியும். இதற்கு, பின்வருவனவற்றைப் பின்பற்றுங்கள்:

- பாதுகாப்பான வேகத்தில் வாகனத்தை ஓட்டவும்
- உங்களது வாகனத்துக்கும் முன்னால் செல்லும் வாகனத்துக்கும் போதுமான இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.
- மற்ற வாகனங்களை முந்தியே தீரவேண்டும் என்று நினைக்காதீர்கள்.
- வேகத்தைத் திடீரென அதிகரிக்காமல், உடனடியாகத் திரும்பாமல், திடீரென நிறுத்தாமல் வாகனத்தைச் செலுத்தவும்.
- உங்களது பயணத்திட்டத்தில் பயணங்களுக்கு இடையே போதுமான இடைவெளி விடவும்.
- போக்குவரத்து விதிகள், நெறிமுறைகளை எப்போதும் மதித்து நடக்கவும்.

## முடிவுரை

மிகவும் சரியான ஓட்டுநர் இவர்தான் என்று யாரையும் கூற முடியாது; யாருமே இல்லை. வாகனம் ஓட்டும் ஒவ்வொருவரும் முடிந்தவரை சிறப்பாகவும் சரியாகவும் ஓட்ட வேண்டுமென்று முயற்சி செய்து வருகின்றனர். பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு உங்களது பாதுகாப்பையும் வாகனம் ஓட்டும் பிறருடைய பாதுகாப்பையும் உறுதி செய்வதுடன் உங்களது வாகனத்தின் தேய்மானத்தைக் குறைத்து, அதன் ஆயுளை அதிகரித்து, பியூயல் சிக்கனத்தைக் கற்பித்து, வசதியான ஒரு ஓட்டும் அனுபவத்தை தருகிறது. **‘செய்யக்கூடியவை’, ‘செய்யக்கூடாதவை’ இவற்றை ஒழுங்காகப் பின்பற்றினால், வாகனம் செலுத்துவதை மிகவும் அனுபவிப்பீர்கள்.**

# மற்ற கட்டுப்பாடுகளும் கருவிகளும்


எரிபொருள் நிரப்பும் மூடி ........................................................ 5-1
எஞ்ஜின் கம்பார்ட்மெண்ட் ....................................................... 5-1
சன் வைசர் ............................................................................. 5-3
உட்புற விளக்குகள் ................................................................. 5-4
உபகரண சாக்கெட் ................................................................. 5-4
க்ளவ் பெட்டி .......................................................................... 5-4
பொருட்கள் வைக்கும் இடம்.................................................... 5-5
காற்றுப் போகும் இடம் .......................................................... 5-5
ஃப்ரேம் ஹூக்......................................................................... 5-6
உதவும் க்ரிப்............................................................................ 5-6

## பியூயல் ஃபில்லிங்

### (பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)


### சி . என். ஜி . ஃபில்லர் வால்வ்

### ( பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)





77PM05003

வண்டிக்கு வலதுபுறத்தில் சி.என்.ஜி. ஃபில்லர் வால்வ் அமைந்துள்ளது.




77PM05001


சி.என்.ஜி. ஃபில்லர் கதவை (1) திறக்க, சாவியை போட்டு சாவியின் மேற்பகுதியை வண்டியின் முன்புறத்தை நோக்கித் திருப்பவும்




77PM05005

சி.என்.ஜி. ஃபில்லர் வால்வ் கவரை அகற்ற:

1) சி.என்.ஜி. ஃபில்லர் கதவை (1) திறக்கவும்.
2) எதிர் கடிகாரச்சுற்றுப்பக்கம் திருப்பி சி.என்.ஜி. ஃபில்லர் வால்வ் கவரை (2) அகற்றவும்




77PM05006

*குறிப்பு:*
*பியூயல் ஃபில்லர் கதவில் கேப் ஹோல்டர் (3) இருந்தால், பியூயல் நிரப்புகையில் அதைப் பயன்படுத்திக் கொள்ளவும்.*

சிலிண்டரின் அழுத்தம் டிஸ்பென்சரின் அழுத்தத்திற்கு சமமாக ஆனால் தனாகவே நிரப்பும் செய்முறை கட் ஆகிவிடும்.

சி.என்.ஜி. ஃபில்லர் வால்வ் கவரைப் பொறுத்த:


1) அது முழுதும் மூடும் வரைக்கும் சி.என்.ஜி. ஃபில்லர் வால்வ் கவரை (2) எதிர்திசையில் திருப்பவும்.
2) சி.என்.ஜி. ஃபில்லர் கதவை மூடவும்.

*குறிப்பு:*
- *சி.என்.ஜி. ஃபில்லர் கவர் (2) சரியாக மூடப்படா விட்டால், உங்களால் வண்டியை ஸ்டார்ட் செய்ய முடியாது.*

- *வாகனம் இயங்காமல் நிற்கும்போது சி.என்.ஜி. ஃபில்லர் கவர் (2) திறக்கப்பட்டால் எஞ்ஜின்எஞ்ஜின் வேலை செய்யாமல் நின்றுவிடும்.*

*குறிப்பு:*
*வண்டி இயங்கும்போது சி.என்.ஜி. ஃபில்லரில் சிறுகற்கள் நுழையலாம்; பார்க்கும்போது அவற்றை நீக்கிவிடவும்.*

### பெட்ரோல் ஃபில்லிங் கேப் (பெட்ரோல் எஞ்ஜின் மாடலுக்காக)




**உதாரணம்**

77PH031

வாகனத்தின் வலதுபுறம் பியூயல் தொட்டியின் மூடி பொருத்தப்பட்டுள்ளது.

**உதாரணம்**




68KN048

பியூயல் தொட்டியின் மூடியைத் திறப்பதற்கு அதை கடிகார திசைக்கு எதிர்ப்புறம் திருப்பவும். பியூயல் நிரப்பு மூடியை மீண்டும் நிறுவ, நீங்கள்பல கிளிக்குகள் கேட்கும் வரை அதை கடிகார திசையில் திருப்புங்கள்
.

**⚠ நிதானம்**

**பியூயல் தொட்டியின் மூடியை மெதுவாக அகற்றவும். அழுத்தத்தில் இருக்கும் எரிபொருளானது வெளியில் சிதறி காயத்தை உண்டாக்கக் கூடும்.**


**⚠ எச்சரிக்கை**

**பியூயல் மிக எளிதில் தீப்பற்றக்கூடியது. பியூயல் நிரப்பும்போது புகை பிடிக்காதீர்கள், அருகில் நெருப்போ அல்லது தீப்பொறியோ இல்லாமல் இருப்பதை உறுதி செய்யவும்.**

**⚠ எச்சரிக்கை**

**பியூயல் தொட்டியின் மூடியை மாற்ற வேண்டுமானால், மாருதி நிறுவனத்தின் ஒரிஜினல் தயாரிப்பையே பயன்படுத்தவும். ஒழுங்கற்ற மூடியைப் பயன்படுத்தினால் பியூயல் அமைப்பு அல்லது மாசு கட்டுப்பாடு அமைப்பு பழுதடையலாம். விபத்து நேரிடும்போது பியூயல் கசிவும் நிகழலாம்.**


### (டீசல் என்ஜின் மாடலுக்காக மட்டும்) டீசல் ஃபில்லிங் கேப்



**உதாரணம்**

77PH031

வாகனத்தின் வலதுபுறம் பியூயல் தொட்டியின் மூடி பொருத்தப்பட்டுள்ளது.



உதாரணம்

68KN048

பியூயல் தொட்டியின் மூடியைத் திறப்பதற்கு அதை கடிகார திசைக்கு எதிர்ப்புறம் திருப்பவும்.பியூயல் நிரப்பு மூடியை மீண்டும் நிறுவ, நீங்கள்பல கிளிக்குகள் கேட்கும் வரை அதை கடிகார திசையில் திருப்புங்கள்

**⚠ நிதானம்**

**பியூயல் தொட்டியின் மூடியை  மெதுவாக அகற்றவும். அழுத்தத்தில் இருக்கும் எரிபொருளானது வெளியில் சிதறி காயத்தை உண்டாக்கக் கூடும்.**


**⚠ எச்சரிக்கை**

**பியூயல் மிக எளிதில் தீப்பற்றக்கூடியது. பியூயல் நிரப்பும்போது புகை பிடிக்காதீர்கள், அருகில் நெருப்போ அல்லது தீப்பொறியோ இல்லாமல் இருப்பதை உறுதி செய்யவும்.**

**⚠ எச்சரிக்கை**

**பியூயல் தொட்டியின் மூடியை மாற்ற வேண்டுமானால், மாருதி நிறுவனத்தின் ஒரிஜினல் தயாரிப்பையே பயன்படுத்தவும். ஒழுங்கற்ற மூடியைப் பயன்படுத்தினால் பியூயல் அமைப்பு அல்லது மாசு கட்டுப்பாடு அமைப்பு பழுதடையலாம். விபத்து நேரிடும்போது பியூயல் கசிவும் நிகழலாம்.**

## என்ஜின் கம்பார்ட்மெண்ட்



உதாரணம்


77PH094

என்ஜின் கம்பார்ட்மெண்டைத் திறப்பதற்கு:

1) ஓட்டுநரின் சீட் பெல்ட் பக்கிளை (1) சீட்டின் இயல்பான பொஸிஷன் வரை உயர்த்தவும். பயணிகளின் சீட் பெல்ட் பக்கிளைச் (2) சேமிக்கவும்.
2) ஓட்டுநரின் சீட்டைச் சரித்து முடிந்தவரை பின்னால் இருக்கும் பொஸிஷனில் வைக்கவும்.

**⚠ நிதானம்**

**ஓட்டுநரின் சீட்டை பின்புறம் சரிக்கையில் சீட்டைச் சற்றுப் பின்னால் தள்ளவும். நீங்கள் சீட்டின் மேற்புறத்தைப் பிடித்தால், பின்புற சீட்டுக்கும் கேபினின் பின்புற பேனலுக்கும் இடையே உங்கள் கைகள் மாட்டிக் கொண்டு, காயம் ஏற்படலாம்.**




உதாரணம்

77PH093

3) ஓட்டுநரின் சீட்டில் உள்ள லாக் லீவரை (3) இழுத்து சீட்டை முன்புறம் நீட்டவும்.

*குறிப்பு:*
*ஸ்டீயரிங் வீலுடன் தொடர்புக்கு வரும் போது சீட்டை எப்படி வேண்டுமானாலும் மடக்கிக் கொள்ளலாம்.*


4) ஒவ்வொரு சீட்டின் முன்புறமும் உள்ள பூட்டுக் கைப்பிடிகளைத் (4) திறக்கவும்.




77PH081


- பூட்டுக் கைப்பிடியைத் திறக்க, “PULL” (இழு) என எழுதப்பட்ட பகுதியை (5) இழுத்து, ஹூக்கிலிருந்து (8) ரிங்கை (7) விடுவிக்கவும்.
- பூட்டுக் கைப்பிடியைப் பூட்டுவதற்கு, ஹூக்கில் (8) ரிங்கை (7) வைத்து, (6) “PUSH” (அழுத்தவும்) என எழுதப்பட்ட பகுதியை அழுத்தவும்.

**ஓட்டுநர் பக்கம்**




77PH102

**பயணிகள் பக்கம்**




77PH103


*குறிப்பு:*
*பயணிகள் சீட்டின் பின்புறம் ஸ்டிராப்புகள் (11) இருக்கின்றன.*

5) சீட்டைத் தூக்கி, ஸ்டிராப்பை (11) ஹூக்குடன் (9) இணைக்கவும். சீட் ஸ்டிராப்பை இணைப்பதற்கு ஹூக் (10) பயன்படுத்தப்படுவதில்லை.

*அறிவிப்பு*

**ஸ்டிராப்பை ஓட்டுநரின் சீட் பொஸிஷன் அட்ஜஸ்ட்மெண்ட் லீவருடன் இணைக்க வேண்டாம். ஸ்டிராப்பை ஹூக்குடன் இணைக்கு போது தேவைக்கு அதிகமான விசையைத் தரவேண்டாம். அவ்வாறு செய்தால் ஸ்டிராப்புகள் அறுந்து விடும், ஹூக்குகள் மற்றும் அல்லது ஓட்டுநரின் சீட் பொஸிஷன் அட்ஜஸ்ட்மெண்ட் லீவரும் அறுந்து விடும்.**

- என்ஜின் கம்பார்ட்மெண்ட்டை மூடுவதற்கு அதைத் திறக்கும்போது செய்தவைகளைத் தலைகீழான வரிசையில் செய்யவும்.
- மூடிய பின்னர், சீட்டுகளை நகர்த்த முயற்சி செய்து அவை பாதுகாப்பாக இணைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்யவும்.
- படத்தில் காட்டியுள்ளபடி ஸ்டிராப்புகளைப் பயணிகள் சீட்டின் பின்புறமுள்ள இடத்தில் வைத்து வைக்கவும்.




77PH097


**⚠ எச்சரிக்கை**

**ஸ்டிராப்புகளைப் பயணிகள் சீட்டின் பின்புறமுள்ள இடத்தில் வைக்கவும். பயணிகளின் உடல் ஸ்டிராப்புகளில் மாட்டிக் கொண்டால், மூச்சுத் திணறல் உள்ளிட்ட காயங்கள் அவருக்கு நேரிடலாம். இப்படி நேரிட்டால், ஸ்டிராப்புகளைக் கத்தரிக்கோலால் அறுக்கவும்.**

**⚠ நிதானம்**

**என்ஜின் கம்பார்ட்மெண்டை மூடும்போது சீட்டுகளின் இடுக்கிலும் ஓட்டுநரின் சீட் பெல்ட் பக்கிள்களிலும் கைகள் மாட்டிக் கொள்ளாதபடியும் உங்களது உடலில் படாதபடியும் கவனமாக இருக்கவும்.**

## சன் வைஸர்




77PH004

வாகன ஓட்டுநரின் சீட்டுக்கு அருகில் சன் வைஸர் அமைக்கப்பட்டு விண்ட்ஷீல்ட் வழியே வரும் சூரிய ஒளியைத் தடுக்க சன் வைஸரைக் கீழே இழுக்கலாம் அல்லது அவற்றைக் கழற்றி பக்கவாட்டில் திருப்பி ஜன்னல் வழியே வரும் சூரிய ஒளியைத் தவிர்க்கலாம்.

*அறிவிப்பு*

**சன் வைஸரைக் கழற்றும்போதும் மாட்டும்போதும் படத்தில் காட்டியுள்ளபடி பக்கவாட்டில் கையாளவும், இல்லை என்றால் சன் வைஸர் சேதமடையலாம்.**

## உட்புற விளக்குகள்




77PH074

விளக்கின் ஸ்விட்சுக்கு 2 பொஸிஷன்கள் இருக்கின்றன. பட்டனை (3) அழுத்தி இப்பொஸிஷன்களை செலக்ட் செய்யலாம். இரண்டு பொஸிஷன்களின் செயல்பாடுகளும் பின்வருமாறு:

**ஆன் (1)**
விளக்கு எரிய ஆரம்பித்து அப்படியே நிலைத்து நின்று விடும்.

**ஆஃப் (2)**
விளக்கு அணைந்தே காணப்படும்.

## உபகரண சாக்கெட்




77PH044

இக்னிஷன் ஸ்விட்ச் “ACC” (ஏ.சி.சி) அல்லது “ON” (ஆன்) பொஸிஷனில் இருக்கும்போதுதான் உபகரண சாக்கெட் செயல்படும்.
மின்சாதனங்களுக்கு 12 வோல்ட்/120 வாட் வரை மின்சாரம் தர இந்த சாக்கெட்டைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

*அறிவிப்பு*

**பொருத்தமற்ற மின்சாதனங்களை நீங்கள் பயன்படுத்தினால் அவை வாகனத்தின் மின்னமைப்பை அழித்து விடலாம். பயன்படுத்தும் மின்னணு உபகரணம் இந்த சாக்கெட்டில் சேரக்கூடியதா என்பதை உறுதி செய்து கொள்ளவும்.**

## க்ளவ் பெட்டி





77PH045

க்ளவ் பெட்டியைத் திறக்க, பட்டனை கடிகார திசைக்கு எதிர்ப்புறம் திருப்பவும். பெட்டியை மூட வேண்டுமானால், அது ஒழுங்காக மாட்டிக் கொள்ளும் வரை மூடியை அழுத்தவும். க்ளவ் பெட்டியைப் பூட்டுவதற்கு, சாவியை பட்டனில் செலுத்தி கடிகார திசைப்பக்கம் திருப்பவும். க்ளவ் பெட்டியைத் திறப்பதற்கு, சாவியை பட்டனில் செலுத்தி கடிகார திசைக்கு எதிர்ப்பக்கம் திருப்பவும்.

**⚠ எச்சரிக்கை**

**க்ளவ் பெட்டியின் மூடி திறந்திருக்கும் நிலையில் வாகனத்தைச் செலுத்தாதீர்கள். விபத்து நேரிடும் பட்சத்தில் இதனால் காயங்கள் கூட ஏற்படலாம்.**

## பொருட்கள் வைக்கும் இடம்




77PH104


(1) இன்ஸ்ட்ருமெண்ட் பேனல் பாக்கெட் (ஓட்டுநரின் பக்கம்)
(2) இன்ஸ்ட்ருமெண்ட் பேனல் டிரே (நடுவில்) இன்ஸ்ட்ருமெண்ட் பேனல் பாக்கெட் (நடுவில்)
(3) இன்ஸ்ட்ருமெண்ட் பேனல் டிரே (பயணிகளின் சீட்டுக்குப் பக்கத்தில்)
(4) சென்டர் பாக்கெட்

### இன்ஸ்ட்ருமெண்ட் பேனல் பாக்கெட் (1) (2) / இன்ஸ்ட்ருமெண்ட் பேனல் டிரே (2) (3) / சென்டர் பாக்கெட் (4)

**⚠ எச்சரிக்கை**

**ஓடும்போது பாக்கெட் / டிரேயிலிருந்து கீழே விழக்கூடிய பொருட்களை அவற்றில் வைக்காதீர்கள். முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் பொருட்கள் பெடலின் அருகில் விழுந்து வாகனம் கட்டுப்பட்டை இழக்கவோ விபத்து நேரிடவோ காரணமாக ஆகிவிடலாம்.**

## காற்று போகும் இடம்





77PM502

ஓட்டுநரின் பக்கத்தில் வாகனத்தில் பயணிகள் அமரும் இடத்தினருகே காற்று போகும் இடம் அமைக்கப்பட்டுள்ளது. பட்டனை (1) செங்குத்தாக நகர்த்தி மூடியைத் திறந்து / மூடினால் (2) காற்று போகுமிடத்தை மூடலாம் / திறக்கலாம்."ஓபன்" செய்தால் தூய்மையான காற்று வாகனத்திற்குள் வரும்

## ஃபிரேம் ஹூக்

### முன்புறம்




77PH035

வாகனத்தின் முன்புறம் உள்ள ஃபிரேம் ஹூக் (1) அவசரநிலைக் காலங்களிலும் கப்பலில் சரக்கு ஏற்றும்போதும் பயன்படும்.

சாலை / நெடுஞ்சாலையில் உங்களது வாகனத்தைக் கட்டி இழுக்க நேரிட்டால், 'அவசரநிலைக் கால சர்வீஸ்' பிரிவில் 'இழுத்தல்' என்ற தலைப்பின் கீழுள்ள குறிப்புக்களைப் பின்பற்றவும்.

**⚠ எச்சரிக்கை**


**வேறொரு வாகனத்தை அல்லது உங்களது வாகனத்தைச் சாலையில் அல்லது நெடுஞ்சாலையில் கட்டி இழுக்க ஃபிரேம் ஹூக்கைப் பயன்படுத்தாதீர்கள். உங்களது வாகனம் அல்லது வேறொரு வாகனம் மண்ணுக்குள் அல்லது பனியில் மாட்டி சிக்கிக் கொள்வது போன்ற அவசரநிலைக் காலங்களில் பயன்படுத்துவதற்கு மட்டுமே ஹூக் (கொக்கி) (1) வடிவமைக்கப்பட்டுள்ளது.**

*அறிவிப்பு*

**ஃபிரேம் ஹூக்கை (1) பயன்படுத்தும்போது ஹூக் எவ்விதத்திலும் அதிர்வடையாமல் வாகனத்தைச் செலுத்த வேண்டும். அவ்வாறு ஏதாவது நிகழ்ந்தால் ஹூக் அல்லது வாகனம் முழுதும் பாதிப்புக்கு உள்ளாகலாம்.**

**திடீரென்று வாகனத்தின் வேகத்தை அதிகரிக்காதீர்கள்.**

## உதவும் க்ரிப்




77PM501

ஒட்டுநரின் பக்கத்தின் பயணிகள் சீட்டுக்கு அருகாமையில் உதவும் க்ரிப்புகள் (1) தரப்பட்டுள்ளன. ஓட்டுநர்/பயணிகள் வாகனத்திற்குள் சுலபமாக ஏறவும் இறங்கவுமே உதவும் க்ரிப்புகள் தரப்பட்டுள்ளன.

# வாகனத்தில் ஏற்றுவது மற்றும் இழுத்துச் செல்வது

வாகனத்தில் ஏற்றுவது .......................................................... 6-1
வேறு வாகனத்தில் கட்டி இழுத்துச் செல்வது.......................... 6-1

## வாகனத்தில் ஏற்றுவது

குறிப்பிட்ட வரையிலான எடைகளைச் சுமக்கும்படிதான் உங்கள் வாகனம் வடிவமைக்கப்பட்டுள்ளது. வாகனம் தாங்ககூடிய எடையைப் பற்றிய விவரங்கள் ((ஜி.வி.டபள்யூ.ஆர்) - கிராஸ் வெஹிகிள் வெயிட் ரேட்டிங்) எனும் மொத்த வாகன எடைத்தரம் மற்றும் ((பி.ஏ.டபள்யூ) - பெர்மிசிப்பில் மாக்ஸிமம் அக்ஸல் வெயிட்) எனும் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச ஆக்ஸில் எடைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. முன்புற, பின்புற எடை பற்றிய விவரம் (ஜி.வி.டபள்யூ.ஆர் & பி.ஏ.டபள்யூ) 'அளவு பற்றிய குறிப்புக்கள்' பிரிவில் தரப்பட்டுள்ளது.

ஜி.வி.டபள்யூ.ஆர் – முழுவதும் எடை நிரப்பப்பட்ட வாகனத்தின் (பயணிகள், உபகரணங்கள் சரக்குமற்றும் கட்டி இழுக்கப்படும் வண்டி) அதிகபட்சமாக அனுமதிக்கப்பட்ட ஒட்டுமொத்த எடை இதுவாகும்.
பி.ஏ.டபள்யூ – (முன்னும் பின்னும்) தனி ஆக்ஸில் ஒன்றில் அதிகபட்சமாக அனுமதிக்கப்பட்ட எடையின் அளவு இது.

சரக்கு ஏற்றப்பட்ட வாகனத்தின் எடை மற்றும் முன்னும், பின்னும் உள்ள ஆக்ஸில்களின் மீதான எடைகளை வாகனத்துடன் சேர்த்துத்தான் கணக்கிட முடியும். இந்த எடையை முன்னும் (ஜி.வி.டபள்யூ.ஆர்) பின்னும் (பி.ஏ.டபள்யூ) உள்ள எடையுடன் ஒப்பிடவும். வாகனத்தின் ஒட்டுமொத்த எடை அல்லது இரு ஆக்ஸில்களின் மீதான எடை இதை விட அதிகமாக இருந்தால், இதற்கு ஈடாக எடை இருக்குமாறு குறிப்பிட்ட அளவு எடையை அகற்றிவிட வேண்டும்.

**⚠ எச்சரிக்கை**

**வண்டியில் அளவுக்கதிகமான எடையை எப்போதும் ஏற்றாதீர்கள். மொத்த வாகன எடையானது (வாகனம், பயணிகள், உபகரணங்கள், சரக்கு மற்றும் எதையாவது கட்டி இழுத்தால் அதன் எடை) ஜி.வி.டபள்யூ.ஆர் எனப்படும் மொத்த வாகன எடைத் தரத்தை மீறக்கூடாது. மேலும், பின்புற ஆக்ஸிலின் இருபுறமும் வைக்கப்படும் எடைகள் பி.ஏ.டபள்யூ எனப்படும் அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச ஆக்ஸில் எடையை விட அதிகமாக இருக்கும்படி சரக்குகளைப் பரப்பி வைக்காதீர்கள்.**

**⚠ எச்சரிக்கை**

**சரக்குகளை சமமாகப் பரப்பி வைக்கவும். ஒருவேளை வாகனம் தானாக நகர்ந்தால் உங்களுக்கு காயம் படாமலும் வாகனம் சேதமடையாமலும் இருக்க சரக்கு வைக்கும் இடத்தை எப்போதும் பூட்டியே வைக்கவும். சரக்கு வைக்குமிடத்தில் அதிக எடையுள்ள பொருட்களை நன்கு உள்ளே தள்ளி, தரைப் பகுதியில் வைக்கவும். சீட்டுகளின் உயரத்தைத் தாண்டி சரக்குகள் அடுக்கப்படக்கூடாது.**


## வேறு வாகனத்தில் கட்டி இழுத்தல்

ஓட்டுநர், ஒரு பயணி, குறிப்பிட்டுள்ள எடையுள்ள சரக்கு ஆகியவற்றைத் தாங்கும்படி உங்கள் வாகனம் தயாரிக்கப் பட்டுள்ளதே தவிர வேறு வாகனத்தைக் கட்டி இழுக்கும்படி அல்ல. வேறொரு வாகனத்தைக் கட்டி இழுக்க உங்களது வாகனத்தைப் பயன்படுத்த மாருதி சுசூகிசுசூகி நிறுவனம் உங்களுக்குப் பரிந்துரைப்பதில்லை. வேறொரு வாகனத்தைக் கட்டி இழுத்தால் அது வாகனக் கையாளும் திறன், நீடித்த செயல்பாடு மற்றும் பியூயல் சிக்கனத்தைப் பாதிக்கலாம்.

# பரிசோதனை மற்றும் பராமரிப்பு


பராமரிப்புக்கான திட்டம் .......... 7-1
அவ்வப்போது பராமரிப்பதற்கான திட்டம் .......... 7-2
வாடிக்கையாளரால் மேற்கொள்ளப்பட வேண்டிய பரிசோதனை மற்றும் பராமரிப்புச் செயல்பாடுகள் .......... 7-6
டிரைவ் பெல்ட் .......... 7-8
என்ஜின் ஆயில் மற்றும் ஃபில்டர் .......... 7-8
என்ஜின் கூலண்ட் .......... 7-11
ஏர் க்ளீனர் .......... 7-12
கியர் ஆயில் .......... 7-13
ஸ்பார்க் ப்ளக் .......... 7-13
க்ளட்ச் பெடல் .......... 7-14
பியூயல் ஃபில்டர் (டீசல் என்ஜின் மாடலுக்காக ) .......... 7-14
பிரேக்குகள் .......... 7-14
ஸ்டீயரிங் .......... 7-16
ப்ரொபெல்லர் ஷாஃப்ட் யுனிவர்ஸல் ஜாயிண்ட் .......... 7-17
டயர்கள் .......... 7-17
பேட்டரி .......... 7-19
ஃபியூஸ்கள் .......... 7-20
பல்ப் மாற்றுவது .......... 7-23
வைப்பர் பிளேடுகள் .......... 7-25
விண்ட்ஷீல்ட் வாஷர் ஃப்லூயிட் (திரவம்) (கருவி பொருத்தப்பட்டிருந்தால்) .......... 7-27

உதாரணம்



77PM07008

**⚠ எச்சரிக்கை**

**வாகனத்தில் ஏதாவது வேலை இருந்தால் விபத்து எதும் நிகழாமலிருக்க நீங்கள் அதீத கவனம் செலுத்த வேண்டும். கவனமாகப் பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:**

- **என்ஜினை இயங்கும் நிலையில் கேரேஜ் அல்லது மற்ற மூடியுள்ள இடங்களில் விட்டு விட்டுச் செல்லாதீர்கள்.**
- **என்ஜின் இயங்கும்போது, உங்களது கைகள், கருவிகள், ஆடைகள் மற்றும் பிற பொருட்களை ஃபேன் மற்றும் டிரைவ் பெல்ட்டிலிருந்து தூரமாக வைக்கவும். ஃபேன் நகராது என்றாலும், தானாகவே முன்னெச்சரிக்கையின்றி அது நகரலாம்.**

(தொடர்ச்சி..)

**⚠ எச்சரிக்கை**

(தொடர்ச்சி)

- **என்ஜின் இயங்கும் நிலையில் சர்வீஸ் செய்ய வேண்டியிருந்தால் பார்க்கிங் பிரேக் சரியாகப் போடப்பட்டு, டிரான்ஸ்மிஷன் நியூட்ரலில் இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.**
- **என்ஜினை ஸ்டார்ட் செய்கையில் அல்லது அது இயங்கும்போது இக்னிஷன் வயர்கள் அல்லது இக்னிஷன் அமைப்பை தொடாதீர்கள்; அவ்வாறு தொட்டால் ஷாக் அடிக்கும் வாய்ப்பு உள்ளது.**
- **சூடான என்ஜின், புகைபோக்கி மற்றும் பிற பைப்புகள், மஃப்ளர், ரெடியேட்டர் மற்றும் தண்ணீர் ஹோஸ்களைத் தொடாமல் கவனத்துடன் இருங்கள்.**
- **புகை பிடிப்பது, தீப்பொறி (அ) நெருப்புப் பிழம்பை பியூயல்பியூயல், பேட்டரியின் அருகில் வைக்காதீர்கள். தீப்பற்றக்கூடிய பிழம்புகள் இருக்கக்கூடாது.**
- **வாகனம் ஜேக்கால் மட்டும் தூக்கிப் பிடிக்கப்பட்டிருந்தால் வாகனத்திற்கடியில் செல்லாதீர்கள்.**
- **தவறான மின்சுற்றால் விபத்துக்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.**
- **பயன்படுத்திய ஆயில், கூலண்ட் மற்றும் பிற திரவங்களைக் குழந்தைகள் மற்றும் செல்லப் பிராணிகள் மீது படாமல் தூரமாக வைக்கவும். பயன்படுத்திய திரவங்களை முறையாகக் கழிவாக மாற்றவும்; தரையில் அல்லது கழிவுநீர்த் தொட்டியில் ஊற்றக் கூடாது.**

## பராமரிப்புத் திட்டம்

வாகனத்திற்கான சீரான பராமரிப்புப் பணிகளை அவ்வப்போது மேற்கொள்ளப் பின்வரும் அட்டவணை உதவும். ஆய்வுகள், அட்ஜஸ்மெண்ட்டுகள், லூப்ரிகேஷன் மற்றும் பிற சேவைகளை எப்போது செய்ய வேண்டும் என்பது பற்றிய கால நேரம், கிலோமீட்டர் அளவுகள் இதில் தரப்பட்ட்டுள்ளன.

**⚠ எச்சரிக்கை**

**உங்களது வாகனத்தின் பராமரிப்புப் பணி அதிகாரபூர்வ மாருதி சுசூகிசுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப்பில்தான் செய்யப்பட்டாக வேண்டுமென்ரு மாருதி சுசூகி நிறுவனம் உங்களுக்குப் பரிந்துரைக்கிறது.**

*அறிவிப்பு*

**தேவைப்படும்போதெல்லாம் வாகனப் பாகங்களை மாற்றவும்; பழைய பாகங்களுக்கு பதிலாக மாருதி நிறுவனத் தயாரிப்புக்களையே பயன்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறது.**

## அவ்வப்போது பராமரிப்பதற்கான திட்டம்

"C": சுத்தப்படுத்துதல்
"R": மாற்றுவது அல்லது புதிதாகப் போடுவது
"I": சோதனை, சுத்தம் அட்ஜஸ்ட், லூப்ரிகேட் அல்லது மாற்றுவது (தேவைப்படும்போது)
"L" : லூப்ரிகேட்
"T" : குறிப்பிட்ட டார்க்கு இறுக்கமாக்குதல்
"O": சுழற்றுதல்

*குறிப்பு:*
*90,000 km வரை வாகனத்தை சர்வீஸ் விடுவது பற்றிய பராமரிப்புத் திட்டம் இந்த அட்டவணையில் உள்ளது. 90,000 km -க்குப் பின் அதே போன்ற சர்வீஸ்களைப் போதுமான அளவு கால இடைவெளியில் செய்து கொள்ளவும்.*

| இடைவெளி: ஓடோமீட்டர் அல்லது மாதம் (இரண்டில் எது முதலில் வருகிறதோ) மூலம் இந்த இடைவெளி நிர்ணயிக்கப் படுகிறது. | | | இலவச ஆய்வு | | | | அவ்வப்போது ஆகும் பராமரிப்புச் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | km (x1000) | 5 | 10 | 20 | 30 | 40 | 50 | 60 | 70 | 80 | 90 |
| | | மாதங்கள் | 2 | 4 | 8 | 12 | 16 | 20 | 24 | 28 | 32 | 36 |
| **என்ஜின்** | | | | | | | | | | | | |
| 1-1. | வாட்டர் பம்ப் டிரைவ், ஆல்டர்னேட்டர் பெல்ட் ( அழுத்தம், தேய்மானம்) | | – | – | – | – | I | – | – | – | R | – |
| 1-2. | என்ஜின் கூலண்ட் (அளவு, கசிவு) | | I | I | R | I | R | I | R | I | R | I |
| 1-3. | என்ஜின் ஆயில் மறும் என்ஜின் ஆயில் ஃபில்டர் | | – | R | R | R | R | R | R | R | R | R |
| 1-4. | கூலிங் சிஸ்டம் ஹோஸஸ் மற்றும் இணைப்புக்கள் (கசிவு மற்றும் சோதனை) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 1-5. | என்ஜின் சிலிண்டர் ஹெட் கவர் போல்ட் (லூஸானது, சேதமுற்றது) | | – | T | T | T | T | T | T | T | T | T |
| 1-6. | என்ஜின் மாட்டுதல் மற்றும் பல்வேறு விதமான பொருத்துதல் (லூஸானது, சேதமுற்றது) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 1-7. | வால்வ் கிளியரன்ஸ் | | – | – | – | I | – | – | I | – | – | I |
| 1-8. | புகைபோக்கி அமைப்பு (சத்தம், கசிவு அல்லது வேறுமாதிரிக் குறைபாடுகள்) | | I | – | I | – | I | – | I | – | I | – |
| 1-9. | பாஸிடிவ் க்ராங்க் கேஸ் வெண்டிலேஷன் சிஸ்டம் | பெட்ரோல் மற்றும் பை-பியூயல் | I | – | I | – | I | – | I | – | I | – |
| 1-10. | புகைபோக்கி வாயு ரீ சர்குலேஷன் வால்வ் | | – | – | – | C | – | – | C | – | – | C |
| **இக்னிஷன்** | | | | | | | | | | | | |
| 2-1. | இக்னிஷன் ஒயர் (சேதாரம், தேய்மானம்) | பெட்ரோல் மற்றும் பை-பியூயல் | – | – | I | – | I | – | I | – | I | – |
| 2-2. | ஸ்பார்க் ப்ளக் | பெட்ரோல் மற்றும் பை-பியூயல் | – | I | R | I | R | I | R | I | R | I |
| **பியூயல்** | | | | | | | | | | | | |
| 3-1. | ஏர் பில்டரை சுத்தம் செய்தல் | சீரான சாலை | ஒவ்வொரு 5,000 கி.மீ.-க்குப் பின்னும் சுத்தம் செய்வது ஒவ்வொரு 40,000 கி.மீ.-க்குப் பின்னும் மாற்றுவது | | | | | | | | | |
| | | செய்யப்படவேண்டும் | ஒவ்வொரு 2,500 கி.மீ.-க்குப் பின்னும் சுத்தம் செய்வது ஒவ்வொரு 40,000 கி.மீ.-க்குப் பின்னும் மாற்றுவது நிலைமை தீவிரமாக இருந்தால் அடிக்கடி மாற்றிக் கொண்டிருப்பது. | | | | | | | | | |
| 3-2. | பியூயல் டேங்க் மூடி, பியூயல் லைன்கள் மற்றும் இணைப்புக்கள் (கசிதல் மற்றும் சேதாரமடைதல்) பெட்ரோல் மற்றும் பை-பியூயல் | | I | – | – | – | I | – | – | – | I | – |
| 3-3. | பியூயல் ஃபில்டர் மற்றும் நீர்வடித்தல் | டீசல் | I | I | R | I | R | I | R | I | R | I |
| 3-4. | பியூயல் ஃபில்டர் (கசிவது) | பெட்ரோல் மற்றும் பை-பியூயல் | I | I | I | I | R | I | I | I | R | I |
| 3-5. | சி.என்.ஜி. பியூயல் லைன் ஜாயிண்டுகள் (கேஸ் கசிதல்) | பை-பியூயல் | I | I | I | I | I | I | I | I | I | I |
| 3-6. | சி.என்.ஜி. குறைந்த அழுத்த ஃபில்டர் கேட்ரிட்ஜ் ()-ரிங்குடன்) | பை-பியூயல் | – | – | R | – | R | – | R | – | R | – |
| 3-7. | சி.என்.ஜி. சிலிண்டர் கசிவு சோதனை மற்றும் சான்றிதழளித்தல் | பை-பியூயல் | அரசு அங்கீகாரம் பெற்ற சோதனை ஏஜென்ஸி நடத்து முதல் சோதனைத் தேதியிலிருந்து ஒவ்வொரு 3 வருடத்துக்கு ஒருமுறையும் | | | | | | | | | |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 3-8. | சி.என்.ஜி. ஃபில்லர் டப்பா O-ரிங் | பை-பியூயல் | 4 ஆண்டுக்கு ஒரு முறை (அ) 300000 கிமீ ஆன பின் (எது முதலில் நிகழ்கிறதோ | | | | | | | | | |
| **க்ளட்ச் மற்றும் டிரான்ஸ்மிஷன்** | | | | | | | | | | | | |
| 4-1. | க்ளட்ச் பெடல் (ப்ளே) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 4-2. | க்ளட்ச் ஸ்லிப்பிங் (இழுவை அல்லது அதீத சேதாரம்) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 4-3. | கியர் ஷிஃப்ட் (கேபிள்கள்) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 4-4. | மானுவல் டிரான்ஸ்மிஷன் ஆயில் (அளவு, கசிவு) | | 1,60,000 கிமீ பயணமான பின்பு (அல்லது) 10 ஆண்டுகள் கழித்து; எது முதலில் நிகழ்கிறதோ, அதன்படி மாற்றவும். | | | | | | | | | |
| | | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 4-5. | பின்புற டிஃப்ரன்ஷியல் ஆயில் (அளவு, கசிவு) | | 80,000 கிமீ பயணமான பின்பு இவற்றை மாற்றவும் (அல்லது) 4 ஆண்டுகள் கழித்து எது முதலில் நிகழ்கிறதோ, அதன்படி. மாற்றவும். | | | | | | | | | |
| | | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 4-6. | புரொபெல்லர் ஷாஃப்/யுனிவர்சல் ஜாயிண்ட் (லூஸானது, சேதமுற்றது) | | I | I&L | I&L | I&L | I&L | I&L | I&L | I&L | I&L | I&L |

| இடைவெளி: ஓடோமீட்டர் அல்லது மாதம் (இரண்டில் எது முதலில் வருகிறதோ) மூலம் இந்த இடைவெளி நிர்ணயிக்கப் படுகிறது. | | | இலவச ஆய்வு | | | | அவ்வப்போது ஆகும் பராமரிப்புச் செலவு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கி.மீ. (x1000) | 5 | 10 | 20 | 30 | 40 | 50 | 60 | 70 | 80 | 90 |
| | | மாதங்கள் | 2 | 4 | 8 | 12 | 16 | 20 | 24 | 28 | 32 | 36 |
| **பிரேக்** | | | | | | | | | | | | |
| 5-1. | பிரேக் திரவம் (அளவு, கசிவு) | | I | I | R | I | R | I | R | I | R | I |
| 5-2. | பிரேக் பெடல் (பெடல் – முன்புற பேனல் கிளியரன்ஸ்) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 5-3. | பார்க்கிங் பிரேக் லீவர் மற்றும் கேபிள் (ப்ளே, சேதம்) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 5-4. | பிரேக் டிஸ்க் மற்றும் பேடு (தேய்மானம்) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 5-5. | பிரேக் டிரம் மற்றும் ஷூக்கள் (தேய்வது) | | – | I | I | I | I | I | I | I | I | I |
| 5-6. | மாஸ்டர் சிலிண்டர், வீல் சிலிண்டர் மற்றும் காலிபர் பிஸ்டன் (திரவக் கசிவு, பூட்/சீல் சேதாரம்) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 5-7. | பிரேக் ஹோஸ்கள் மற்றும் பைப்புகள் (கசிவு, சேதாரம்) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| **சக்கரம்** | | | | | | | | | | | | |
| 6-1. | டயர்கள் (காற்றழுத்தம், அசாதாரணமான தேய்மானம், விரிசல் மற்றும் சுழற்சி) | | I&O | I&O | I&O | I&O | I&O | I&O | I&O | I&O | I&O | I&O |
| 6-2. | சக்கரங்கள் (சேதாரம்) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 6-3. | முன்புற/பின்புறச் சக்கரங்களின் பேரிங் (லூஸானது, சேதமுற்றது) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| **முன்புற/பின்புற சஸ்பென்ஷன்** | | | | | | | | | | | | |
| 7-1. | முன்புற சஸ்பென்ஷன் கம்பி மற்றும் ஷாக் அப்சார்பர் (ஆயில் கசிவு, சேதாரம்) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 7-2. | முன்புற சஸ்பென்ஷன் குறியீடு, மூட்டு ஆதாரம் மற்றும் உலோகக் கம்பிகள் (லூஸானது, சேதமுற்றது) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 7-3. | பின்புற லீஃப் ஸ்பிரிங் (சேதாரம்) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 7-4. | பின்புற ஷாக் அப்சார்பர் (ஆயில் கசிவு, சேதாரம்) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 7-5. | அனைத்து போல்ட்டுகள் மற்றும் நட்டுகள் (லூசானவை) | | T | T | T | T | T | T | T | T | T | T |
| **ஸ்டீயரிங்** | | | | | | | | | | | | |
| 8-1. | ஸ்டீயரிங் வீல் (ப்ளே, லூசானவை) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 8-2. | ஸ்டியரிங் காலம் ராடுகள் மற்றும் ஆர்ம்கள் (லூஸானவை, சேதாரம், தேய்மானம்) | | I | I | I | I | I | I | I | I | I | I |

| இடைவெளி: ஓடோமீட்டர் அல்லது மாதம் (இரண்டில் எது முதலில் வருகிறதோ) மூலம் இந்த இடைவெளி நிர்ணயிக்கப் படுகிறது. | | | இலவச ஆய்வு | | | | அவ்வப்போது ஆகும் பராமரிப்புச் செலவு | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கி.மீ. (x1000) | 5 | 10 | 20 | 30 | 40 | 50 | 60 | 70 | 80 | 90 |
| | | மாதங்கள் | 2 | 4 | 8 | 12 | 16 | 20 | 24 | 28 | 32 | 36 |
| **மின்சாரம் தொடர்பானவை** | | | | | | | | | | | | |
| 9-1. | பேட்டரி - எலக்ட்ரோடைப் (லெவல், லீக்கேஜ்) மற்றும் வோல்டேஜ் | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 9-2. | ஒயரிங் ஹார்னஸ் கனெக்ச்சன் (லூஸானது, சேதமுற்றது) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 9-3. | விளக்கு அமைப்பு (செயல்பாடு) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 9-4. | வைப்பர் (செயல்பாடு, கறைகள், சேதம்) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 9-5. | ஹாரன் (செயல்பாடு) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 9-6. | துணை சாக்கெட் (செயல்பாடு) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| **பாடி** | | | | | | | | | | | | |
| 10-1. | அனைத்து சேஸிஸ் போல்ட்டுகள் மற்றும் நட்டுகள் (இறுக்கமாக்குங்கள்) | | I | T | T | T | T | T | T | T | T | T |
| 10-2. | அனைத்து செயின்கள், போல்ட்க்கள் மற்றும் நட்டுக்கள் (செயல்பாடு) | | I&L | I&L | I&L | I&L | I&L | I&L | I&L | I&L | I&L | I&L |
| 10-3. | சரக்கு அறை (ஆய்வு) | | I | I | I | I | I | I | I | I | I | I |
| **சாலைச் சோதனை** | | | | | | | | | | | | |
| 11-1. | கியர்ஷிஃப்டிங், ஸ்பீடோமீட்டர் மற்றும் பிரேக்குகளின் செயல்பாடு | | I | I | I | I | I | I | I | I | I | I |
| 11-2. | பாடி மற்றும் சேஸிஸின் சத்தம் | | I | I | I | I | I | I | I | I | I | I |

## வாடிக்கையாளர் செய்ய வேண்டிய ஆய்வு மற்றும் பராமரிப்புச் செயல்பாடு

பின்வரும் அட்டவணையில் நீங்கள் செய்ய வேண்டிய ஆய்வு & பராமரிப்புச் செயல்பாடுகள் பற்றித் தரப்பட்டுள்ளன.
ஆய்வு, கிரீஸிங், லூப்ரிகேஷன் மற்றும் பிற சர்வீஸ்களை நீங்கள் செய்ய வேண்டிய கால அளவு இடைவெளி பற்றி பின்வரும் அட்டவணை கூறுகிறது.

| கால அளவு இடைவெளி | வரிசை எண் | செயல்பாடு | மேற்கோள் |
|---|---|---|---|
| தினமும் | 1 | காற்றழுத்தம், அசாதாரணத் தேய்மானம், பிளவு மற்றும் சேதம் இருக்கிறதா என்று அனைத்து டயர்களையும் (உபரி டயர்கள் உட்பட) சோதித்துப் பார்க்கவும். | பக்கம் எண். 7-21 |
| வாரம் ஒரு முறை | 2 | என்ஜின் ஆயில் மட்டத்தை ஆய்வு செய்து தேவைப்பட்டால் மாருதியின் நம்பகமான என்ஜின் ஆயிலைப் பயன்படுத்தி அதை நிறப்புங்கள். | பக்கம் எண். 7-9 |
| | 3 | கூலண்ட் தொட்டியில் கூலண்ட்டின் மட்டத்தை ஆய்ந்து, தேவைப்பட்டால் பரிந்துரைக்கப்பட்ட மாருதியின் நம்பகமான கூலண்ட் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட நீரை 30:70 விகிதத்தில் பயன்படுத்தவும். | பக்கம் எண். 7-13 |
| | 4 | டிரான்ஸ்மிஷன் ஆயில் மட்டத்தையும் டிஃப்ரன்ஷியல் ஆயில் மட்டத்தையும் ஆய்ந்து பார்க்கவும். | பக்கம் எண். 7-13 |
| | 5 | பிரேக் திரவத் தொட்டியில் பிரேக் திரவ மட்டத்தை ஆய்ந்து, தேவைப்பட்டால், மாருதியின் நம்பகத்தன்மை வாய்ந்த பிரேக் திரவத்தைப் பயன்படுத்தவும். | பக்கம் எண். 7-18 |
| | 6 | பின்வருவனவற்றிற்காக வாகனத்தைச் சோதனை செய்து பார்க்கவும்:<br>• என்ஜின் ஆயில் கசிவு<br>• கூலண்டி கசிவு<br>• பிரேக் திரவக் கசிவு<br>• முன் சஸ்பென்ஷன் ஸ்ட்ரட் கசிவு<br>• பின் ஷாக் அப்சார்பர் கசிவு<br>• பியூயல் கசிவு<br>• டிரான்ஸ்மிஷன் ஆயில் மற்றும் டிஃப்ரன்ஷியல் ஆயில் கசிவு | ஆய்வு & பராமரிப்பு பிரிவு |
| | 7 | பேட்டரி எலக்டிரோலைட் அளவு, டெர்மினல்கள் (மின் முனைகள்) மற்றும் பிராக்கெட்டுகளைச் சோதிக்கவும். | பக்கம் எண். 7-23 |
| | 8 | சக்கரத்துடன் இணைக்கப்பட்ட நட்டுகளை ஆய்ந்து தேவைப்பட்டால் அவற்றை இறுக்கவும். | பக்கம் எண். 8-5 |

| | | | |
|---|---|---|---|
| மாதா மாதம் | 9 | டிரைவ் பெல்ட் சேதமுற்றதா அல்லது தேய்ந்து விட்டதா என்று சோதிக்கவும். | பக்கம் எண். 7-8 |
| | 10 | ஏர் பில்டரை சுத்தம் செய்தல். | பக்கம் எண். 7-14 |
| | 11 | அனத்து செயின்கள், கீல்கள் மற்றும் பூட்டுக்களில் மல்டி-பர்ப்பஸ் கிரீஸைப் பயன்படுத்தவும். | பக்கம் எண். 7-5 |
| | 12 | கிரீஸ் கன்னுடன் சேர்ந்த கிரீஸ் புரொபெல்லர் ஷாஃப்ட் யுனிவர்சல் ஜாயிண்ட். | பக்கம் எண். 7-20 |
| | 13 | பியூயல் ஃபில்டரின் ஸ்குரூவை லூஸாக்கி நீரையும் கசடுகளையும் வெளியேற்றவும். | பக்கம் எண். 7-18 |
| தேவைப்படும் போதெல்லாம் | 14 | க்ளட்ச் பெடல் ப்ளேவை ஆய்வு செய்தல். | பக்கம் எண். 7-17 |
| | 15 | என்ஜின் இயங்கும்போது பிரேக் பெடல் முதல் தரைப் பேனல் தூரம் வரை அனைத்தையும் பிரேக் பிடித்து ஆய்வு செய்யவும். | பக்கம் எண். 7-19 |
| | 16 | பார்க்கிங் பிரேக்கை சரியான முறையில் அட்ஜஸ்ட் செய்வதற்குச் சோதிக்கவும். | பக்கம் எண். 7-20 |

*** சக்கரங்களின் ஒப்புமையைச் சோதித்து, வாகனம் ஒருபக்கம் சாய்வது போல அல்லது அதிவேகத்தில் செல்லும்போது அதிர்வது போலிருந்தால் அட்ஜஸ்ட் செய்ய வேண்டும்.**


## டிரைவ் பெல்ட்

**⚠ எச்சரிக்கை**

**என்ஜின் இயங்கும்போது கைகள், முடி, ஆடைகள், கருவிகள் முதலியவற்றை சுழலும் ஃபேன் மற்றும் டிரைவ் பெல்டுகளிலிருந்து தூரமாக வைக்கவும்.**

ட்ரைவ் பெல்ட் டென்ஷன் மிகச்சரியான அளவில் உள்ளதை உறுதி செய்யவும். பெல்ட் மிகவும் லூசாக இருந்தால், பேட்டரி சரியாக சார்ஜ் ஆகாது; என்ஜின் அதிகம் சூடாகி விடலாம்; (அ) அதீத பெல்ட் தேய்மானமும் நிகழலாம். புல்லிகளுக்கு நடுவே உங்களது கட்டைவிரலால் அழுத்தினால், அங்கு ஒரு பெல்ட்டுகள் சேதாரமடையவில்லை என உறுதிசெய்ய அவற்றையும் சோதித்தாக வேண்டும். பெல்ட்டை மாற்றும்போதோ (அ) அட்ஜஸ்ட் செய்யும்போதோ அதை உங்களது அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப்பில் மட்டும்தான் செய்யவேண்டும்.

**(பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)**




77PM07001


**(டீசல் என்ஜின் மாடலுக்காக மட்டும்)**
டிரைவ் பெல்ட்டுகளின் டென்ஷன் தானாகவே அட்ஜஸ்ட் ஆகிவிடும்.

சேதமடையாமல் இருக்கிறது என்பதை உறுதி செய்ய பெல்ட்டுகளையும் சோதனை செய்ய வேண்டும்.

பெல்ட்டுகளை மாற்ற/அட்ஜஸ்ட் செய்ய வேண்டுமென்றால், அவற்றை மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் செய்யவும்.

## என்ஜின் ஆயில் மற்றும் ஃபில்டர்

### குறிப்பிட்ட ஒருவகை ஆயில்
**(பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)**





77PM07002

(1) தேர்வு செய்யப்பட்டது

நீங்கள் உபயோகிக்கும் எஞ்ஜின் ஆயில் SG+, SH, SJ, SL, SM (அ) SN தரக்கட்டுப்பாட்டிற்குள் உள்ளதை உறுதிசெய்யவும். மேலுள்ள அட்டவணைப்படி பொருத்தமான ஆயில் பாகுத்தன்மையைத் தேர்ந்தெடுக்கவும். SAE 5W-30 ஆயிலைப் பயன்படுத்துமாறு வலுவாக பரிந்துரைக்கப்படுகிறது.

(டீசல் என்ஜின் மாடலுக்காக மட்டும்)





76MH024

(1) தேர்வு செய்யப்பட்டது

நீங்கள் பயன்படுத்தும் 5W-30 என்ஜின் ஆயிலானது ACEA A5/B5 தர நிர்ணயக் கட்டுப்பாட்டுக்குள் வருகிறது என்பதை உறுதி செய்து கொள்ளவும். மேற்கண்ட அட்டவணையின்படி, பொருத்தமான ஆயில் பாகுநிலையைப் பயன்படுத்தவும்.


## ஆயில் அளவு சோதனை

### (பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)




77PM07023

(டீசல் என்ஜின் மாடலுக்காக மட்டும்)





77PH036

(1) என்ஜின் ஆயில் டிப்ஸ்டிக்

முறையான வாகன லூப்ரிகேஷனுக்கு என்ஜின் ஆயிலைச் சரியான மட்டத்தில் வைத்திருப்பது மிக முக்கியமானதாகும். வாகனத்தின் ஆயில் மட்டத்தைச் சமதளப் பரப்பில் சோதித்துப் பார்க்கவும். வாகனம் சரிவான பாதையில் இருந்தால் ஆயில் அளவுசரியாகத் தெரியாது. என்ஜினை ஸ்டார்ட் செய்வதற்கு முன்பு அல்லது என்ஜினை அணைத்ததற்கு 5 நிமிடங்களுக்குப் பின் ஆயில் மட்டத்தைச் சோதித்து பார்க்க வேண்டும்.

எளிதில் அடையாளம் காணுவதற்காக என்ஜின் ஆயில் டிப்ஸ்டிக்கின் கைப்பிடி மஞ்சள் நிறத்தில் செய்யப்பட்டுள்ளது.




52D084

ஆயில் டிப்ஸ்டிக்கை வெளியில் எடுத்து, ஆயிலை சுத்தமான துணியால் துடைத்து டிப்ஸ்டிக்கை என்ஜினுக்குள் நுழைத்து அதை மீண்டும் நகர்த்தவும். ஸ்டிக்கிலுள்ள ஆயில் அளவு அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச எல்லைக்குள் இருக்க வேண்டும். ஆயில்அளவு குறைந்தபட்ச எல்லைக்கு அருகே இருந்தால்,

போதுமான ஆயிலை ஊற்றி மட்டத்தை அதிகபட்ச எல்லை வரை கொண்டு செல்லவும்.

*அறிவிப்பு*

**ஆயில் மட்டத்தை அவ்வப்போது சோதிக்காமல் விட்டு விட்டால் இதனால் ஆயில் குறைந்து என்ஜின் பிரச்சினையும் சேரலாம்.**


*அறிவிப்பு*

**அதிகபட்ச அளவுக்கு மேல் ஆயில் அளவு போகாமல் பார்த்துக் கொள்ளவும். அதீத அளவில் ஆயில் இருந்தால் என்ஜின் மோசமாகப் பாதிக்கப்படும்.**

### மீண்டும் நிரப்புதல்

### (பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)


உதாரணம்



77PM07024

### (டீசல் என்ஜின் மாடலுக்காக மட்டும்)

உதாரணம்



77PH037

ஆயில் ஃபில்லரின் மூடியை அகற்றி, மெதுவாக ஆயிலை ஃபில்லர் துவாரம் மூலம் நிரப்பி ஆயில் மட்டத்தை டிப்ஸ்டிக்கின் அதிகபட்ச அளவு வரை கொண்டு வரவும். அதிக அளவிலான ஆயிலை எப்போதும் நிரப்பாதீர்கள். அதிக ஆயில் கிட்டத்தட்ட மிகக் குறைந்த ஆயிலைப் போலத்தான்; அதனால் பயனேதுமில்லை. ஆயிலை நிரப்பியவுடன் என்ஜினை ஸ்டார்ட் செய்து அது 'ஐடில்' நிலைக்கு வர ஒரு நிமிடன் வரை காத்திருக்கவும். என்ஜினை அணைத்து விட்டு, 5 நிமிடம் வரை காத்திருந்து பின்னர் மீண்டும் ஆயில் மட்டத்தை சோதித்துப் பார்க்கவும்.

### ஃபில்டர் மற்றும் என்ஜின் ஆயில் மாற்றுதல்

என்ஜின் மிதமான சூட்டில் இருக்கும் போதே என்ஜின் ஆயிலை வடிக்கலாம்.


1) ஆயில் ஃபில்லர் மூடியை அகற்றவும்
2) ட்ரெய்ன் ப்ளக்குக்கு அடியில் ஒரு ட்ரெய்ன் பேனை வைக்கவும்.
3) ரெஞ்சைப் பயன்படுத்தி, ட்ரெய்ன் ப்ளக்கை அகற்றி என்ஜின் ஆயிலை வடிக்கவும்.

**⚠ நிதானம்**

**ட்ரெய்ன் ப்ளக்கை லூசாக்கிய பின் என்ஜின் ஆயிலின் தட்பவெப்ப நிலை உங்களது கைகளைச் சுடுமளவுக்கும் இருக்கலாம். ட்ரெய்ன் ப்ளக் சில்லென ஆகும் வரை காத்திருந்து அதன் பின் அதைக் கைகளால் தொடவும்.**


### (பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)

உதாரணம்




77PM07007

(டீசல் என்ஜின் மாடலுக்காக மட்டும்)




77PH038

ட்ரெய்ன் ப்ளக்குக்கு (1) டார்க்கை இறுக்கமாக்குதல்:
50 N m (5.1 kgf-m, 36.9 lbf-ft)


**⚠ எச்சரிக்கை**

**புதிய, பயன்படுத்தப்பட்ட ஆயில் ஆபத்து விளைவிக்கக்கூடியது. குழந்தைகளும் செல்லப் பிராணிகளும் இதை விழுங்கினால் பாதிக்கப்படுவர். புதிய, பயன்படுத்தப்பட்ட ஆயிலையும், பயன்படுத்தப்பட்ட ஆயில் ஃபில்டரையும் குழந்தைகள், செல்லப் பிராணிகள் செல்லாமல் பார்த்துக் கொள்ளவும்.**
**பயன்படுத்தப்பட்ட என்ஜின் ஆயிலை வெகுநேரம் தொட்டுக் கொண்டிருந்தால் தோல் புற்றுநோய் உண்டாகலாம்.**
**ஆயிலை சிறிது நேரம் தொட்டாலே தோல் எரிச்சல் உண்டாகலாம்.**
**பயன்படுத்தப்பட்ட ஆயிலைக் குறைவாக தொடுவதற்கு, ஆயிலை மாற்றும்போது முழுக்கை சட்டையையும் ஈரப்பதத்தைத் தாங்கும் க்ளவ்களையும் (பாத்திரம் தேய்க்கும்போது போடுவது போன்ற) பயன்படுத்தலாம். தோலில் ஆயில் பட்டால் அதை சோப், தண்ணீரைக் கொண்டு நன்கு கழுவவும்.**
**ஆயில் பட்ட துணிகளை/ஆடைகளை லாண்டிரிக்குப் போடவும்.**
**பயன்படுத்தப்பட்ட ஆயில், ஃபில்டர்களை ரீசைக்கிள் செய்யவும் அல்லது முறையாக அப்புறப்படுத்தவும்.**

4) ட்ரெய்ன் ப்ளக் மற்றும் கேஸ்கட்டை மீண்டும் பொருத்தவும். ப்ளக்கை ரெஞ்ச் ஒன்றைப் பயன்படுத்தி குறிப்பிட்ட டார்க்குடன் இறுக்கமாக்கவும்.

## ஆயில் ஃபில்டரை மாற்றவும்

1) ஆயில் ஃபில்டர் ரெஞ்சின்மூலம், ஆயில் ஃபில்டரை கடிகார எதிர்த் திசையில் சுழற்றி, பின்னர் அதை அகற்றவும்.
2) சுத்தமான துணியால் என்ஜினின் மேடான, புதிய ஃபில்டர் பொருத்தப்படும் பகுதியைத் துடைக்கவும்.
3) சிறிதளவு இஞ்ஜின் ஆயிலைப் புதிய ஆயில் ஃபில்டரின் ரப்பர் கேஸ்கட் மீது தெளிக்கவும்.
4) புதிய ஃபில்டரின் மீதுள்ள ஸ்குரூவைக் கையால் ஃபில்டர் கேஸ்கட்டின் மீது பதியும் வரை திருகவும்.





77PH017

(1) லூஸாக்கவும்
(2) இறுக்கமாக்கவும்

**இறுக்கமாக்குதல் (ஃபில்டர் உச்சியிலிருந்து பார்த்தபோது)**

**உதாரணம்**




54G093

(1) ஆயில் ஃபில்டர்
(2) 3/4 திருப்பவும்

*அறிவிப்பு*

**ஆயில் ஃபில்டரைச் சரியான விதத்தில் இறுக்கமாக்க ஃபில்டர் கேஸ்கட் உயர்ந்த பகுதியை எந்த பொஸிஷனில் தொடும் என்பதைச் சரியாக அடையாளம் காண வேண்டியது அவசியம்.**

5) ஃபில்டர் ரெஞ்சால் குறிப்பிட்ட ஃபில்டரை உயர்ந்த பகுதியுடன் (அல்லது டார்க் வரை) இறுக்கமாக்கவும்.

**ஆயில் ஃபில்டருக்காக டார்க்கை இறுக்கமாக்குதல்**
**3/4 திருப்பவும் அல்லது**
**14 N m (1.4 kgf-m, 10.3 lbf-ft)**

*அறிவிப்பு*

**ஆயில் கசிவைத் தவிர்க்க ஆயில் ஃபில்டர் இறுக்கமாக ஆனால் அதீதமான இறுக்கத்துடன் இல்லாதிருக்க வேண்டும்.**

### ஆயிலை மீண்டும் நிரப்பு, எண்ணெய் கசிகிறதா என்று பார்க்கவும்

1) ஃபில்லர் துவாரம் வழியா ஆயிலை ஊற்றி, ஃபில்லர் மூடியால் மூடவும்.
   ஆயிலின் துல்லியமான அளவைத் தெரிந்து கொள்ள 'குறிப்புகள்' பிரிவில் 'கொள்ளளவுகள்' என்கிற தலைப்பின் கீழுள்ளதைப் படிக்கவும்.
2) என்ஜினை ஸ்டார்ட் செய்து, ஆயில் ஃபில்டர் மற்றும் ட்ரெய்ன் ப்ளக் ஆகியவை கசிகிறதா எனச் சோதிக்கவும். குறைந்தபட்சம் 5 நிமிடங்கள் வரை என்ஜினைப் பல்வேறு வேகத்தில் ஓட வைக்கவும்.
3) என்ஜினை நிறுத்தி, 5 நிமிடங்கள் வரை காத்திருக்கவும். ஆயில் மட்டத்தை மீண்டும் பரிசோதித்து தேவைப்பட்டால் மேலும் ஆயிலைச் சேர்க்கவும். கசிவு இருக்கிறதா என்று பார்க்கவும்.

*அறிவிப்பு*

- **ஆயில் ஃபில்டரை மாற்றும்போது, மாருதியின் நம்பகத்தன்மை வாய்ந்த ஃபில்டரையே பயன்படுத்துமாறு பரிந்துரைக்கப்படுகிறது. சந்தை ஃபில்டரை பயன்படுத்தினால் அது தரமானதா எனப் பார்த்து, தயாரித்தவரின் குறிப்புக்களைப் பின்பற்றவும்.**
- **ஆயில் பில்டரிலும் ட்ரெய்ன் பிளக்கிலும் எண்ணெய்க் கசிவு இருந்தால் சரியாகப் பொருத்தப்படவில்லை அல்லது கேஸ்கட் சேதமாகி விட்டது என்று அர்த்தம். கசிவு இருந்தால் அல்லது ஃபில்டர் சரியாகப் பொருத்தப்பட்டிருகிறதா என்று தெரியாதபோது, மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் வந்து சோதித்துக் கொள்ளவும்.**

## என்ஜின் கூலண்ட்

### கூலண்ட்டைத் தேர்வு செய்வது

என்ஜினின் அதிகபட்ச செயல்திறனையும் நீடித்த ஆயுளையும் பராமரிக்க, மாருதி சுசூகி தயாரித்த கூலண்ட் (அ) அதற்குச் சமமான ஒன்றைப் பயன்படுத்தவும்.
வாகனத்தின் கூலிங் சிஸ்டத்துக்கு இத்தகைய கூலண்ட்தான் மிகச் சிறந்தது:

- முறையான என்ஜின் தட்பவெப்ப நிலை இதனால் மட்டுமே பராமரிக்கப்படுகிரது.
- உறைதல், கொதித்தல் ஆகியவற்றுக்கு எதிராக சரியான பாதுகாப்பு கிடைக்கிறது.
- அரிமானம், துருப்பிடித்தல் ஆகியவற்றில் இருந்து சரியான பாதுகாப்பு கிடைக்கிறது.

முறையான கூலண்டைப் பயன்படுத்தாத போது கூலிங் சிஸ்டம் சேதமடையலாம். சரியான கூலண்டைத் தேர்ந்தெடுக்க அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் டீலர் உங்களுக்கு உதவுவார்.

### அறிவிப்பு

கூலிங் சிஸ்டம் சேதமுறாமல் தவிர்க்க:

- உயர்தர எதிலீன் கிளைகால் உள்ள சிலிகேட் அல்லாத, தூய்மையான நீரால் சரியான கலவை /அடர்த்தியில் நீர்க்கப்பட்ட கூலண்டுகளையே எப்போதும் பயன்படுத்தவும்.
- கூலண்ட் – தூய்மையான நீர்க்கலவை எப்போதும் 30-70 விகிதத்தில்தான் இருக்க வேண்டுமே தவிர 70-30-ஐத் தாண்டவே கூடாது. 70-30-ஐ விட அதிக அடர்த்தியானது அதிக சூடாகும் நிலையை ஏற்படுத்தி விடும்.
- நேரான கூலண்ட் அல்லது சாதாரண நீரைப் பயன்படுத்தாதீர்கள்.
- உபரியான வேறெந்தப் பொருளையும் சேர்க்காதீர்கள். அது உங்களது கூலிங் சிஸ்டத்துடன் ஒத்துப் போகாத ஒன்றாக இருக்கலாம்.
- வெவ்வேறு வகை பேஸ் கூலன்ட்டுகளை ஒன்றாகக் கலக்கவேண்டாம். அப்படிச் செய்வதால் சீல் மிக வேகமாகத் தேய்மானம் அடையலாம் மற்றும் / அல்லது அதிகமாகச் சூடாகி என்ஜின் சேதமடைய நேரலாம்.

### கூலண்ட் அளவுப் பரிசோதனை

ரேடியேட்டரை விட்டு விட்டு சேமிப்புத் தொட்டியில் கூலண்ட் மட்டத்தைச் சோதிக்கவும். என்ஜின் கூலாக இருந்தால், கூலண்ட் அளவு ‘முழுமையான’ & ‘குறைவான’ இரண்டுக்கும் இடையில்தான் இருக்க வேண்டும். தேவைப்பட்டால் கையை பயன்படுத்தவும்

### கூலண்டைச் சேர்த்தல்


**⚠ எச்சரிக்கை**

என்ஜின் கூலண்ட் தீங்கு விளைவிக்கக் கூடியது; முழுங்கினால் / சுவாசித்தால் மிகவும் அபாயம் தரக்கூடியது. ஆண்டி-ஃப்ரீஸ் அல்லது கூலண்ட் திரவத்தை எப்போதும் பருகாதீர்கள். தெரியாமல் முழுங்கி விட்டால், வாந்தி எடுக்கச் சிரமப்படாதீர்கள். உடனடியாக விஷம் முறிவு மையத்தையோ அல்லது டாக்டரையோ தொடர்பு கொள்ளவும். பனி (அ) சூடான ஆவியை சுவாசிப்பதை தவிர்க்கவும்; அவை உள்ளே சென்றால், உடனடியாக நல்ல காற்றைத் தேடிச் சென்று சுவாசிக்கவும். கூலண்ட் கண்களில் பட்டு விட்டால், கண்களை நீரல் கழுவி, பின் மருத்துவ உதவியைக் கேட்டுப் பெறவும். கூலண்டைக் கையாண்ட பின் கைகளைச் சுத்தமாகக் கழுவவும். இக்கலவை மிருகங்களுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியதாகும். குழந்தைகள், விலங்குகளின் மீது படாமல் தூரமாகத் தள்ளி வைக்கவும்.

### அறிவிப்பு


- பயன்படுத்தும் கலவை 30% ஆண்டி ஃப்ரீஸ் திரவம் உள்ளதாக இருக்க வேண்டும்.
- உங்களது இருப்பிடத்தில் வெப்பநிலை - 35°C (செல்சியஸ்) (–31° F பாரன்ஹீட்) அல்லது அதற்குக் கீழே இருந்தால், ஆண்டி ஃப்ரீஸ் கண்டெய்னரில் 60% வரை அடத்தியான கலவையைக் கீழுள்ள குறிப்புகளோடு பயன்படுத்தவும்.

**(பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)**




77PM07010

**(டீசல் என்ஜின் மாடலுக்காக மட்டும்)**




77PH039

கூலண்ட் அளவு “L” (குறைவான)வை விடக் குறைவாக இருந்தால், அதிக கூலண்ட் கலக்கப்பட வேண்டும்.
தொட்டியின் மூடியை அகற்றி “F” (முழுமையான) என்ற அளவுக்கு வரும் வரை கூலண்டைச் சேர்க்கவும். தொட்டியில் “F” (முழுமையான) அளவுக்கு மேல் எப்போதும் நிரப்பாதீர்கள்.

*அறிவிப்பு*


**தொட்டி மீது மூடியை மூடும்போது மட்டத்தை மூடியிலும் தொட்டியிலும் குறித்துக் கொள்ளவும். இதைச் சரியாகப் பின்பற்றா விட்டால் கூலண்ட் கசிவு ஏற்படலாம்.**

**கூலண்டை மாற்றுதல்**
விஷேஷமான செய்முறைகள் தேவைப் படுவதால் வாகனத்தை அருகிலுள்ள மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் எடுத்துச் சென்று கூலண்டை மாற்றுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

## ஏர்-க்ளீனர்


ஏர்-க்ளீனர் தூசியால் அடைபட்டிருந்தால், காற்று உட்புகாமல் மின்சக்தி குறைவாக வெளிவருவதால் பியூயல் அதிகம் செலவாகும் வாய்ப்புள்ளது.

**(பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)**




77PM07011

**(டீசல் என்ஜின் மாடலுக்காக மட்டும்)**



77PH040

பக்கவாட்டு கொக்கிகளை அகற்றி, ஏர்-க்ளீனர் பெட்டியிலிருந்து எலிமண்ட்டை அகற்றவும்.




60A183

ஏர்-க்ளீனர் அசுத்தமாகத் தெரிந்தால், சுத்தம் செய்யவும் அல்லது புதிய ஏர்-க்ளீனரை வாங்கி மாட்டவும்.

## ஸ்பார்க் ப்ளக்


**(பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக)**



77PM07003

ஸ்பார்க் ப்ளக்குகளில் கார்பன் படிவுகள் தங்கி விடுகின்றனவா என அவ்வப்போது சோதனை

செய்யவும். ஸ்பார்க் ப்ளக்கில் கார்பன் படிவு சேர்ந்தால், வலுவான தீக்கீற்று உருவாகாது. கார்பன் படிவுகளை ஒயர் (அ) பின்னால் நீக்கி ஸ்பார்க் ப்ளக் இடைவெளியை அட்ஜஸ்ட் செய்யவும்.





77PM07004

ஸ்பார்க் ப்ளக்கைச் சென்றடைய,

1) ரிலீஸ் லீவரை அழுத்தும்போது கப்ளரை விடுவிக்கவும்.
2) போல்ட்டுகளை அகற்றவும்; மற்றும்
3) ஸ்பார்க் ப்ளக் பூட்டுகளை இழுக்கவும்

***அறிவிப்பு***


- **ஸ்பார்க் ப்ளக்குகள்/ப்ளக்ஸ் கேபிள்களை விடுவிக்கும்போது, பூட்டை இழுக்கவும்; ஆனால் அதை கேபிள் மேல் விடாதீர்கள். கேபிளை இழுத்தால் அது சேதம் அடையும்.**




77PM07017

***அறிவிப்பு***

- **ஸ்பார்க் பிளக்குகளை இன்ஸ்டால் செய்யும்போது கைகளாலேயே திருகவும். திரெட்டுகள் தேயாமல் இருக்க இது உதவும். ஸ்பார்க் பிளக்குகளை 20.0 முதல் 30.0 N m (2.0 - 3.0 kg-m, 15.0 - 22.0 lb-ft) அளவுக்கு டைட் செய்யவும். ஸ்பார்க் பிளக்கைக் கழற்றும் போது ஸ்பார்க் பிளக் ஓல் வழியே துசுகள் என்ஜினுக்குள் போக அனுமதிக்காதீர்கள்.**
- **தவறான திருகு அளவு கொண்ட ஸ்பார்க் பிளக்குகளை ஒருபோதும் பயன்படுத்தாதீர்கள்.**




77PM07018

**ஸ்பார்க் ப்ளக் கேப் "a":**
**BOSCH -FR6DC**
**0.8-0.9 mm (0.031-0.035 in.)**

***அறிவிப்பு***


**ஸ்பார்க் ப்ளக்கைப் பொருத்தும்போது, உங்கள் வண்டிக்கென குறிப்பாக உள்ள பிராண்டையும் வகையையும் பயன்படுத்துங்கள். குறிப்பிட்ட ப்ளக்குகளுக்காக இப்புத்தகத்தின் இறுதியில் "குறிப்புகள்"பிரிவில் கூறப்பட்டுள்ளவற்றைப் பார்க்கவும். குறிப்பிட்டுள்ளதைத் தவிர வேறு பிராண்ட் ப்ளக்கைப் பயன்படுத்த நினைத்தால், இதுகுறித்து அதுகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப்பிடம் ஆலோசிக்கவும்.**

## கியர் ஆயில்

### மானுவல் டிரான்ஸ்மிஷன் ஆயில்/ டிஃபரன்ஷியல் ஆயில்

கியர் ஆயிலைச் சேர்க்கும்போது, கீழுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி சரியான பாகுநிலை/கிரேடு உள்ள கியர் ஆயிலை மட்டுமே பயன்படுத்தவும்.


**மானுவல் டிரான்ஸ்மிஷன் ஆயில்**




68LM728

கீழுள்ளவற்றை மட்டும் பயன்படுத்த நாங்கள் பரிந்துரைக்கின்றோம்:
மானுவல் டிரான்ஸ்மிஷனுக்கு “நம்பகத் தன்மை வாய்ந்த மாருதி கியர் ஆயில் 75W-80”-ஐப் பயன்படுத்துங்கள்.

**பின்புற டிஃபரஷியல் ஆயில்**





77PH075

கீழுள்ளவற்றை மட்டும் பயன்படுத்த நாங்கள் பரிந்துரைக்கின்றோம்:
“டோட்டல்பினலஃப் ட்ரான்ஸ்லஃப் எல்.எல் 85W-140”-ஐப் பயன்படுத்தவும்.


## கியர் ஆயில் அளவுப் பரிசோதனை

**மானுவல் டிரான்ஸ்மிஷன்**




77PH078

**பின்புற டிஃபரன்ஷியல்**




77PH047

1. ஆயில் ஃபில்லர் & லெவல் ப்ளக் (இன்னொரு முறை பயன்படுத்தாதீர்கள்).
2. ஆயில் ட்ரெய்ன் ப்ளக்

கியர் ஆயில் மட்டத்தைச் சோதிக்க, பின்வரும் செய்முறையைச் செய்யவும்.

1) பார்க்கிங் பிரேக்கைப் பயன்படுத்தி சமதளத்தில் வாகனத்தை நிறுத்துங்கள். பின்னர், என்ஜினை ஆஃப் செய்யவும்.
2) ஆயில் ஃபில்டர், லெவல் ப்ளக்கை (1) அகற்றவும்.
3) விரலை உள்ளே விட்டு துவாரத்தின் உட்புறம் சோதிக்கவும். ஆயில் அளவு ப்ளக்கின் அடிப்பகுதிக்குச் சென்றிருந்தால், ஆயில் அளவு சரியானது என்று அர்த்தம். அவ்வாறு இருந்தால், ப்ள்க்கை மீண்டும் பொருத்தி வைக்கவும்.
4) ஆயில் அளவு குறைவாக இருந்தால், ஆயில் ஃபில்லர் ப்ளக் துவாரம் (1) வழியே கியர் ஆயிலைச் சேர்க்கவும்; ஆயில் ஃபில்லர் துவாரத்தின் அடிப் பகுதிக்குச் சென்றவுடன், ப்ளக்கை மீண்டும் பொருத்தவும்.

**ஆயில் ஃபில்லர், லெவல் ப்ளக்கிற்கான டார்க்கை இருக்கமாக்குதல்**
**மானுவல் டிரான்ஸ்மிஷன் (1):**
**23 Nm (2.3 kgf-m, 17.0 lbf-ft)**
**பின்புற டிஃபரன்ஷியல்(1):**
**25 Nm (2.5 kgf-m, 18.5 lbf-ft)**

*குறிப்பு:*
*பின்புற டிஃபரன்ஷியலுக்கு எப்போதும் புதிய ஆயில் ஃபில்லரையும் லெவல் ப்ளக்கையும் பயன்படுத்தவும் (1).*

**⚠ நிதானம்**

**வாகனத்தை இயக்கியவுடன், கியர் ஆயில் வெப்பநிலை உங்கள் கைகளைச் சுடுமளவுக்கு அதிகமாகி விடலாம். ஆயில் ஃபில்லர் ப்ளக் சில்லென ஆகும் வரை காத்திருந்து பின்னர் அதைக் கையால் தொட்டு கியர் ஆயில் மட்டத்தைச் சோதிக்கவும்.**


| *அறிவிப்பு* |
|---|
| **ப்ளக்கை இறுக்கமாக்கும்போது பின்வரும் சீலிங் காம்பவுண்ட் அல்லது அதற்குச் சமமானதை ப்ளக்கில் தடவினால் ஆயில் கசிவு தடுக்கப்படும்.** <br> **மாருதி சுசூகி பாண்ட் எண். "1216E" அல்லது "1217G"** |

### கியர் ஆயில் மாற்றுதல்

இதில் சிறப்பான செய்முறை, கருவிகள், உபகரணங்கள் அடங்கி இருப்பதால், இப்பணியை அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் விட்டு விடவும்.

## க்ளட்ச் பெடல்

### கேபிள் கண்ட்ரோல் க்ளட்ச்





54G274

**க்ளட்ச் பெடல் ப்ளே "d":**
**10-15 mm (0.4-0.6 in.)**

க்ளட்ச் பெடலைக் கையால் நகர்த்தி கைகளில் 'எதிர்ப்பை' உணரும் வரை அது நகரும் தூரத்தை அளக்கவும். க்ளட்ச் பெடலில் உள்ள 'ப்ளே' எப்போதும் குறிப்பிட்ட மதிப்புக்குள் இருக்க வேண்டும். ப்ளேயின் அளவு வித்தியாசமாக இருந்தால் அல்லது க்ளட்ச் முழுவதும் கீழே இறங்கி விட்டால், மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் சென்று க்ளட்சைப் பரிசோதனை செய்யவும்.

## பியூயல் ஃபில்டர் (டீசல் என்ஜின் மாடலுக்காக மட்டும்)




77PH089

பியூயல் ஃபில்டர் வடிகட்டியைப் போலவும் வேலை செய்கிறது.


'பராமரிப்புத் திட்டத்தின்படி' நீரை வடிக்கவும்.
நீரை வடிக்க:

1) பியூயல் ஃபில்டருக்கு அடியே ஒரு பாத்திரத்தை வைத்து மூடியை எடுக்கவும்.
2) ட்ரெய்ன் ஸ்க்ரூவை லூஸாக்கவும் (1). நீர் வெளியேற்றப்பட்டு விடும்.
3) நீர் டீசல் எரிபொருளாக மாறும்போது ட்ரெய்ன் ஸ்க்ரூவை இறுக்கமாக்கவும்.

**ட்ரெய்ன் ஸ்குரூவுக்காக டார்க்கை இறுக்கமாக்குதல்**
**1.0 Nm (0.10 kgf-m, 0.74 lbf-ft)**

## பிரேக்குகள்

### ப்ரேக் திரவம்




77PM706

இன்ஸ்ட்ருமெண்ட் பேனலில் உள்ள தொட்டியில் உள்ள பிரேக் திரவத்தின் மட்டத்தைச் சோதிக்கவும். ஸ்டீயரிங் வீலின் வலது கைப்புறம் உள்ள கவரை அகற்றி பிரேக் திரவத் தொட்டியின் மட்டத்தைச் சோதிக்கவும். திரவத்தின் அளவு "MAX" (அதிகபட்சம்) மற்றும் "MIN" (குறைந்தபட்சம்) ஆகியவற்றுக்கிடையே இருக்கிறதா என்பதைச் சோதிக்கவும். பிரேக் திரவ அளவு "MIN" (குறைந்தபட்சம்) அருகில் இருந்தால், அது "MAX" (அதிகபட்சம்) வரை வரும் வரைக்கும் நம்பகத்தன்மை வாய்ந்த மாருதி பிரேக் திரவத்தை நிரப்புங்கள்.

**⚠ எச்சரிக்கை**

நெறிமுறைகளைப் பின்பற்றா விட்டால் காயம் ஏற்படலாம் அல்லது பிரேக் சிஸ்டம் தீவிரமாகப் பாதிக்கப்படலாம்.

- பிரேக் தொட்டியில் திரவம் குறிப்பிட்ட அளவு குறைந்தால், இன்ஸ்ட்ரூமெண்ட் பேனலில் உள்ள பிரேக் வார்னிங் லைட் ‘ஆன்’ ஆகி விடும் (என்ஜின் ஓடும்போது, பார்க்கிங் பிரேக் இணைப்பற்று இருக்கும்போது). லைட் எரிந்தால் உடனே மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் சென்று பிரேக் சிஸ்டத்தைச் சோதிக்கச் சொல்லுங்கள்.
- திரவம் சீக்கிரமாகக் குறைந்தால் பிரேக் சிஸ்டத்தில் கசிவு ஏற்படலாம்; இதை உடனே மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் சென்று சோதிக்கச் சொல்லவும்.
- நம்பகத்தன்மை உடைய மாருதி சுசூகி பிரேக் திரவத்தைத் தவிர வேறெந்தத் திரவத்தையும் பயன்படுத்தாதீர்கள். திரும்பப் பெறப்பட்ட/பழைய டப்பாவில் வைக்கப்பட்டிருந்த திரவத்தைப் பயன்படுத்த வேண்டாம். அந்நியப் பொருட்களும் மற்ற திரவங்களும் பிரேக் திரவத் தொட்டியில் படாமல் பார்த்துக் கொள்வது மிக அவசியம்.

**⚠ நிதானம்**

பிரேக் திரவத்தால் கண்களும், பெயிண்ட் அடிக்கப்பட்ட பரப்புக்களும் பாதிக்கப்படும். தொட்டியை நிரப்பும்போது கவனம் தேவை.

**⚠ எச்சரிக்கை**

- வாகனத்தில் அதிக எடை இருந்தால், பிரேக்கிங் தூரம் அதிகமாக இருக்கும், அதிக பெடல் விசையும் தேவைப்படலாம்.


**⚠ எச்சரிக்கை**

முழுங்கப்பட்டால் பிரேக் திரவம் தீங்கு இழைக்கும்; கண்ணில்/தோலில் பட்டால் அதிக அளவு ஆபத்தை விளவிக்கலாம். தெரியாமல் முழுங்கி விட்டால், வாந்தி எடுக்கச் சிரமப்படாதீர்கள். உடனடியாக விழ முறிவு மையத்தையோ (அ) டாக்டரையோ தொடர்பு கொள்ளவும். பிரேக் திரவம் கண்ணில் பட்டால் நீரால் சுத்தமாகக் கழுவி, அதன் பின்னர் மருத்துவ உதவியைப் பெறவும். கூலண்டைக் கையாண்ட பின் கைகளைச் சுத்தமாகக் கழுவவும். இக்கலவை மிருகங்களுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியதாகும். குழந்தைகள், விலங்குகளின் மீது படாமல் தூரமாகத் தள்ளி வைக்கவும்.

*குறிப்பு:*
*டிஸ்க் பிரேக்குகள் இருப்பதால் பிரேக் பேடுகள் தேயத் தேய திரவத்தின் அளவு படிப்படியாகக் குறையலாம்.*

### பிரேக் பெடல்

அழுத்தும்போது கால்கள் சிரமப்படாமல் சரியான உயரத்தில் பிரேக் பெடல் நிற்கிறதா என்று சோதிக்கவும். இல்லையெனில் மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் சென்று பிரேக் சிஸ்டத்தைப் பரிசோதித்துக் கொள்ளவும். பிரெப் பெடல் சரியான உயரத்தில் நிற்கவில்லை என்ற சந்தேகம் இருந்தால், பின்வருவனவற்றைச் சோதிக்கவும்:





54G108S

பெடல் முதல் முன்புற் பேனல் வரை குறைந்தபட்ச தூரம் “a”:
பெட்ரோல் மற்றும் பை-பியூயல் எஞ்ஜின் மாடலுக்காக:
150 mm (6.1 in.)
டீசல் என்ஜின் மாடலுக்காக மட்டும்:
180 mm (7.1 in.)

என்ஜின் ஓடிக் கொண்டிருக்கும்பொது, பெடல் 30 கிலோவில் (66 பவுண்டுகள்) அழுத்தப்படும்போது பிரேக் பெடல் மற்றும் முன்புற பேனலுக்கிடையே உள்ள தூரத்தை அளக்கவும். குறிப்பிடப்பட்டுள்ளபடி குறைந்தபட்ச தூரம் இருக்க வேண்டும். வாகனத்தின் பிரேக் சிஸ்டம் தானாகவே அட்ஜஸ்ட் செய்து கொள்ளக் கூடியது என்பதால், பெடலை அட்ஜஸ்ட் செய்யத் தேவையில்லை.
பெடல் முதல் முன்புற பேனல் வரை அளக்கப்பட்ட தூரம் குறைந்தபட்ச குறிப்பிடப்பட்ட தூரத்தை விடக் குறைவாக

இருந்தால், வாகனத்தை மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் சென்று சோதிக்கவும்.

*குறிப்பு:*
*பிரேக் பெடல் மற்றும் முன்புற பேனல் இடையிலான தூரத்தை அளக்கும்போது, தரை விரிப்பு அல்லது முன்புற பேனலில் இருக்கும் ரப்பரை உங்களது அளவில் சேர்த்துக் கொள்ளக் கூடாது.*




77PM07013

**⚠ எச்சரிக்கை**

**பின்வரும் ஏதாவது பிரசினை இருந்தால், உடனே மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் சென்று வாகனப் பரிசோதனை செய்து கொள்ளவும்.**

- **மோசமாக பிரேக்கிங் செயல்பாடு**
- **சீரற்ற பிரேக்கின் (டயர்கள் அனைத்திலும் பிரேக் ஒரே மாதிரி வேலை செய்யாதது).**
- **அதிகப்படியான பெடல் பயணம்**
- **பிரேக் ட்ராகிங்**
- **அதிகப்படியான சப்தம்**
- **பெடல் அதிர்வு (அழுத்தப்படும்போது பெடல் அதிருதல்)**

### பார்க்கிங் பிரேக்



77PM702


**ராட்செட் டூத் அளவீடு**
**6-வது முதல் 9-வது பல் வரை**
**லீவர் இழுவிசை (1):**
**200 N (20 kgf, 44 lbf)**

பார்க்கிங் பிரேக்கை முறையாக அட்ஜஸ்ட் செய்ய பார்க்கிங் பிரேக் லீவரை மெதுவாக முழுமையான இயக்கத்திற்கு இழுத்து ராட்செட்டால் ஏற்படும் க்ளிக்குகளை எண்ன வேண்டும். பார்க்கிங் பிரேக் லீவர் குறிப்பிடப்பட்டுள்ள ராட்செட் டீத் நடுவே நிற்க வேண்டும்; பின்புற டயர்கள் பாதுகாப்பாக லாக் ஆக வேண்டும். பார்க்கிங் பிரேக் சரியாக அட்ஜஸ்ட் செய்யப் படவில்லை (அ) லீவர் முழுவதுமாக விடுவிக்கப்படவில்லை என்றால் மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் சென்று பார்க்கிங் பிரேக்கை அட்ஜஸ்ட் செய்யவும்/ சோதிக்கவும்.

**⚠ எச்சரிக்கை**

- **வாகனத்தில் அதிக எடை இருந்தால் பார்க்கிங் பிரேக் பயனுள்ள பலன் தராது. வாகனத்தைத் தாங்கிப் பிடிக்கக் கூடுதல் கட்டைகளைப் பயன்படுத்தவும்.**

## ஸ்டீயரிங்



77PH042


**ஸ்டீயரிங் வீல் ப்ளே "C"**
**0 - 30 mm (0.0 - 1.2 in.)**

ஸ்டீயரிங்கின் ப்ளேயை நடுவிலிருந்து இடது/ வலது புறம் மெதுவாகத் திருப்பி, அது நகரும் தூரத்தை (கைகளில் எதிர்ப்பு உணரப்படும் வரை) சோதிக்கலாம். ப்ளே எப்போதும்

குறிப்பிடப்பட்ட மதிப்புகளுக்குள்தான் இருக்க வேண்டும்.
ஸ்டீயரிங் வீல் சுலபமாகத் திரும்புகிறதா என்று சோதிக்கவும்; அதை வலது/இடது புறம் சிரமமின்றித் திருப்ப முடிந்தால்தான் மெதுவாக ஓட்டும்போது வசதியாக இருக்கும்.
குரிப்பிடப்பட்ட அளவுக்கு வெளியே ஃப்ரீ ப்ளே இருந்தால் அல்லது பிரச்சினை ஏதாவது தென்பட்டால், மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் சென்று அதைச் சோதித்துக் கொள்ளவும்.


## புரொபெல்லர் ஷாஃப்ட் யுனிவர்சல் ஜாயிண்ட்

முன்புறம்




77PM703

பின்புறம்





77PM704

சர்வீஸ் திட்டத்தின்படி புரொபெல்லர் ஷாஃப்ட் ஜாயிண்டை லூப்ரிகேட் செய்ய, கிரீஸ் கன்னை (2) குறிப்பிடப்பட்டுள்ள கிரீஸ் கிரேடுடன் பயன்படுத்தவும்.

புரொபெல்லர் ஷாஃப்டை லூப்ரிகேட் செய்ய கிரீஸ் கன்னை (2) குறிப்பிடப்பட்டுள்ள கிரீஸ் கிரேடுடன் (என்.எல்.ஜி.ஐ க்ரேடு 2) பயன்படுத்தவும்.

## டயர்கள்




77PM705

முன்புற, பின்புற டயர்களின் அழுத்தம் பற்றிய குறிப்புக்கள் 'டயர் தவல் லேபிள்' தலைப்பின் கீழ் தரப்பட்டுள்ளன. முன்புற/பின்புற் டயர்கள் அவற்றுக்கென குறிப்பிடப்பட்டுள்ள அழுத்தத்துடன் மட்டுமே இருக்க வேண்டும். உபரி டயருக்கு - அது பயன்படுத்தப்படும் வரை - இது பொருந்தாது.

### டயர் பரிசோதனை


மாதமொரு முறை டயர்களில் பின்வரும் சோதனைகளைச் செய்யவும்:

1) பிரஷர் காஜின் உதவியுடன் காற்றழுத்தம் அளக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால் காற்றழுத்தத்தை அட்ஜஸ்ட் செய்யவும். உபரி டயரின் காற்றழுத்தத்தையும் சோதிக்க மறக்காதீர்கள்.

**⚠ எச்சரிக்கை**

- **டயர்கள் சில்லென்று ஆனதும் (அ) ரீடிங் தவறாக இருப்பது போல் தெரிந்தால், காற்றழுத்தத்தைச் சோதிக்கவும்.**
- **காற்றடிக்கும்போது தேவையான அழுத்தம் பெறப்படும் வரை டயர் அழுத்தத்தை அவ்வப்போது டெஸ்ட் செய்ய வேண்டும்.**
- **காற்றழுத்தம் குறைவாகவோ அல்லது அதிகமாவோ எப்போதும் இருக்கக்கூடாது.**
- **அழுத்தம் குறைவாக இருந்தால் வாகனத்தைக் கையாள்வதில் பல சிரமங்கள் ஏற்படும்; டயரை விட்டு ரிம் கழன்று ஓடும்; இதனால் விபத்து நேரிடும்.**
- **அதிக அழுத்தம் இருந்தால் டயர் வெடித்து விடக்கூடும்; இதனால் ஓட்டுநருக்கும் பிறருக்கும் காயம் ஏற்படக்கூடும். அதிக அழுத்தத்தால் வாகனக் கட்டுப்பாடு கடினமாவதுடன் விபத்தும் நேரிடலாம்.**

**உதாரணம்**




52KM110

(1) ட்ரெட் வியர் இண்டிகேட்டர்
(2) இண்டிகேட்டர் லொகேஷன் மார்க்

2) ட்ரெட் குரூவின் ஆழம் 1.6 மிமீ-க்கு மேல் (0.06 இன்ச்) இருக்கிறதா என சோதிக்கவும். இதைச் சோதிக்க உங்களுக்கு உதவுவதற்கு டயர்களில் மோல்ட் செய்யப்பட்ட ட்ரெட் வியர் இண்டிகேட்டர்கள் குரூவ்களில் தரப்பட்டுள்ளன ட்ரெட் பரப்பில் இண்டிகேட்டர்கள் தோன்றினால், மீதமுள்ள ட்ரெட் ஆழம் 1.6 மிமீ (0.06 இன்ச்) அல்லது அதற்குக் குறைவாக இருக்கும்; எனவே, டயரை மாற்ற வேண்டியது அவசியமாகும்.
3) அசாதாரண தேய்மானம், விரிசல்கள், சேதங்கள் உள்ளதா என்று சோதிக்கவும். விரிசல் உள்ள/சேதமுற்ற டயர்கள் மாற்றப்பட்டாக வேண்டும். அசாதாரணமான தேய்மானம் இருந்தால், அவற்றை மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் சென்று சோதித்துக் கொள்ளவும்.

**⚠ நிதானம்**

**சாலைத் தடுப்பில் இடிப்பதும், கடினமான பாறைகளில் செல்வதும் டயர்களைச் சேதப்படுத்தி, சக்கரங்களை ஆட்டம் காணச் செய்து விடும். மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் டயர்கள்/சக்கரங்கள் ஆடாமல் இருக்கிறது என்பதை அவ்வப்போது உறுதி செய்து கொள்ளவும்.**

4) வீல் நட்டுகள் லூசாக இருக்கிறதா எனச் சோதிக்கவும்.
5) ஆணிகள், கற்கள் அல்லது பொருட்கள் டயர்களில் மாட்டிக் கொண்டுள்ளனவா எனச் சோதிக்கவும்.


**⚠ எச்சரிக்கை**

- **வாகனத்திலுள்ள அனைத்து டயர்களும் ஒரே மாதிரியான அளவு/வகையானவை. முறையான ஸ்டீயரிங், கையாளுதலுக்கு இது மிக முக்கியமான அம்சமாகும். வெவ்வேறு அளவு/வகையிலான டயர்களை 4 சக்கரங்களில் எப்போதுமே பயன்படுத்தக்கூடாது. மாருதி சுசூகி நிறுவனம் அங்கீகரித்த அளவு/வகையான டயர்களையே உங்கள் வாகனத்துக்கு எப்போதும் பயன்படுத்தவும்.**
- **டயர்/சக்கரத்தை மாற்றும்போது மற்ற பிராண்டுகளைப் பயன்படுத்தினால் அது ஸ்டீயரிங் மற்றும் வாகனத்தின் பிற குணநலன்களைப் பெருமளவு பாதிக்கும்.**
- **எனவே, மாருதி சுசூகி அங்கீகரித்த அளவு/ வகையிலான சக்கரம்/டயர்களை மட்டுமே எப்போதும் பயன்படுத்தவும்.**

**அறிவிப்பு**

**ஒரிஜினல் டயர்களை வேறு அளவுள்ள டயர்களால் மாற்றினால் ஸ்பீடோமீட்டர் அல்லது ஓடோமீட்டர் காட்டும் ரீடிங் தவறாக இருக்கும். ஒரிஜினல் டயரை விட வித்தியாசமான டயரைப் பொருத்த வேண்டுமென்றால் மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் அது பற்றி ஆலோசனை பெறவும்.**

### டயர் சுழற்சி




80JK7001

டயர்கள் சீரற்ற முறையில் தேய்மானம் ஆவதைத் தடுக்கவும் அவற்றின் ஆயுளை அதிகரிக்கவும், டயர்களை படத்தில் குறிப்பிட்டுள்ளபடி சுழற்சி முறையில் பயன்படுத்தவும். ஒவ்வொரு 10000 கி.மீ.-க்கும் டயர்களை சுழற்சி முறையில் ஈடுபடுத்தவும். முன்புற/பின்புற டயர் காற்றழுத்தத்தை வாகனத்தின் 'டயர் தகவல் லேபிளில்' குறிப்பிட்டுள்ளபடி வைத்துக் கொள்ளவும்.

### சக்கரங்களை ஆடாமல் பார்த்துக் கொள்வது

சீரான சாலையில் அசாதாரண அதிர்வு தெரிந்தால், சக்கரங்களை அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப்பில் பேலன்ஸ் செய்து கொள்ளவும்.


### சக்கரங்கள் சீரமைத்துக் கொள்வது

அசாதாரணமான டயர் தேய்மானம் அல்லது ஒருபுறமாகத் தேய்வது போல் தெரிந்தால், சக்கரங்களை அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப்பில் அலைன்மெண்ட் செய்து கொள்ளவும்.

## பேட்டரி

**⚠ எச்சரிக்கை**

- **தீப்பற்றக்கூடிய ஹைட்ரஜன் வாயுவை பேட்டரிகள் உற்பத்தி செய்கின்றன. புகை பிடிப்பது, தீப்பொறி (அ) நெருப்புப் பிழம்பை பியூயல், பேட்டரியின் அருகில் வைத்தால் அது வெடித்து விடும்.தீப்பிழம்பு, தீப்பொறி ஆகியவற்றை பேட்டரியிலிருந்து தூரமாக வைக்கவும்; இல்லையேல் பேட்டரி வெடித்து விடும். பேட்டரிக்கு அருகாமையில் வேலை செய்யும்போது புகை பிடிக்காதீர்கள்.**
- **பேட்டரியைச் சோதிக்கும்போதும் சர்வீஸ் செய்யும்போதும் எதிர்மறை மின்னிணைப்புக் கேபிளைத் துண்டிக்கவும். பேட்டரிக் கம்பிகள், வாகனத்தின் மீது உலோகப் பொருட்கள் படாமலிருந்தால் மின்சுற்றுக் கோளாறு இருக்காது; அவ்வாறு பார்த்துக் கொள்ளவும்.**
- **வாகனம் அல்லது பேட்டரி சேதமுறாமல் தவிர்க்கவும் உங்களுக்கு அடி படாமல் 'எமர்ஜென்ஸி சர்வீஸஸ்' பிரிவின் கீழ் இக்கையேட்டில் ஜம்ப் ஸ்டார்ட்டிங் பற்றி தரப்பட்டுள்ள குறிப்புகளைப் பின்பற்றவும்.**




54GM701

பராமரிப்புச் செலவற்ற பேட்டரிக்கு (மூடி இல்லாதது) நீர் தேவையே இல்லை. வாட்டர் ஃபில்டர் மூடியுள்ள வழக்கமான பேட்டரியில் கலவையின் மட்டமானது மேற்புற அளவு (1) மற்றும் கீழ்ப்புற அளவு (2) இரண்டுக்கும் நடுவில்தான் எப்போதும் வைக்கப்பட வேண்டும். அவ்வப்போது பேட்டரி, பேட்டரியின் மின் முனைகள், ஹோல்ட்-டவுன் பிராக்கெட் ஆகியவற்றில் சேதம் அல்லது அரிமானம் ஏற்பட்டுள்ளாதா என்று சோதிக்கவும். அம்மோனியா கலந்த நீரை அல்லது பேக்கிங் சோட கலந்த நீரை பிரஷின் மூலம் தடவி அரிமானத்தை அகற்றவும். அரிமானத்தை அகற்றியவுடன், சுத்தமான நீரில் கைகளைக் கழுவவும்.

ஒரு மாதம் வரை அல்லது அதற்கு மேல் வாகனத்தை ஓட்டப்போவதில்லை என்றால் கேபிளை எதிர்மறை மின்முனையிலிருந்து துண்டித்தால் சார்ஜ் வீணாவதைத் தடுக்கலாம்.

**⚠ எச்சரிக்கை**

**பேட்டரி லெவல், கீழ் மட்ட வரிசை (2)க்கும் கீழ் இருக்கும்போது பேட்டரியின் ஆயுள் குறையும் அபாயம் உள்ளது. பேட்டரியிலிருந்து வெப்பம், ஹைட்ரஜன் வாயு ஆகியவை வெளியே வரவும் வாய்ப்புள்ளது. பேட்டரி லெவல் கீழ் மட்ட வரிசை (2)க்கும் கீழ் இருக்கும்போது பேட்டரியைப் பயன்படுத்தாதீர்கள்.**

***அறிவிப்பு***

**மேல் மட்ட வரிசை (1)க்கும் மேல் பேட்டரி திரவம் ஊற்றப்பட்டால், வாகனம் ஓட்டும்போது ஏற்படும் குலுங்கலால் பேட்டரி சார்ஜின் நிலையைப் பொறுத்து பேட்டரி திரவம் கசியலாம் அல்லது தெறிக்கலாம். இது பேட்டரிக்குப் பக்கத்தில் உள்ள பொருள்களுக்குச் சேதம் ஏற்படுத்தலாம். பேட்டரி திரவம் கசிந்தால், உடனே தண்ணீரால் கழுவி அதை அகற்றுங்கள். மேல் மட்டம் (1)க்கு மேல் பேட்டரியில் திரவம் ஊற்றாதீர்கள்.**

*குறிப்பு:*
*பேட்டரி பயன்படும்போது பேட்டரி திரவம் நுகரப்படும். மேல் மட்டம் (1)க்கும் கீழ் மட்டம் (2)க்கும் நடுவில் உள்ள புள்ளிக்குக் கீழ் திரவ மட்டம் குறைந்தால் அது மேல் மட்டம் (1)ஐ எட்டும்வரை டிஸ்டில்டு தண்ணீரை ஊற்றவும்.*

## ஃபியூஸ்கள்


வாகனத்தில் கீழே குறிப்பிட்டுள்ளபடி மூன்று வகை ஃபியூஸ்கள் உள்ளன:

**ஃப்யூஸபிள் லிங்க் வயர் & மெயின் ஃபியூஸ்**
மெயின் ஃபியூஸானது மின்சாரத்தை நேரடியாக பேட்டரியிலிருந்து எடுத்துக் கொள்கிறது.

**பிரைமரி ஃபியூஸ்க்ள்**
மெயின் ஃபியூஸ், தனித்தனி ஃபியூஸ்கள் இரண்டுக்கும் இடையிலுள்ள பிரைமரி பியூஸ்கள் மின்சார லோடு குரூப்புகளின் பயன்பாட்டுக்கானவை.

**தனித்தனியான ஃபியூஸ்கள்**
இவ்வகை ஃப்யூஸ்கள் தனித்தனியான மின்சுற்றுகளுக்குப் பொருத்தமானவை


ஃபியூஸை அகற்ற, ரிலே பெட்டியிலுள்ள ஃபியூஸ் ஃபில்லரை (1) பயன்படுத்தவும்.





**உதாரணம்**

77PM07012

### என்ஜின் கம்பார்ட்மெண்டிலுள்ள ஃப்யூஸ்கள்




77PH076





77PH077

| மெயின் ஃபியூஸ் / பிரைமரி ஃபியூஸ் / ரிலே | | |
|---|---|---|
| **வ.எண்.** | **மதிப்பீடு (ரேட்டிங்)** | **ஃபியூஸ் / ரெலே** |
| (1) | – | ஸ்டார்ட்டிங் மோட்டார் ரிலே (டீசல்) |
| | | சி.என்.ஜி. வால்வு ரிலே (பை-பியூயல்) |
| (2) | – | ரேடியேட்டர் ஃபேன் ரிலே |
| (3) | – | க்ளோ ப்ளக் 2 ரிலே (டீசல்) |
| | | பியூயல் பம்ப் ரிலே (பை-பியூயல்) |
| (4) | – | பியூயல் பம்ப் ரிலே (டீசல்) |
| | | ஸ்டார்ட்டிங் மோட்டார் ரிலே (பை-பியூயல்) |
| (5) | 20A | பியூயல் பம்ப் (டீசல்) |
| | 7.5A | சி.என்.ஜி. வால்வு (பை-பியூயல்) |
| (6) | 30A | பியூயல் இன்ஜெக்டர் (டீசல்) |
| | 15A | பியூயல் இன்ஜெக்டர் (பை-பியூயல்) |
| (7) | 30A | ஸ்டார்ட்டிங் மோட்டார் (டீசல்) |
| (8) | 15A | ஹாரன்/ஹஸார்ட் வார்னிங் லைட்டு |
| (9) | 70A | ஆல்டர்னேட்டர் |
| (10) | 20A | க்ளோ ப்ளக் (டீசல்) |
| (11) | 20A | க்ளோ ப்ளக் 2 (டீசல்) |
| (12) | 40A | பேட்டரி |
| (13) | 40A | இக்னிஷன் ஸ்விட்ச் |
| (14) | 30A | ரேடியேட்டர் ஃபேன் |
| (15) | – | க்ளோ ப்ளக் ரிலே (டீசல்) |
| | | பியூயல் இன்ஜெக்டர் ரிலே (பை-பியூயல்) |
| (16) | – | காலியாக (டீசல்) |
| (17) | – | காலியாக (டீசல்) |
| (18) | – | பியூயல் இன்ஜெக்டர் மெயின் ரிலே (டீசல்) |
| (19) | 15A | பியூயல் இன்ஜெக்டர் 2 (டீசல்) |
| (20) | 20A | இன்ஜெக்டர் டிரைவர் (டீசல்) |
| (21) | 7.5A | சி.என்.ஜி. |

என்ஜின் கம்பார்ட்மெண்டில் மெயின் ஃபியூஸ், பிரைமரி ஃப்யூஸ்கள் மற்றும் சில தனியான ஃபியூஸ்க்ள் அமைக்கப் பட்டுள்ளன. மெயின் ஃபியூஸ் வெடித்தால், எந்த மின்சாதனமும் வேலை செய்யாது. பிரைமரி ஃப்யூஸ் வெடித்தால், அந்த லோடு குரூப்பில் உள்ள எந்த ஒரு மின்சாதனமும் வேலை செய்யாது. மெயின் ஃபியூஸ், பிரைமரி ஃபியூஸ் (அ) தனியான ஃபியூஸை மாற்றும்போது, மாருதி சுசூகி நிறுவனத்தின் நம்பகத் தன்மை உடைய பொருட்களை மட்டுமே பயன்படுத்தவும். ஃபியூஸை அகற்ற, ரிலே பெட்டியிலுள்ள ஃபியூஸ் ஃபில்லரை (1) பயன்படுத்தவும். ஒவ்வொரு ஃபியூஸின் ஆம்பியரேஜும் ஃபியூஸ் பெட்டியின் கவரில் காட்டப் பட்டுள்ளது.

**உதாரணம்**




60G111


**⚠ எச்சரிக்கை**

**மெயின் ஃப்யூஸ் அல்லது பிரைமரி ஃபியூஸ் வெடித்தால், வாகனத்தை அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப் மூலம் சோதிக்கத் தவற வேண்டாம். எப்போதும் மாருதி தயாரிக்கும் நம்பகமான உதிரி பாகங்களையே பயன்படுத்தவும். தற்காலிகமான பழுதுக்கும் வயர்கள் உள்ளிட்ட மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்தாதிர்கள்; இல்லையேல், விரிவான மின்னணு அமைப்புச் சேதம் மற்றும் தீ ஆகியன ஏற்படலாம்.**


*குறிப்பு:*
*ஃபியூஸ் பெட்டியில் எப்போதும் அதிக கூடுதல் ஃபியூஸ்களும், ஃபியூஸ் புல்லரும் இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.*

## டேஷ்-போர்டின் கீழே உள்ள ஃபியூஸ்கள்

உதாரணம்



77PH048





77PH049

| முக்கிய ஃபியூஸ் / பிரைமரி ஃபியூஸ் | | |
|---|---|---|
| (1) | 10A | ஹெட்லைட் (வலது) |
| (2) | 10A | ஹெட்லைட் (இடது) |
| (3) | 10A | டெயில் லைட் |
| (4) | 10A | ஸ்டாப் லைட் |
| (5) | 15A | ரேடியோ/டோம் லைட் |
| (6) | 10A | தொடங்குவதற்கான சிக்னல் (தொடங்குவதற்கான அறிகுறி) |
| (7) | 10A | மீட்டர் |
| (8) | 10A | இக்னிஷன் (டீசல்) |
| | 15A | இக்னிஷன் (பெட்ரோல் மற்றும் பை-பியூயல் ) |
| (9) | 10A | பேக்-அப் லைட் |
| (10) | 15A | முன்புறம் வைப்பர் |
| (11) | 15A | உபகரணம் |

ஃபியூஸ் பெட்டியானது டாஷ்-போர்டுக்குக் கீழே அமைந்துள்ளது.

உதாரணம்




65D046

**⚠ எச்சரிக்கை**

**வெடித்த ஃப்யூசுக்குப் பதிலாக சரியான ஆம்பியர் உள்ள வேறு ஃப்யூசைப் பயன்படுத்தவும். வெடித்த ஃபியூசுக்குப் பதிலாக வயர் அல்லது அலுமினியம் ஃபாயிலை மாற்றாக எப்போதும் பயன்படுத்தாதீர்கள். ஃபியூஸை மாற்றிய பின் புதிய ஃபியூஸ் சில நாட்களில் பழுதடைந்தால், பெரிய அளவில் மின் பிரச்சனை உள்ளதென்று அர்த்தம். உடனடியாக வாகனத்தை ஆத்தரைஸ்டு மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க் ஷாப் மூலம் சோதனை செய்து விடவும்.**

## பல்பை மாற்றுதல்

**⚠ நிதானம்**

- ஆஃப் செய்யப்பட்ட பிறகு பல்புகளில் உள்ள சூடு உங்களது கைகளையும் சுட்டு விடக்கூடும். ஹேலொஜென் ஹெட்லைட் பல்புகளைப் பொறுத்தவரை இது முற்றிலும் நிஜம். பல்புகள் சில்லென்று ஆனவுடன் அவற்றிற்குப் பதிலாகப் புதியனவற்றை வாங்கிப் பொருத்தவும்.
- ஹெட்லைட் பல்புகளில் அழுத்தமுள்ள ஹேலொஜென் வாயுக்கள் உள்ளன. அவற்றில் ஏதாவ்து பட்டாலோ அல்லது அவை கீழே விழுந்தாலோ உடனே வெடித்து காயத்தை ஏற்படுத்தும். இவற்றைக் கவனமாகக் கையாளவும்.

*அறிவிப்பு*


ஹாலஜன் லைட்டுகள் ஆன் செய்த நிலையில் இருக்கும்போது, அவற்றைத் தொட்டால், உங்கள் தோலில் உள்ள எண்ணெயால் பல்ப் அதிக வெப்பமடைந்து வெடியக்கூடும். ஆகவே புதிய பல்பை சுத்தமான துணியைக் கொண்டு பிடிக்கவும்.

*அறிவிப்பு*

பல்பை அடிக்கடி சோதிப்பதிலிருந்து மின்னிணைப்புக் கட்டமைப்பைச் சோதிக்க வேண்டிய தேவை பற்றித் தெரிய வருகிறது. அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப்பில்தான் இப்பணியைச் செய்து முடிக்க வேண்டும்.


*குறிப்பு:*
*மழையின் போது அல்லது வாகனத்தைக் கழுவிய பிறகு, வெளிப்புற விளக்குகளின் (ஹெட்லைட், பின்புற கலப்பு லைட் முதலியன) லென்ஸில் மூடுபனி உருவாகலாம். இது விளக்கு உள்ளே மற்றும் வெளியே வெப்பநிலை வேறுபாடு காரணமாக நடக்கும் இயற்கை நிகழ்வு ஆகும். லென்ஸில் தற்காலிக மூடுபனி ஒரு தவறான செய்கை அல்ல, இதனால் வாகனம் ஓட்டும்போது எந்த அசௌகரியமும் ஏற்படாது.*
*சுற்றுச்சூழல் நிலைமை சூரிய ஒளிக்கு மாறும்போது அல்லது ஹெட்லைட்டை ஆன் செய்யும் போது மூடுபனி மறையும். விளக்கு உள்ளே தண்ணீர் கசிவு இருந்தால், உங்கள் அங்கீகரிக்கப்பட்ட மாருதி சுசூகி ஒர்க் ஷாப்பைத் தொடர்பு கொள்ளவும்.*

### ஹெட்லைட்டுகள்




77PH050

1) ஸ்குரூக்களை (1) அகற்றி, காற்று உட்கொள்ளும் பெட்டியையும் அகற்றவும் (2).



77PH051

2) கப்ளரை இணைப்பிலிருந்து நீக்கவும் (3). சீலிங் ரப்பரை அகற்றவும் (4).




77PH052

3) ரீடெய்னிங் ஸ்பிரிங்கை (5) முன்புறம் தள்ளி அதை ஹூக்கிலிருந்து எடுக்கவும். பின்னர் பல்பை (6) அகற்றவும். அகற்றியபின் செய்முறையைத் தலைகீழ் முறையில் செய்து புதிதாக ஒரு பல்பைப் பொருத்தவும்.

### முன்புற டர்ன் சிக்னல் லைட்
### முன்புற பொஸிஷன் லைட்


விஷேஷமான செய்முறைகள் தேவைப் படுவதால் வாகனத்தை அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப்புக்கு எடுத்துச் சென்று பல்பை மாற்றவும்.

### பின்புற காம்பினேஷன் லைட்





77PH055

1) ஸ்குரூக்களை (1) அகற்றி, பின் கவரை அகற்றவும் (2).




77PH056





76MH0A123

(6) அகற்றுதல்
(7) நிறுவுதல்


2) டெயில்/பிரேக் லைட் (4) அல்லது ரிவர்சிங் லைட் (5), பல்ப் ஹோல்டர், மற்றும் டர்ன் சிக்னல் லைட்டின் (3) பல்பை அகற்ற, பல்பை உட்புறம் தள்ளி அதை எதிர்மறையான திசைப்பக்கம் திருப்பவும். புதிய பல்பை நிறுவுவதற்கு அதை உட்புறம் தள்ளி அதை கடிகாரத் திசைப்பக்கம் திருப்பவும்.

### லைசென்ஸ் ப்ளேட் லைட்




77PH066

1) ஸ்குரூக்களை (1) அகற்றி, பின் கவரை அகற்றவும் (2).





77PH063

(4) அகற்றுதல்
(5) நிறுவுதல்

2) லைசென்ஸ் ப்ளேட் லைட்டின் (3) பல்பை அகற்றி மீண்டும் நிறுவ, பல்பைத் தள்ளி அல்லது அழுத்தி விட்டால் போதுமானது.


### உட்புற விளக்குகள்

படத்தில் காட்டிய துணியால் போர்த்தப் பட்ட ப்ளாட் ஸ்குரூடிரைவரைப் பயன்படுத்தி லென்ஸ்களை அகற்றவும். நிறுவுவதற்கு, அதை மீண்டும் உள்ளே தள்ளவும்.




77PH057

## வைப்பர் பிளேடுகள்




77PM07028


வைப்பர் பிளேடுகள் பலவீனமாக அல்லது சேதமுடன் இருந்தால் (அ) துடைக்கும் போது சத்தம் போட்டால் அதற்குப் பதிலாக வேறு பிளேடுகள் வாங்கவும்.

வைப்பர் பிளேடுகளைப் பொருத்த, பின்வரும் செய்முறையைப் பின்பற்றவும்.

| *அறிவிப்பு* |
|---|
| **கண்ணாடில் கீறல் விழுவதையோ அது உடைவதையோ தவிர்க்க, வைப்பர் பிளேடை மாற்றும்போது வைப்பரின் கை கண்ணாடில் மோதாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.** |

*குறிப்பு:*
*வாகனத்தின் தன்மையை ஒட்டி, இங்கு விரிவாகக் கூறப்பட்டுள்ள வைப்பர் பிளேடுகளை விட இருக்கும் வைப்பர் பிளேடுகள் மிகவும் மாறுபட்டு இருக்கலாம். அவ்வாறு இருந்தால் உங்களது அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் வொர்க்ஷாப்புக்கு சென்று முறையாக மாற்றுவதைச் செய்யவும்.*


**விண்ட்ஷீல்ட் வைப்பர்களுக்கு:**




70G119

1) வைப்பர் கம்பியை விண்ட்ஷீல்டிலிருந்து சற்றுத் தொலைவில் வைக்கவும்.


*குறிப்பு:*
*முன் வைப்பர் கைகள் இரண்டையும் உயர்த்தும்போது,*
*முதலில் டிரைவரின் பக்க துடைப்பான் கையை மேலே இழுக்கவும்.*
*வைப்பர் கைகளைத் திருப்பும்போது,*
*குறைக்கவும்*
*பயணிகளின் பக்க துடைப்பான் கை முதலில்.*
*இல்லையெனில்,*
*வைப்பர் கைகள் தலையிடக்கூடும்*
*ஒருவருக்கொருவர்.*




54G130


2) முதல் பூட்டை (1) வைப்பர் கம்பியை நோக்கி (2) அழுத்தி, படத்தில் உள்ளபடி வைப்பர் கம்பியிலிருந்து வைப்பர் ஃபிரேமை அகற்றவும்.
3) வைப்பர் பிளேடின் பூட்டு முனையைத் திறந்து படத்தில் உள்ளபடி பிளேடைச் சரியாக வைக்கவும்.

அகற்றுதல்





60A260

நிறுவுதல்




54G132


(1) பூட்டப்பட்ட முனை





68PH00754

(3) ரீடெயினர்

4) புதிய பிளேடில் உலோகத்தாலான 2 மெட்டல் ரேட்டியினர்கள் இல்லையென்றால், அவற்றைப் பழைய பிளேடிலிருந்து புதிய பிளேடுக்கு மாற்றவும்.



60MH071




60MH072

(அ) மேலே
(ஆ) கீழே

*குறிப்பு:*
*உலோக ரீடெயினர்களை (3) நிறுவும் சமயத்தில் மெடல் ரீடெயினர்களின் திசை மேற்சொன்ன படங்களில் காட்டப்பட்டுள்ளபடி இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.*

5) புதிய பிளேடை அதை அகற்றும்போது செய்வதைப் போன்ற, தலைகீழ் வரிசையில் செய்முறையால் பூட்டப்பட்டு வைப்பர் கம்பியின் பக்கம் இருப்பது போல் நிறுவ வேண்டும்.
பிளெடை அனைத்து ஹூக்குகளும் முறையாகப் பிடித்துக் கொண்டுள்ளதை உறுதி செய்யவும். பிளேடின் முனையை அதன் இடத்தில் வைத்துப் பூட்டவும்.
6) வைப்பர் ஃபிரேமைக் கம்பியுடன் மீண்டும் நிறுவி, லாக் லீவர் கம்பியுடன் பாதுகாப்பாகக் கட்டப்பட்டுள்லதை உறுதி செய்யவும்.

## விண்ட்ஷீல்ட் வாஷர் ஃப்லூயிட் (திரவம்) (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)



77PM07027

டேங்க்யில் வாஷர் ஃப்லூயிட் (திரவம்) இருக்கிறதா என்பதைக் கண்ணால் பார்த்து அறியுங்கள். தேவைப்பட்டால் திரவத்தை நிரப்புங்கள். நல்ல தரமான வின்ஷீல்ட் வாஷர் ஃப்லூயிடைப் பயன்படுத்தவும். தேவையான அளவு தண்ணீரைக் கலந்துகொள்ளவும்.

**⚠ எச்சரிக்கை**

வின்ஷீல்ட் வாஷர் ரிசர்வாயரில் ரேடியேட்டர் ஆன்ட்டிஃப்ரீஸ் பயன்படுத்தாதீர்கள். அதை வின்ஷீல்டில் தெளிக்கும்போது அது இயந்திரத்தைச் சேதப்படுத்தும் மேலும் இயந்திரத்தின் பெயின்டையும் அது பாதிக்கும்.


*அறிவிப்பு*

வாஷர் டேங்க்யில் ஃப்லூயிட் (திரவம்) இல்லாமல் வாஷர் மோட்டாரை இயக்கினால் பாதிப்பு ஏற்படலாம்.

# அவசரநிலைக் கால சேவை

டயர் மாற்றத் தேவையான உபகரணங்கள்............................ 8-1
ஜேக்கிங் பற்றிய குறிப்புக்கள்................................................ 8-2
சக்கரங்களை மாற்றுதல் ........................................................ 8-5
ஜம்ப் ஸ்டார்ட்டிங் பற்றிய குறிப்புக்கள் ................................. 8-5
கட்டி இழுத்துச் செல்லுதல் .................................................... 8-7
ஸ்டார்ட்டர் வேலை செய்யவில்லை என்றால் ....................... 8-7
என்ஜினுக்குள் நீர் புகுந்து விட்டால் ...................................... 8-7
என்ஜின் அதிகம் சூடாகி விட்டது என்றால் ........................... 8-8
மோதுவதால் அடிப்பகுதியில் ஏற்படும் பிரசினை .................. 8-8
எச்சரிக்கை முக்கோணம் ...................................................... 8-9
தீயணைப்புக்கருவி (கருவி பொருத்தப்பட்டிருந்தால்) ............ 8-9

## டயர் மாற்றத் தேவையான உபகரணங்கள்




77PH202

(1) ஜேக்
(2) வீல் பிரேஸ்
(3) ஜேக் ஹேண்டில்
(4) ஸ்பானர்

டயர் மாற்றத் தேவையான அனைத்து உபகரணங்களும் ஓட்டுநரின் சீட்டின் பின்புறம் வைக்கப்பட்டுள்ளன.

ஜேக்கை அகற்ற, அதன் முனையைக் கடிகாரத் திசைக்கு எதிர்ப்புறம் திருப்பி, ஜேக்கை அதனுள்ளிருந்து இழுக்கவும். ஜேக்கை நிற்க வைக்க, அதை ஸ்டோரேஜ் பிராக்கெட்டில் வைத்து முனையை கடிகார திசைப்பக்கம் ஜேக் பாதுகாப்பாக நிற்கும் வரை திருப்பவும்.

ஸ்பேர் டயர் படுக்கையின் கீழுள்ளது. ஸ்பேர் டயரை அகற்றுவதற்கு:



77PH099

1) உபரி டயர் ஹோல்டர் ஹூக்கின் நட்டுகளை (1) லூஸாக்கவும்.
2) உபரி டயர் ஹோல்டரைப் பூட்டை விட்டு எடுத்து, பாதுகாப்பாகக் கீழிறக்கவும்.
3) உபரி டயரின் நடுவிலுள்ள ஸ்குரூவை அகற்றி, டயரையும் தனியே எடுக்கவும்.

**⚠ எச்சரிக்கை**


**டயர் மாற்றும் உபகரனங்களைப் பயன்படுத்தியப் பின்னர் எடுத்த இடத்தில் அவற்றைப் பத்திரமாக வைக்கவும்; விபத்து நேரும் பட்சத்தில் இவைகளால் யாருக்காவது காயம் ஏற்படலாம்.**

**⚠ நிதானம்**

**ஜேக்கைச் சக்கரத்தை மாற்றுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். ஜேக்கைப் பயன்படுத்த ஆரம்பிப்பதற்கு முன் இப்பிரிவில் தரப்பட்டுள்ள ஜேக்கிங் குறிப்புக்களைப் படிப்பது முக்கியம்.**

## ஜேக்கிங் குறிப்புக்கள்

**உதாரணம்**




77PH054

1) வாகனத்தைச் சமமான, உறுதியான தரை மீது பார்க் செய்யவும்.
2) பார்க்கிங் பிரேக்கை உறுதியாக செட் செய்து அதை “R” பொசிஷனுக்கு (பின் நொக்கிச் செல்வதற்கு) திருப்பி விடவும்.

**⚠ எச்சரிக்கை**

- **ஜேக் போட்டு வாகனத்தைத் தூக்கும்போது “R” பொசிஷனுக்குத் (பின்நொக்கிச் செல்ல) திருப்பி விடவும் .**
- **டிரான்ஸ்மிஷன் “N” என்ற (நியூட்ரல்) பொஸிஷனில் இருக்கும்போது வாகனத்தை ஜேக்கால் தூக்கக் கூடாது. அவ்வாறு செய்தால், நிலையற்ற ஜேக் பெரும் விபத்தை ஏற்படுத்தி விடும்.**


3) போக்குவரத்துக்கு நடுவே வாகனம் மாட்டிக் கொண்டால் ஹஸார்ட் வார்னிங் ஃப்ளாஷரை ‘ஆன்’ செய்யவும்.
4) தூக்கப்படும் வீலின் நேரெதிராக உள்ள வீலின் முன்/பின்புறத்தைக் கோணமாக பிளாக் செய்ய வேண்டும்.
5) ஒருவேளை ஜேக் தவறி விழுந்தால், படத்தில் சொல்லியபடி தூக்கப்படும் டயருக்கு அருகில் உபரி டயரை வைக்கவும்.




**உதாரணம்**


77PH802

**உதாரணம்**




54G253

முன்புற ஜேக்கிங் பாயிண்ட்





77PH084

பின்புற ஜேக்கிங் பாயிண்ட்




77PH106




77PS052

6) ஜேக்கைச் செங்குத்தாக வைத்து, ஜேக் ஹேண்டிலைக் கடிகார திசைப்பக்கம் சுழற்றுவதன் மூலம் ஜேக்கிங் பார் வாகனத்தின் அடிப்பக்கத்தில் பொருத்தப் படுவதை உறுதி செய்யலாம். விளக்கப் படத்தைப் பார்க்கவும்

7) வாகனம் தரையை விட்டு எழும்பும் வரை ஜேக்கைப் படிப்படியாக மெதுவாகத் தூக்கவும். தேவைப்படும் உயரத்துக்கு மேல் உங்கள் வாகனத்தைத் தூக்க வேண்டாம்.


**⚠ எச்சரிக்கை**

- **சமமான, கடினமான பரப்பில் டயர்களை மாற்றுவதற்கு மட்டும் ஜேக்கைப் பயன்படுத்தவும்.**
- **சரிவான பரப்பில் வாகனத்தை ஜேக்கைப் பயன்படுத்தித் தூக்காதீர்கள்.**
- **ஜேக்கை ஜேக்கிங் பாயிண்ட்டுடன் (வரைபடத்தில் உள்ளது) குறிப்பிடப் பட்டுள்ள இடத்தைத் தவிர (டயருக்கு அருகில்) வேறு இடத்தில் உயர்த்தாதீர்கள்.**
- **ஜேக்கின் துணையால் வாகனம் தூக்கப் பட்டுள்ளபோது அடியில் செல்லாதீர்கள்.**
- **ஜேக்கின் துணையால் வாகனம் தூக்கப் பட்டுள்ளபோது என்ஜினை இயக்காதீர்கள்; வாகனத்திற்குள் அச்சமயம் யாருமே இருக்கவும் கூடாது.**

### கேரேஜ் ஜேக்கைப் பயன்படுத்தி வாகனத்தைத் தூக்குதல்


- கேரேஜ் ஜேக்கைக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு பாயிண்ட்டில் வைக்கவும்.
- தூக்கப்பட்ட வாகனத்தை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாயிண்டுகளில் ஜேக் ஸ்டாண்டுகளால் (கடையில் கிடைக்கும்) எப்போதும் முட்டுக் கொடுக்கவும்.

**கேரேஜ் ஜேக்குக்கான முன்புற ஜேக்கிங் பாயிண்ட் (1)**





77PH060

**கேரேஜ் ஜேக்குக்கான பின்புற ஜேக்கிங் பாயிண்ட் (2)**




77PH101

**ஜேக் ஸ்டாண்டுக்கான பாயிண்ட் (3) அல்லது இரு குழாய் ஸ்டாண்டுகளால் தூக்கப்படுதல்**




77PS055 (2)

*அறிவிப்பு*


- **கேரேஜ் ஜேக்கை புகைபோக்கி குழாயுடன் ஒருபோதும் இணைக்காதீர்கள்.**
- **ஜேக் ஸ்டேண்டை அல்லது இரு குழாய் ஸ்டேண்டைப் பயன்படுத்தி பின்புறம் இருக்கும் பாயிண்ட்டில் வைத்துத் தூக்கும்போது பார்க்கிங் கேபிள் அல்லது பியூயல் டேங்கின் முனை உள்ளிட்ட சுற்றியுள்ள பாகங்களைத் தொடாமல் இருக்கவும்.**

*குறிப்பு:*
*மேலும் விவரங்களுக்கு அதிகாரபூர்வ மாருதி சுசுகிசுசுகி கமர்ஷியல் டீலரைத் தொடர்பு கொள்ளவும்.*

## டயர்களை மாற்றுவது

டயரை மாற்ற, பின்வரும் செய்முறையைப் பின்பற்றவும்:

1) பயணிகள் வெளியே இறங்கி, சரக்குகள் வாகனத்திலிருந்து இறக்கப்பட வேண்டும்.
2) வாகனத்திலிருந்து ஜேக், கருவிகள் மற்றும் உபரி டயரை எடுக்கவும்.
3) டயரின் நட்/போல்ட்டுகளை எடுக்காமல் லூஸாக்கி வைக்கவும்.
4) ஜேக்கால் வாகனத்தைத் தூக்கவும்.
5) டயரின் நட்/போல்ட்டுகளை அகற்றவும்.
6) புதிய டயரைப் பொருத்தும் முன்பு, சக்கரத்திற்குள் மண்/கல் உள்ளிட்ட தடைகளைச் சுத்தம் செய்து, ஹப்பையும் தூய்மையாகத் துடைக்க வேண்டும். வாகனம் ஓடியதால் சூடாக இருக்கும் ஹப்பை கவனமாகத் துடைக்க வேண்டும்.
7) புதிய டயரைப் பொருத்தி, கூர்மையான நட்/போல்ட்டுகளின் முனைகள் டயரைக் பார்க்கும் வண்ணம் பொறுத்த வேண்டும். ஒவ்வொரு நட்டையும் தனித்தனியாக இறுக்கி சக்கரம் ஹப்பில் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்து கொள்ளவும்.




54G116

**டயர்களின் நட்டுகளை இறுக்கமாக்குதல் 100 நி.மீ. (10.2 கி.கி.விசை, 73.8 பவுன்டு-அடி)**

8) ஜேக்கை இறக்கி நட்டுகளைப் படத்தில் காட்டியுள்ளது போல் முழுவதும் குறுக்குவாட்டில் இறுக்கமாக்கவும்.

**⚠ எச்சரிக்கை**

**டயர்களை மாற்றியவுடன் தரமுள்ள நட்டுகளைப் பயன்படுத்தி அவற்றை இறுக்கமாக்கவும். சரியில்லாத அல்லது லூசாகப் பொருத்தப்பட்ட நட்டுகள் லூசாகிக் கீழே விழுந்தால் விபத்து ஏற்படும். நட்டுகள் இறுக்கமானதைச் சரிபார்க்கும் வசதி உங்களிடம் இல்லையென்றால், அதிகாரப்பூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் சென்று சரிபார்க்கவும்.**

## ஜம்ப் ஸ்டார்ட்டிங் பற்றிய குறிப்புக்கள்

**⚠ எச்சரிக்கை**


- **பேட்டரி வேலை செய்யாதது போல் தெரிந்தால், வாகனத்தை எப்போதும் ஜம்ப் ஸ்டார்ட் செய்யாதீர்கள். அவ்வாறு ஜம்ப் ஸ்டார்ட்டிங் செய்தால் இந்நிலையில் இருக்கும் பேட்டரிகள் வெடிக்கலாம் அல்லது பழுதடையலாம்.**
- **ஜம்ப் லீட் இணைப்புக்களை செய்கையில் ஜம்புகளும் உங்களது கைகளும் ஃபேன், புல்லி, பெல்ட் ஆகியவற்றிலிருந்து தூரமாக இருப்பதை உறுதி செய்யவும்.**
- **தீப்பற்றக்கூடிய ஹைட்ரஜன் வாயுவை பேட்டரிகள் உற்பத்தி செய்கின்றன. தீப்பிழம்பு, தீப்பொறி ஆகியவற்றை பேட்டரியிலிருந்து தூரமாக வைக்கவும்; இல்லையேல் பேட்டரி வெடித்து விடும். பேட்டரிக்கு அருகாமையில் வேலை செய்யும்போது புகை பிடிக்காதீர்கள்.**
- **நீங்கள் ஜம்ப் ஸ்டார்ட் செய்யும் பூஸ்டர் பேட்டரி வேறு வாகனத்தில் இருந்தால், இரு வாகனங்களும் தொடாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளவும்.**
- **எக்காரணமும் இன்றி பேட்டரி அடிக்கடி வலுவிழந்தால் அதை அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் சென்று சோதித்துக் கொள்ளவும்.**
- **உங்களுக்கு அடிபடுவதை அல்லது வாகனம்/பேட்டரி சேதமாவதைத் தவிர்க்க ஜம்ப் ஸ்டார்டிங் குறிப்புக்களைப் படித்து கவனமாகப் பின்பற்றவும். உங்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் தகுதி பெற்ற சாலை சர்வீஸைத் தொடர்பு கொள்ளவும்.**

*அறிவிப்பு*

**தள்ளி விட்டோ, கட்டி இழுக்கப்பட்டோ உங்கள் வாகனம் ஸ்டார்ட் செய்யக்கூடாது. இவ்வாறு ஸ்டார்ட் செய்தால் கேடலிடிக் கன்வெர்ட்டர் நிரந்தர சேதத்துக்குள்ளாகும். பலவீனமான பேட்டரி உள்ள வாகனங்களை ஜம்ப் லீடுகளைப் பயன்படுத்தி ஸ்டார்ட் செய்யவும்.**

**உங்களது வாகனத்தை ஜம்ப் ஸ்டார்ட்டிங் செய்யும்போது பின்வருவனவற்றைப் பின்பற்றவும்:**

1) வாகனத்தை ஜம்ப் ஸ்டார்ட் செய்வதற்கு 12-வோல்ட் பேட்டரியை மட்டுமே பயன்படுத்தவேண்டும். ஜம்ப் லீடுகள் இரண்டு பேட்டரிகளையும் அடையும் விதத்தில் நல்ல 12-வோல்ட் பேட்டரியை வாகனத்திற்கு மிக அருகில் வைக்கவேண்டும். வேறொரு வாகனத்தின் பேட்டரியைப் பயன்படுத்தும்போது, இரு வாகனங்களும் ஒவ்வொன்றும் தொடாமல் பார்த்துக் கொள்ளவும். இரு வாகனங்களிலும் பார்க்கிங் பிரேக்குகளை செட் செய்யவும்.
2) பாதுகாப்பு கருதி தேவையானவை தவிர மற்ற அனைத்து உபகரணங்களையும் அணைத்து விடவும் (உதாரணம்: ஹெட்லைட் (அ) ஹஸார்ட் லைட்).



77PS056

3) ஜம்ப் லீட் இணைப்புகளைப் பின்வருமாறு தரவும்:

   1. முதல் ஜம்ப் லீடின் ஒரு முனையை ஃப்ளாட் பேட்டரியின் பாஸிட்டிவ் (+) டெர்மினலுடன் பொருத்துக. (1)
   2. இன்னொரு முனையை பூஸ்டர் பேட்டரியின் (2) பாஸிட்டிவ் (+) டெர்மினலுடன் பொருத்துக.
   3. இரண்டாம் ஜம்ப் லீடின் ஒரு முனையை பூஸ்டர் பேட்டரியின் நெகட்டிவ் (-) டெர்மினலுடன் பொருத்துக (2).
   4. ஃப்ளாட் பாட்டரியுடன் வாகனத்தின் வண்ணம் பூசப்படாத கனமான உலோகப் பகுதிக்கு (அதாவது, வாகனத்தின் டோர் லாட்ச் ஸ்டிரைக்கர் (3)) கடைசித் தொடர்பைக் கொடுக்கவும் (1).

**⚠ எச்சரிக்கை**

**ஜம்ப் லீடை நேரடியாக பேட்டரியின் எதிர்மறை நெகடிவ் (–) மின்னிணைப்புடன் இணைக்கப்பட்டால் அது வெடித்து விடும்.**

4) நீங்கள் பயன்படுத்தும் பூஸ்டர் பேட்டரி வேறொரு வாகனத்துடன் இணைக்கப்பட்டால் பூஸ்டர் பேட்டரி இருக்கும் வாகனத்தின் என்ஜினை இயக்கவும். என்ஜினை மிதமான வேகத்தில் இயக்கவும்.
5) சாதாரண பேட்டரி இருக்கும் வாகன என்ஜினை இயக்கவும்.
6) நீங்கள் எப்படி இணைத்தீர்களோ, அதைத் தலைகீழாகச் செய்து ஜம்ப் லீடுகளை அகற்றவும்.

## கட்டி இழுத்தல்

உங்களது வாகனத்தைக் கட்டி இழுக்கும் நிலை ஏற்பட்டால், தொழில்முறை உதவியைக் கேட்டுப் பெறவும். கட்டி இழுப்பது பற்றிய அனைத்துக் குறிப்புக்களையும் டீலர் உங்களுக்குத் தருவார்.

> *அறிவிப்பு*
>
> **கட்டி இழுக்கப்படும்போது வாகனம் சேதமடைவதைத் தவிர்க்க, முறையான கருவிகளும் இதற்கான செய்முறைகளும் பயன்படுத்தப்பட வேண்டும்.**

### 2-சக்கரம் டிரைவ் (2WD) - மானுவல் டிரான்ஸ்மிஷன்

மானுவல் டிரான்ஸ்மிஷன் வாகனங்கள் பின்வரும் ஏதாவது வழியில் கட்டி இழுத்துச் செல்லப்படலாம்.

1) முன்புறத்தில் இரு சக்கரங்களையும் தூக்கி, இரு பின் சக்கரங்களும் தரையில் இருக்கும் நிலையில் கொண்டு செல்வது. செல்வதற்கு முன், டிரான்ஸ்மிஷன் நியூட்ரலில் இருந்து, பார்க்கிங் பிரேக் விடுவிக்கப்பட்டதை உறுதி செய்யவும்.
2) பின்புறமிருந்து, பின்புற சக்கரங்கள் தூக்கப்பட்டு, முன்புறச் சக்கரங்கள் தரையில் இருந்து, ஸ்டீயரிங்கும் டிரைவ் டிரெயினும் இயங்கும் நிலையில் கொண்டு செல்லப்படுவது. இழுப்பதற்கு முன், ஸ்டீயரிங் வீல் ஃப்ரீயாக இருப்பதையும் (இக்னிஷன் சாவி “ACC” (ஏ.சி.சி.) பொஸிஷனில் இருக்க வேண்டும்) ஸ்டீயரிங் வீல் நகராமல் ஒரு கம்பியால் கட்டப்பட்டிருப்பதையும் உறுதி செய்ய வேண்டும்.

> *அறிவிப்பு*
>
> **கட்டி இழுக்கப்படும்போது ஏற்படும் அதிர்வுகளைத் தாங்க ஸ்டீயரிங் வீல் வலுவானதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. கட்டி இழுத்துச் செல்லப்படும் முன் ஸ்டீயரிங் வீலை ஃப்ரீயாக விடவும்.**

## ஸ்டார்ட் மோட்டார் வேலை செய்யவில்லை என்றால்

1) இக்னிஷன் ஸ்விட்சை ”START” (ஸ்டார்ட்) பொஸிஷனுக்கு திருப்பி, ஹெட்லைட்டை ‘ஆன்’ செய்து பேட்டரி நிலைமையைத் தீர்மானிக்கவும். ஹெட்லைட்டுகல் மிகவும் பலவீனமாக எரிந்தால் அல்லது அணைந்து விட்டல், பேட்டரி போய் விட்டது அல்லது பேட்டரியுடனான மின்னிணைப்பு சரியாக இல்லை என்று அர்த்தம். பேட்டரியை ரீ-சார்ஜ் செய்யவும் அல்லது மின்னிணைப்பைச் சரிபார்க்கவும்
2) ஹெட்லைட்டுகள் மிக வெளிச்சமாக இருந்தால், ஃப்யூஸ்களைச் சோதிக்கவும். ஸ்டார்ட்டர் ஏன் வேலை செய்யவில்லை என்று தெரியவில்லை; அது மின்சாரம் தொடர்பான பிரச்சினையாக இருக்கலாம். வாகனத்தை அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரின் ஆய்வுக்கு விடுங்கள்.

## என்ஜினுக்குள் ஃபியூவல் நிரம்பி விட்டால்

என்ஜினில் ஃபியூவல் நிரம்பிவிட்டால், ஸ்டார்ட் செய்வது மிகவும் கடினமாகிவிடலாம். அப்படி நடந்தால், என்ஜினை கிரான்க் செய்யும்போது ஆக்சிலிரேட்டர் பெடலை தரை வரை முழுதுமாக அழுத்தி, அப்படியே அழுத்தி வைத்திருக்க வேண்டும்.

- 30 நொடிகளுக்கு மேல் ஸ்டார்ட்டர் மோட்டாரை இயக்கி வாகனத்தைச் செலுத்த முயற்சி செய்யக் கூடாது.

## என்ஜின் அதிகம் சூடானால்

மிக வேகமாக வாகனம் ஓட்டும் நிலைகளில் என்ஜின் தற்காலிமகாச் சூடாகலாம். ஹை என்ஜின் கூலண்ட் தட்பவெப்ப நிலை எச்சரிக்கை விளக்கு வாகனம் ஓட்டும்போதே எரிந்தால்:

1) பாதுகாப்பான இடத்துக்கு வாகனத்தைக் கொண்டு சென்று பார்க் செய்யவும்.
2) என்ஜினை இயல்பான 'ஐடில்' வேகத்தில் சில நிமிடங்கள் வரை ஹை என்ஜின் கூல்ண்ட் தட்பவெப்பநிலை எச்சரிக்கை விளக்கு அணையும் வரை ஓட விடவும்.


**⚠ எச்சரிக்கை**

**நீராவி வெளியெறுவதைப் பார்த்தால் (அ) கேட்டால் உடனடியாக வாகனத்தைப் பாதுகாப்பான இடத்தில் நிறுத்தி, என்ஜினை அணைத்து அது சில்லென்று ஆகும் வரை காத்திருக்கவும். நீராவி இருக்கும்போது என்ஜின் கம்பார்ட்மெண்டைத் திறக்காதீர்கள். நீராவி தெரியாவிட்டால் அல்லது கேட்கா விட்டால் என்ஜின் கம்பார்ட்மெண்டைத் திறந்து கூலண்ட் இன்னும் கொதிக்கிறதா என்று பார்க்கவும். கொதித்துக் கொண்டிருந்தால், அது அடங்கும் வரை காத்திருக்கவும்.**

ஹை என்ஜின் கூலண்ட் தட்பவெப்ப நிலை எச்சரிக்கை விளக்கு அணையவில்லை என்றால்:

1) என்ஜினை அணைத்து விட்டு வாட்டர் பம்ப் பெல்ட், புல்லிகள் ஆகியவை சேதமடையாமல் விழாமல் இருக்கின்றனவா எனச் சோதிக்கவும். ஏதாவது அசாதாரணமாகத் தென்பட்டால், அதைச் சரி செய்யவும்.
2) தொட்டியில் கூலண்ட் மட்டத்தைச் சோதிக்கவும். அது 'குறைவான' என்பதை விடக் குறைவாக இருந்தால், ரேடியேட்டர், வாட்டர் பம்ப், ஹீட்டர் ஹோஸ் ஆகியவை கசியாமல் இருக்கின்றனவா என்று சோதிக்கவும். அதிக அளவு ஹீட்டானதற்கு கசிவே காரணம் என நீங்கள் கண்டறிந்தால், இப்பிரசினைகள் சரிசெய்யப்படும் வரை என்ஜினை இயக்காமல் இருக்கவும்.
3) கசிவு ஏதேனும் இருந்தால், தொட்டியுடன் கூலண்டைச் சேர்த்து, தேவைப்பட்டால் அதை ரேடியேட்டருடனும் சேர்க்கவும். 'ஆய்வு மற்றும் பராமரிப்பு' என்ற பிரிவில், 'என்ஜின் கூலண்ட்' என்ற தலைப்பின் கீழுள்ளவற்றைப் படிக்கவும்.

*குறிப்பு:*
*என்ஜின் அதிக சூடாகி உங்களால் என்ன செய்வது என்று தெரியாமல் போனால், மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரை உடனே அணுகவும்.*




65D350d

**⚠ எச்சரிக்கை**


- **நீர் வெப்பநிலை அதிகமாக இருக்கையில் ரேடியேட்டர் மூடியை (டீசல் என்ஜினாக இருந்தால் டிகேஸிங் டேங்கின் மூடி) அகற்றுவது தீங்கு விளைவிக்கலாம்; ஏனெனில், அழுத்தத்தின் காரணமாக ஸ்கேல்டிங் திரவம் மற்றும் நீராவி ஆகியவை ஊதித் தள்ளிவிடப்படலாம். கூலண்ட் வெப்பநிலை குறைந்த பின்பே மூடி அகற்றப்பட வேண்டும்.**
- **கைகள், கருவிகள் மற்றும் துணிகளை என்ஜின் கூலின் ஃபேனிலிருந்து தூரமாக வைத்தால் காயம் படாமல் இருக்கும். முன்னெச்சரிக்கை ஏதுமின்றி இந்த மின்விசிறிகள் தானாகவே இயங்கத் தொடங்கி விடும்.**

## மோதுவதால் அடிப்பகுதியில் ஏற்படும் பிரச்சினை

வாகனத்தின் அடிப்பக்கம் எத்துடனாவது மோதினால் அதிகாரபூர்வ மாருதி சுசூகி கமர்ஷியல் டீலரிடம் வாகனத்தைச் சோதித்துக் கொள்ளவும். ஸ்டீயரிங், சஸ்பென்ஷன், டிரைவ்-லைன் மற்றும் பிரேக் உள்ளிட்டவற்றுக்கு ஆகும் சேதத்தால் உங்களால் பாதுகாப்பாக வாகனம் செலுத்த முடியாமல் போகலாம்.

## எச்சரிக்கை முக்கோணம்


உதாரணம்




MHO-07-001

அவசரநிலைக் காலத்தில் வாகனம் பழுதடைந்து போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருந்தால் வாகனத்தில் இருக்கும் எச்சரிக்கை முக்கோணத்தைப் பின்புறம் அனைவருக்கும் 50 -100 மீட்டர் வரை முக்கோணத்தின் பிரதிபலிக்கும் பக்கம் வரும் போக்குவரத்தைப் பார்க்குமாறு, தெரியும்படி வைக்கவும். வாகனத்திலிருந்து இறங்கும் முன்னர் ஹஸார்ட் வார்னிங் விளக்குகளை 'ஆன்' செய்து, வார்னிங் முக்கோணத்தைத் தெரியும்படி வைக்கவும்.


உதாரணம்




MHO-07-014-1

- வார்னிங் முக்கோணத்தைக் கவனமாக, 1-ஆம் அம்பில் குறிப்பிட்டுள்ளபடி, அதன் கவரிலிருந்து எடுக்கவும்.
- 2 ரிஃப்லெக்டர் குறியீடுகளையும் எடுத்து (அம்பில் குறிப்பிட்டுள்ளபடி) அவற்றை வலதுபுறக் குறியீட்டில் உள்ள க்ளிப்பின் மூலம் ஒன்றோடொன்று இணைக்கவும். கீழிருக்கும் ஸ்டாண்டை கடிகாரத் திசைக்கு எதிர்ப்புறம் திருப்பவும் (3-வது அம்பில் குறிப்பிட்டுள்ளபடி). வாகனத்தின் பின்புறத்துக்கும் ஏதாவது சமதரைக்கும் நடுவில் எச்சரிக்கை முக்கோணத்தை வைக்கவும்.
- இதே செய்முறையைத் தலைகீழாகச் செய்து அதைக் கவரின் உள்ளே வைக்கவும்.


உதாரணம்




MHO-07-014

## தீயணைப்புக்கருவி (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)


உதாரணம்



77PM08009

தீயணைப்புக்கருவி சீட்டுகளின் பின்னால் (ஓட்டுநர் சீட், பயணிகள் சீட்டுக்கு நடுவில்) அமைக்கப்பட்டுள்ளது.

உதாரணம்




77PM08003

1) தீயணைப்புக்கருவி சிலிண்டர்

2) சீல்

3) சேஃப்டி பின்


4) லீவர்

5) குமிழ்

**தீயணைப்புக்கருவியை அகற்றி அதை மீண்டும் பொருத்துதல்**

தீயணைப்புக்கருவியை அகற்றுவதற்காக

**உதாரணம்**





77PM08003

தீயணைப்புக்கருவியின் லீவரை (1) சற்றே மேற்புறம் தூக்கி படத்தில் காட்டியுள்ள திசையில் கருவியை இழுத்தால் அது க்ளாம்ப்பிலிருந்து (2) கழன்று விடும்.

**தீயணைப்புக்கருவியை பொருத்துவதற்கு**

**உதாரணம்**




77PM08005


தீயணைப்புக்கருவியின் (1) பாடியை க்ளாம்ப்புக்குள் (3) செருகி குமிழை (2) கவனத்துடன் க்ளாம்ப் மேல் கீழ்நோக்கி வைக்கவும்.

குறிப்பு :

தீயணைப்புக்கருவியின் குமிழ் க்ளாம்ப்பின் மேல் சரியாக பொருந்தியிருக்கிறதா என்பதை உறுதிசெய்து கொள்ளவும்.

**ஆபரேஷனின் செய்முறை**

**உதாரணம்**





77PM08006

1) தீயணைப்புக்கருவியை (1) நேராகத் தூக்கிப் பிடிக்கவும்.

2) சேஃபிட்பின்னை (3) திருகி அதன் மூலம் சீலை (2) உடைக்கவும்.


**உதாரணம்**




77PM08007

3) சேஃப்டிபின்னை (3) இழுக்கவும்.
4) லீவரை (4) அழுத்தி குமிழிலுள்ள (5) ஜெட்டை ஒரு துரிதமான (வேகமான) இயக்கத்தினால் தீயின் முனைக்கு அருகே கொண்டு செல்லவும்.

உதாரணம்




77PM08006

5) தீப்பிழம்புகள் அணைக்கப்படும்வரை தீயை முனைவரை தள்ளிச் செல்லவும்.

குறிப்பு:
வெளிப்புற ஆதாரத்தினால் வாகனத்தில் உருவாகும் சிறிய அளவு தீயை அணைக்க மட்டுமே தீயணைப்புக்கருவி பயன்படும்.

**செய்யக்கூடியவைகளும் செய்யக்கூடாதவைகளும்**

உதாரணம்




77PM08001

**செய்யக்கூடியவை:**
1) ப்ரஷர் காஜை அவ்வப்போது சோதிக்கவும். அதிகபட்ச சார்ஜிங் அழுத்தம் 15Kgf/cm2ஆக இருக்கவேண்டும் (பசுமை மண்டலம் 2இல்)
2) ப்ரஷர் குறைந்தால், இண்டிகேட்டரின் நீடில் (1) சிவப்பு மண்டலத்துக்கு (3) நகரும். உடனடியாக தீயணைப்புக்கருவியில் தரப்பட்டுள்ள தகவலின்படி கருவியின் உற்பத்தியாளரைத் தொடர்பு கொள்ளவும்.
3) உற்பத்தியாளரின் சர்வீஸ் செண்டரில் மட்டும்தான் தீயணைப்புக்கருவியை சர்வீஸ் செய்ய வேண்டும். க்ருவியில் தரப்பட்டுள்ள தகவலைப் பார்த்து அருகிலுள்ள சர்வீஸ் செண்டரின் முகவரியைத் தெரிந்து கொள்ளவும்.
4) வாகனத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் தீயணைப்புக்கருவி வைக்கப் பட்டுள்ளது என்பதை உறுதிசெய்யவும்.
5) பயன்படுத்திய பின்னர் உடனடியாக தீயணைப்புக்கருவியை ரீஃபில் செய்து வைக்கவும்.

**செய்யக்கூடாதவை:**
1) தீயணைப்புக்கருவியைச் சுத்தம் செய்ய நீரை பயன்படுத்தாதீர்கள் (தூசியை அகற்ற தூய்மையான துணியைப் பயன்படுத்தவும்)
2) ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட (அல்லது) பயன்பாட்டில் இல்லாத தீயணைப்புக்கருவி எதையும் நம்பி இருக்காதீர்கள்.

குறிப்பு:

• ஒவ்வொரு முறை பயன்படுத்திய பின்பும் ரீஃபில்லிங் செய்வது மிகவும் அவசியம்.

• பயன்பாட்டுக்குப் பின்னர் கருவியை ரீஃபில்லிங் செய்தாக வேண்டும்

# தோற்றப்பொலிவு குறித்த பராமரிப்பு

அரிமானத்தைத் தடுத்தல் ........................................................ 9-1
வாகனத்தைச் சுத்தம் செய்தல் ................................................ 9-2

## அரிமானத்தைத் தடுத்தல்

அரிமானம் ஏற்படாமல் தடுக்க வாகனத்தை நன்றாகப் பாத்துக்கொள்வது அவசியம். அரிமானத்தைத் தடுக்க வாகனத்தை எப்படி எல்லாம் பராமரிக்க வேண்டும் என்பதற்கான பயிற்றுரைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன . இந்தப் பயிற்றுரைகளை கவனமாகப் பின்பற்றவும்.

### அரிமானம் பற்றிய முக்கியமான தகவல்கள்

**அரிமானத்தின் பொதுவான காரணங்கள்**

1) வாகனத்தின் கீழ்ப் பகுதி அல்லது உடலமைப்பில் கைக்கு எட்டக் கடினமான பகுதிகளில் சாலை உப்பு, அழுக்கு, ஈரம் அல்லது ரசாயனங்களின் திரட்சி.
2) சிறிய விபத்துகள் அல்லது கற்கள் மற்றும் சரளைக் கற்களால் ஏற்படும் சிராய்ப்புகளால் சாயம்பூசப்பட்ட உலோகப் பகுதிகளுக்கு ஏற்படும் கொத்துதல், கீறல்கள் மற்றும் வேறு வகையான சேதங்கள்.

**அரிமானத்தை அதிகரிக்கும் சுற்றுச் சூழல்**

1) சாலையில் உப்பு, தூசைக் கட்டுபடுத்து ரசாயனங்கள், கடல் காற்று அல்லது தொழிற்சாலை மாசு ஆகியவை உலோகத்தின் அரிமானத்தை அதிகரிக்கக் கூடியவை
2) குறிப்பாக வெப்பநிலை உறைபடும் புள்ளிக்கு அருகில் இருக்கும்போது அதிக ஈரப்பதம் அரிமான வீதத்தை அதிகரிக்கும்.
3) வாகனத்தின் இதர பகுதிகள் முற்றிலும் உலர்ந்து இருந்தாலும் கூட வாகனத்தின் சில பகுதிகளில் ஈரம் நீண்ட காலம் தங்கிவிடுவதால் அரிமானம் அதிகரிக்கும்.
4) வாகனத்தில் காற்றுபுக வாய்ப்பில்லாத பகுதிகளில் அதிக வெப்பத்தால் அரிமானத்தின் வீதம் அதிகரிக்கும்.

இந்தத் தகவல் உங்கள் வாகனத்தை குறிப்பாக அதன் கீழ்ப் பகுதியை முடிந்த வரை சுத்தமாகவும் உலர்வாகவும் வைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகிறது. சாயம் அல்லது பாதுகாப்புக்கான மேற்பூச்சுகளுக்கு ஏற்படும் சேதங்களை உடனடியாகக் களைவதும் மிக முக்கியமானது.

### அரிமானத்தைத் தடுப்பது எப்படி

**உங்கள் வாகனத்தை அடிக்கடி கழுவ வேண்டும்.**
வாகனத்தின் இறுதி வடிவமைப்பைப் பேணவும் அரிமானத்தைத் தடுக்கவும் சிறந்த வழி அதை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருப்பதுதான். வாகனத்தை குளிர்காலத்திலும் குளிர்காலம் முடிந்த உடனேயும் ஒரு முறையாவது கழுவ வேண்டும். வாகனத்தின் கீழ்ப் பகுதியை முடிந்தவரை சுத்தமாகவும் உலர்வாகவும் வைத்திருக்க வேண்டும்.
உப்பேறிய சாலைகளில் அடிக்கடி ஓட்டிச் செல்கிறீர்கள் என்றால், உங்கள் வாகனம் குளிர்காலங்களில் மாதம் ஒரு முறையாவது கழுவப்பட வேண்டும். கடலுக்கு அருகில் வாழ்கிறீர்கள் என்றால் உங்கள் வாகனம் ஆண்டு முழுவதும் மாதம் ஒரு முறையாவது கழுவப்பட வேண்டும்.

எப்படிக் கழுவுவது என்று “வாகன சுத்தப்படுத்துதல்” என்ற பகுதியைப் பார்த்து தெரிந்துகொள்ளவும்.

**அந்நிய பொருட்கள் சேகரிப்பை நீக்கிவிடவும்.**
உப்புகள், ரசாயனங்கள், சாலை எண்ணை அல்லது தார், மரத் துகல், பறவை எச்சங்கள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் ஆகிய அந்நியப் பொருட்கள் சாயம்பூசப்பட்ட பகுதிகளில் தேங்கினால் அவை வாகனத்தின் வடிவத்தைப் சேதப்படுத்தும். இது போன்ற சேதங்களை உடனடியாக நீக்கிவிடவும். இந்த சேதங்களை கழுவி நீக்குவது கடினமாக இருந்தால் கூடுதல் சுத்திகரிப்பான் தேவைப்படலாம். நீங்கள் பயன்படுத்தும் எந்த சுத்திகரிப்பான் சாயம்பூசப்பட்ட பகுதிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் இருப்பதையும் அது சுத்தமாக்குவதற்கு மட்டுமே பயன்படுவதாகவும் இருக்க வேண்டும். இது போன்ற சிறப்பு சுத்திகரிப்பான்களைப் பயன்படுத்தும்போது உற்பத்தியாளரின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றவும்.

**இறுதி வடிவத்துக்கான சேதங்களை பழுதுபார்க்கவும்**
சாயம்பூசப்பட்ட பகுதிகளுக்கு ஏந்த சேதாரமும் ஏற்படாமல் உள்ளதா என்பதை கவனமாக சோதிக்கவும். சாயத்தில் சில்லுகளும் கீறல்களும் இருந்தால் அவற்றை உடனடியாக நீக்கி அரிமானம் ஏற்படுவதைத் தவிர்க்கவும் சில்லுகளும் கீறல்களும் உலோகப் பகுதிவரை ஆழமாகச் சென்றிருந்தால் தகுதிபெற்ற பழுதிநீக்கும் நிறுவனத்தை அணுகவும்.

**பயணியர் மற்றும் சாமான்கள் வைக்கும் பகுதிகளை சுத்தமாக வைத்திருக்கவும்.**
ஈரம். அழுக்கு அல்லது மணல் தரை விரிப்புகளுக்கு அடியில் சேதரமாகி அரிமானத்துக்கு வழிவகுக்கக் கூடும்.. அவ்வப்போது இந்த விரிப்புகளின் அடியில் உள்ள பகுதி சுத்தமாகவும் உலர்வாகவும் இருப்பதை உறுதி செய்துகொள்ளவும். சாலைகள் இல்லாத பகுதிகளிலும் மழைகாலத்திலும் வாகனத்தை அடிக்கடிப் பயன்படுத்தினால், அடிக்கடி இதுபோன்ற சோதனைகளை ஏற்றுகொள்ள வேண்டும். ரசாயனங்கள், பூச்சிக்கொள்ளிகள், தூய்மைப்படுத்தும் திரவங்கள், உப்புகள் உள்ளிட்ட சில பொருட்கள் மிக அதிக அரிமானத்தன்மை கொண்டவை. இதுபோன்ற பொருட்களை நன்கு மூடப்பட்ட பெட்டகங்களில் வைத்து வாகனத்தில் எடுத்துச்செல்லப்படவேண்டும். சிந்தினாலோ ஒழுகினாலோ அந்தப் பகுதியை உடனடியாக சுத்தம் செய்யவும்.


**வாகனத்தை உலர்ந்த நல்ல காற்றோட்டமான பகுதியில் நிறுத்தி வைக்கவும்.**
ஈரமான, காற்று குறைவான பகுதிகளில் வண்டியை நிறுத்திவைக்க வேண்டாம். அடிக்கடி வாகனக் கூடத்தில் கொடுத்து வாகனத்தை கழுவும் பழக்கம் இருந்தால் அல்லது அடிக்கடி வாகனம் ஈரமாக இருக்கும் போது ஓட்டினால் உங்களது வாகனக் கூடம் ஈரமானதாக இருக்கலாம். வாகனக் கூடத்தில் அதிக ஈரப்பதம் அரிமானத்தை அதிகரிக்கக் கூடும் காற்றோட்டம் குறைவாக இருந்தால், வெப்ப மயமாக்கப்பட்ட வாகனக் கூடத்திலும் வாகனம் அரிமானம் அடையலாம்.

**⚠ எச்சரிக்கை**

**கேட்டலிடிக் கன்வர்டர், எக்ஸ்ஹாச்ட் பைப் உள்ளிட்ட அமைப்புப் பகுதிகளில் கூடுதல் அடிப்பூச்சுகள் அல்லது துருப்பிடிப்பதைத் தடுப்பதற்கான பூச்சுகளைப் பூசவேண்டாம். அடிப்பூச்சுப் பொருள் அதிக வெப்பமடைந்தால் தீப்பற்றிக்கொள்ளக்கூடும்**

## வாகனத்தை சுத்தப்படுத்துதல்

**உதாரணம்**



77PM09001

**⚠ எச்சரிக்கை**

**வாகனத்தின் உள்புறப் பகுதியையோ வெளிப்புறப் பகுதியையோ சுத்தப்படுத்தும்போது, பித்தளை மெருகெண்ணய், பெட்ரோல், பென்சீன் தீப்பற்றக்கூடிய திரவங்களையோ ப்ளீச்சிங் உள்ளிட்ட கடுமையான வீட்டு சுத்திகரிப்பு சோப்புகளையோ எப்போதும் பயன்படுத்த வேண்டாம். இதுபோன்ற பொருட்கள் வாகனத்துக்கு உறுகளையோ சேதங்களையோ ஏற்படுத்தலாம்.**

### உள்பக்கத்தை சுத்தமாக்குதல்

**வினைல் அப்ஹோல்ஸ்டரி**
சோப் கலைவை அல்லது இதமான தண்ணீரில் மிதமான டிடெர்ஜண்டைச் சேர்க்கவும். ஸ்பாஞ்ச் மூலம் வினைலில் இந்தக் கலவையைத் தடவவும். சிலநிமிடங்கள் இருந்தால் அழுக்கு வெளியேறும்.

அழுக்கை அகற்ற தூய்மையான துணியால் மேல் பகுதியை சோப் தண்ணிரால் துடைக்கவும். அழுக்குப் போக மீண்டும் இவ்வாறு செய்யவும்.

**பேப்ரிக் அப்ஹோல்ஸ்டரி (பயணிகள் சீட் தவிர)**
வாக்குவம் கீளனரால் அழுக்கை அகற்றவும். மிதமான சோப் கலைவையால், கரைகள் மீது துடைக்கவும். சோப்பை அகற்ற ஈரத்துணியால் துடைக்கவும். கரை அகலும் வரை இவ்வாறு செய்யவும். வர்த்தக பேப்ரிக் கிளினரும் பயன்படுத்தலாம். பேப்ரிக் கிளினர் நாடினால், வழிமுறைகள், முன்னெச்சரிகைக் குறிப்புகளை பின்பற்றவும்.

**⚠ நிதானம்**

- **பயணிகள் சீட் முன் திரவம் அல்லது நெகிழ்வான திடப்பொருளைச் சிந்த வேண்டாம். அப்படி சிந்தினால், உடனே மென் துணியால் துடைக்கவும். சென்சாரில் திரவம் படுவது, சீல் பெல்ட் ரிமைண்டர் சென்சாரை பாதிக்கும்.**
- **சீட்டைக் கிழித்து சென்சாரை பாதிக்கக்கூடிய கூரான அல்லது கனமான பொருளைப் பயணிகள் சீட் மீது வைக்க வேண்டாம்.**

**ஃபேப்ரிக் அப்ஹோல்ஸ்டரி (முன்பக்கப் பயணிகள் சீட்)**
துடைக்க திரவத்தைப் பயன்படுத்த வேண்டாம். இது துணி மற்றும் சீட் சென்சாரை பாதிக்கும்.

**லெதர் அப்ஹோல்ஸ்டரி**
வாக்குவம் கிளினரால் ஒட்டிக்கொண்டிருக்கும் தூசை அகற்றவும். மிதமான சோப் கலைவையால், கறைகள் மீது துடைக்கவும். சோப்பை அகற்ற ஈரத்துணியால் துடைக்கவும். கரை அகலும்வரை இவ்வாறு செய்யவும். அல்லது வர்த்தக லெதர் கிளினரைப் பயன்படுத்தவும். லெதர் கிளினரைப் பயன்படுத்துவதாக இருந்தால் உற்பத்தியாளர் வழிமுறைகள், முன்னெச்சரிக்கைக் குறிப்புகளைப் பின்பற்றவும். சால்வண்ட் ரக அல்லது அரிக்கும் கிளீனர்களைப் பயன்படுத்த வேண்டாம்.

*குறிப்பு:*

- *லெதர் அப்ஹோல்ஸ்டரி பார்க்க அழகாக இருக்க, ஆண்டுக்கு இருமுறையேனும் சுத்தம் செய்யப்பட வேண்டும்.*
- *லெதர் அப்ஹோல்ஸ்டரி ஈரமானால், அதை உடனடியால மென்மையான துணி அல்லது டிஷ்யூ காகிதத்தால் துடைக்கவும். தண்ணீர், லெதரைக் கடினமாக்கலாம். துடைக்காவிட்டல் சுருங்கிவிடலாம்.*
- *வெய்யில் அதிகம் உள்ள நாட்களில் பார்க் செய்யும்போது, நிழலான பகுதியை நாடவும். நீண்ட நேரம் சூரிய வெளிச்சத்திற்கு இலக்கானால் லெதர் அப்ஹோல்ஸ்டரி நிறம் மங்கிச் சுருங்கிவிடும்.*
- *மற்ற இயற்கையான பொருட்கள் போலபே லெதர் உள்ளபடியே புள்ளிகள் கொண்டிருக்கும். இவை லெதரின் செயல்பாட்டை எந்த விதத்திலும் பாதிப்பதில்லை.*

### சீட்டு பெல்ட்டுகள்

மென்மையான சோப் மற்றும் நீர் கொண்டு சீட்டு பெல்ட்டுகளைக் சுத்தப்படுத்தவும். பெல்ட்டுகளில் ப்ளீச்சையோ சாயத்தையோ பயன்படுத்த வேண்டாம். பெல்ட்டில் உள்ள இழைகளை அவை வலுவிழக்கச் செய்யக்கூடும்.

### வினைல் தரை விரிப்பான்கள்

சாதாரண அழுக்குகளை நீர் அல்லது மென்மையான சோப்பை வைத்து வினைலில் இருந்து நீக்கலாம். தூசியைத் துடைப்பான் மூலம் அகற்றவும். அழுக்கு நீங்கியவுடன் விரிப்பை நன்கு நீரில் அலசவும். பிறகு அதை காயவைக்கவும்.

### விரிப்புகள்

அழுக்கையும் மண் துகள்களையும் வாக்கம் க்ளீனரை வைத்து நீக்கவும். ஒரு மென்மையான சோப் திரவத்தை சுத்தமான ஈரத் துணியில் நனைத்து அழுக்குப் படிந்த பகுதிகளில் தடவவும். சோப்புக் கரையை நீக்க மீண்டும் சுத்தமான ஈரத் துணியை வைத்துத் துடைக்கவும். அழுக்குக் கரை நீங்கும் வரை இந்த செய்முறையைத் தொடரவும். அல்லது எளிதில் நீங்காத கரைகளுக்கு கடைகளில் விற்கப்படும் விரிப்பு சுத்திகருப்பான்களைப் பயன்படுத்தவும் விரிப்பு சுத்திகாரிப்பான்களைப் பயன்படுத்துகையில் உற்பத்தியாளரின் வழிகாட்டுதல்களையும் எச்சரிக்கைகளையும் கவனமாகப் பின்பற்றவும்.

### இன்ஸ்ட்ருமெண்ட் பேனல் மற்றும் கன்சோல்

வாக்கம் க்ளீனரை வைத்து அழுத்தமாகப் படியாத அழுக்குகளை நீக்கவும். நன்கு பிழியப்பட்ட ஈரத்துணியைக்கொண்டு அழுக்கை மெதுவாக துடைக்கவும். அழுக்கு நீங்கும் வரை இதை திரும்ப திரும்ப செய்யவும்.

*அறிவிப்பு*

**ஸ்விட்சுகள் உள்ளிட்ட மின்சாரக் கருவிகளை சுத்தப்படுத்த சிலிகானை உள்ளடக்கிய ரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தாதீர்கள். அந்தப் பொருட்கள் அவற்றால் சேதமடையலாம்.**

## வெளிப்புறத்தை சுத்தப்படுத்துதல்

*அறிவிப்பு*

**உங்கள் வாகனத்தை அழுக்கில்லாமல் சுத்தமாக வைத்திருப்பது அவசியமானது. வாகனத்தை சுத்தமாக வைத்திருக்கத் தவறிய தன்விளைவாக வாகனத்தின் சாயம்போகும் அல்லது அதன் உடலின் பல்வேறு பகுதிகளில் அரிமானத்துக்கு வழிவகுக்கும்.**

### கழுவுதல்

**உதாரணம்**



82DY09

**⚠ எச்சரிக்கை**

- **என்ஜின் ஓடிக் கொண்டிருக்கையில் வாகனத்தை கழுவவோ மெழுகு தேய்க்கவோ அடிக்கவோ முயலாதீர்கள்**
- **கூர்மையான முனைகொண்ட பகுதிகளைக் கொண்டிருக்கக் கூடிய வாகனத்தின் உடல் மற்றும் ஃபெண்டர் ஆகியவற்றின் அடிப்பகுதிகளை சுத்தப்படுத்தும் போது க்ளவுஸ்கள் அல்லது முழுக்கை சட்டை அணிந்துகொண்டு கை வெட்டுப்படுவதைத் தவிர்க்கவும்.**
- **வாகனத்தைக் கழுவி முடித்தவுடன் அதை ஓட்டத் தொடங்கும்முன் பிரேக்குகளை கவனமாக சோதிக்கவும். அவை அவற்றின் இயல்பான செயல்திறனுடனே இருப்பதை உறுதி செய்யவும்.**

வாகனத்தைக் கழுவும்போது அதன் மீது நேரடியாக சூரிய வெளிச்சம் படாத இடத்தில் வைத்திருக்கவும். அதோடு பின்வரும் யோசனைகளைப் பின்பற்றவும்.

1) உடலின் அடிப்பகுதியிலும் சக்கரங்கள் பொருத்தப்பட்டிருக்கும் பகுதிகளிலும் அழுத்தப்பட்ட நீர்ரைப் பீய்ச்சி மணல் மற்றும் குப்பைகளை நீக்கவும். ஏராளமான நீரைப் பயன்படுத்தவும்.

| *அறிவிப்பு* |
|---|
| **வாகனத்தைக் கழுவுகையில்:**<br>• **பிளாஸ்டிக் பகுதிகளில் 80° செல்சியஸ் (176° பாரன்ஹீட்)க்கு மேற்பட்ட சூடான நீரை ஊற்றுவதைத் தவிர்க்கவும்.**<br>• **என்ஜின் உட்பொருட்களை சேதமடையாமல் காக்க என்ஜின் பகுதியில் அழுத்தமூட்டப்பட்ட நீரைப் பயன்படுத்த வேண்டாம்.** |

2) அழுக்கை நீக்க வெளிப் பகுதியை அலசவும். ஓடும் நீரைக் கொண்டு உடல் பகுதியின் வெளிப்புறத்தில் உள்ள அழுக்கு மற்றும் மணல் துகள்களை நீக்கவும். சோப்பு பஞ்சையோ துடைப்பானையோ பயன்படுத்தலாம். சாயம் அல்லது பிளாஸ்டிக்கில் கீறல் ஏற்படுத்தக்கூடிய கனமான பொருட்களைப் பயன்படுத்த வேண்டாம். பல வாகனங்களில் முகப்பு விளக்கு மூடிகள் மற்றும் லென்ஸ்கள் பிளாஸ்டிக்கில் ஆனவை என்பதை நினைவில் கொள்ளவும்.

| *அறிவிப்பு* |
|---|
| **வண்ணம் அல்லது பிளாஸ்டிக் மேற்பரப்பு சேதமாவதைத் தவிர்க்க போதுமான நீர் இல்லாமல் அழுக்கைத் துடைத்தெடுக்காதீர்கள். மேற்கூரிய செய்முறையை உறுதியாகப் பின்பற்றவும்.** |

3) மென்மையான டிடெர்ஜெண்ட் அல்லது கார் கழுவும் திரவத்தை பஞ்சு அல்லது மெல்லிய துணியில் முக்கி அதைக் கொண்டு ஒட்டுமொத்த வெளிப்புறத்தையும் கழுவவும். பஞ்சு அல்லது துணியை அடிக்கடி சோப் திரவத்தில் நனைத்தெடுக்க வேண்டும்.


| *அறிவிப்பு* |
|---|
| **கடையில் விற்கப்படும் கார் கழுவும் பொருளைப் பயன்படுத்துகையில் உற்பத்தியாளர் குறிப்பிட்டுள்ள எச்சரிக்கைகளைப் பின்பற்றவும். கடுமையான டிடெர்ஜெண்டுகள் அல்லது சோப்புகளை எப்போதும் பயன்படுத்தாதீர்.** |

4) அழுக்கு முற்றிலும் நீங்கிய பிறகு ஓடும் நீரை விட்டு டிட்டர்ஜன்ட்டை அலசவும்.
5) அலசியபின் வாகனத்தின் வெளிப் பகுதியை ஒரு ஈரமான துணிகொண்டு துடைத்துவிட்டு அதைக் காயவிடவும்.
6) சாயம் பூசப்பட்ட பகுதிகளுக்கு எந்த சேதமுமில்லை என்பதை உறுதிசெய்துகொள்ளவும். ஏதாவது சேதம் இருந்தால் பின்வரும் செய்முறையைப் பின்பற்றி அதை நீக்கவும்.
   1. சேதமடைந்த புள்ளிகளை சுத்தப்படுத்தி அவற்றைக் காயவிடவும்.
   2. சேதமடைந்த புள்ளிகளில் மெல்லிய பிரஷ்ஷைக் கொண்டு சாயமடிக்கவும்.
   3. சாயத்தை முற்றிலும் காயவிடவும்.

| *அறிவிப்பு* |
|---|
| **தானியங்கி கார் கழுவுதலை பயன்படுத்தினால் ஸ்பாய்லர் உள்ளிட்ட வாகனத்தின் உடல்பகுதிகள் சேதமடையாமல் இருப்பதை உறுதி செய்க. சந்தேகங்கள் இருந்தால் கார் கழுவும் நிறுவனரின் அறிவுரையை நாடவும்.** |

## மெழுகு பூசுதல்

**உதாரணம்**



77PM09002

வாகனத்தைக் கழுவியபின் சாயத்தைப் பாதுகாக்கவும் அழகுபடுத்தவும் மெழுகு தேய்க்கவும், மெருகூட்டுதல் ஆகியவற்றை மேற்கொள்ளலாம்.


• நல்ல தரமான மெழுகுகள் மற்றும் மெருகூட்டு பொருட்களை மட்டுமே பயன்படுத்தவும்.
• மெழுகுகள் மற்றும் மெருகூட்டுப் பொருட்களைப் பயன்படுத்துகையில் உற்பத்தியாளர் குறிப்பிட்டுள்ள எச்சரிக்கைகளைப் பின்பற்றவும்.

# பொதுவான தகவல்கள்

வாகனத்தை அடையாளம் கண்டு கொள்ளுதல் ............................10-1
பாஸ்ட்டஃக் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)..............................10-2
சி.என்.ஜி. கிட் எண் அடையாளம் காணுதல் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்) ...........................................................10-2
ஹை செக்யூரிட்டி ரெஜிஸ்ட்ரேஷன் பிளேட் (ஹெ.எஸ்.ஆர்.பி.) (கருவி பொருத்தப்பட்டிருந்தால்) ..................10-3

## வாகனத்தை அடையாளம் கண்டு கொள்ளுதல்


### சேஸிஸ் வரிசை எண்




77PH059

சேஸிஸ் மற்றும்/அல்லது என்ஜின் வரிசை எண் வாகனங்களைப் பதிவு செய்யப் பயன்படுத்தப்படுகின்றன.  வாகனத்தை விற்பவரிடம் சிறப்பு சேவைத் தகவலைக் குறிக்கவும் இவை பயன்படுகின்றன.  மாருதி சுசூகி கமர்ஷியல் விற்பனையாளரிடம் ஆலோசிக்க வாய்ப்பு கிடைத்தால்,வாகனத்தின் இந்த எண்ணைத் தெரிந்துகொள்ள மறந்துவிடாதீர்கள்.  அந்த எண்ணைப் படிக்க கடினமாக இருந்தால் அதை நீங்கள் அடையாளத் தட்டில் காணலாம்.

### என்ஜின் வரிசை எண்





54G082

விளக்கப்படத்தில் உள்ளது போல் என்ஜின் எண் சிலிண்டர் பிளாக்கில்  ஒட்டப்பட்டுள்ளது.

## பாஸ்ட்டஃக் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)

மின்மயமாக்கப்பட்ட சுங்கக் கட்டணம் வசூலித்தல் அல்லது இந்திய அரசு வரையறுத்துள்ள வேறெதாவது நோக்கத்துக்கு இது அவசியம் என்பதால், சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரவை, பாஸ்ட்டஃக்க்கை (1) கட்டாயமாக்கியுள்ளது.

பாஸ்ட்டஃக்க்கு சேதம் ஏற்பட்டாலோ, முகப்பு கண்ணாடி மாற்றுவதற்கோ அருகிலுள்ள நிறுவனத்தின் அங்கீகாரம்பெற்ற மாருதி சுஸுகி கமர்ஷியல் விற்பனையாளரை அணுகவும்.




66MM01001

### வாகனத்தின் உள்புறத்தில் காணப்படுவதுபோல

உதாரணம்





64MM01002

*குறிப்பு:*
*இந்த படம், காண்பித்து விளக்குவதற்காக மட்டுமே வாகனத்தில் பொருத்தப்பட்ட கருவியின் உட்புற அமைப்பு வேறு மாதிரி இருக்கலாம்.*

### வாகனத்தில் வெளிப்புறத்தில் காணப்படுவதுபோல

உதாரணம்





64MM01003

*குறிப்பு:*
*இந்த படம், காண்பித்து விளக்குவதற்காக மட்டுமே வாகனத்தில் பொருத்தப்பட்ட கருவியின் உட்புற அமைப்பு வேறு மாதிரி இருக்கலாம்.*

*குறிப்பு:*
- *டேக்கை முகப்புக் கண்ணாடியிலிருந்து நீக்க முயற்சித்தால், டேக் நிரந்தரமாக சேதமடைந்துவிடும்.*
- *முகப்புக் கண்ணாடியை சுத்தப்படுத்தப் பயன்படுத்தபடும் ரசாயனத் துடைப்பான்கள்: டேக்கில் பட்டால் அது சேதமடைந்துவிடும்.*
- *எந்த கூர்மையான பொருளும் டேக் மீது பட்டால் அது சேதமடைந்துவிடும்.*

### சி.என்.ஜி. கிட் எண் அடையாளம் காணுதல் (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)




77PM1002


சி.என்.ஜி. சிலிண்டர் அடையாள எண் மற்றும் சி.என்.ஜி. கிட் நிறுவும் தேதி காட்டப்பட்டுள்ளது போல் கார்கோ பாடியில் வலதுபுறம் உள்ளது.

## ஹை செக்யூரிட்டி ரெஜிஸ்ட்ரேஷன் பிளேட் (ஹெ.எஸ்.ஆர்.பி.) (கருவி பொருத்தப்பட்டிருந்தால்)

சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் அறிவுறுத்தலின்படி ஒவ்வொரு வண்டியிலும் ஹெ.எஸ்.ஆர்.பி. இருக்க வேண்டும்.

ஹெ.எஸ்.ஆர்.பி.யில் உள்ளவை:
- முன் மற்றும் பின் பகுதி ஹெ.எஸ்.ஆர்.பி., இவை 2 பூட்டுக்களுடன் நம்பர் பிளேட் அருகில் பொருத்தப்படும்.
- மூன்றாவது லைசன்ஸ் பிளேட் முன் பகுதி வின்ட்ஷீல்டில் பொருத்தப்படும்


### மூன்றாவது லைசன்ஸ் பிளேட்



64MM01005

(1) மூன்றாவது லைசன்ஸ் பிளேட்

### மூன்றாவது லைசன்ஸ் பிளேட் – வண்டிக்கு வெளியிலிருந்து பார்க்கும் கோணத்தில்



64MM01008

(a) ஹெ.எஸ்.ஆர்.பி. அதாரிட்டி பெயரை வழங்குதல்
(b) வாகனப் பதிவு எண்
(c) யுனீக் (பிரத்யேக) லேசர் எண் – முன்புற பிளேட்
(d) யுனீக் (பிரத்யேக) லேசர் எண் – பின்புற பிளேட்
(e) முதல் பதிவின் தேதி (தேதே-மாமா-ஆஆஆஆ)

*குறிப்பு:*
*படம் எடுத்துக்காட்டுக்காகவே கொடுக்கப்பட்டுள்ளது. லேபிள் பொருத்தப்பட்ட வாகனத்தின் உட்புற அமைப்பு மாறுபட்டு இருக்கலாம்.*

*குறிப்பு:*
- *மூன்றாவது லைசன்ஸ் பிளேட்டை வின்ட்ஸ்க்ரீனிலிருந்து எடுக்க முயற்சி செய்தால் லேபிளுக்கு நிரந்தரச் சேதம் ஏற்படலாம்..*
- *வின்ட்ஸ்க்ரீனில் லேபிள் பொருத்தப்பட்ட பகுதியைச் சுத்தம்செய்ய ரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தினால் அந்த இடத்தில் சேதம் ஏற்படக்கூடும்.*
- *லேபிளின் மீது கூர்மையான பொருள் எதையேனும் பயன்படுத்தினால் லேபிள் சேதமடையக்கூடும்..*
- *மூன்றாவது லைசன்ஸ் பிளேட்டை மாற்ற வேண்டியிருந்தால் உரிய அதிகாரியைத் தொடர்புகொள்ளவும்.*

### மூன்றாவது லைசன்ஸ் பிளேட் – வாகனத்துக்கு வெளியிலிருந்து பார்க்கும் கோணம்



64MM01009

*குறிப்பு:*
*படம் எடுத்துக்காட்டுக்காகவே கொடுக்கப்பட்டுள்ளது.*

*குறிப்பு:*
*சாலை மற்றும் நெடுஞ்சாலைப் போக்குவரத்துத் துறை வகுத்துள்ள ஹெ.எஸ்.ஆர்.பி. கட்டுப்பாட்டு விதிகளின்படி மூன்றாவது லைசன்ஸ் பிளேட்டுக்கு (பின்புறம்) நிறம் பூசப்பட்டுள்ளது.*

# குறிப்புகள்

*குறிப்பு:*
*குறிப்புகள் முன் அறிவிப்பின்றி மாற்றப் படக்கூடியவை.*

பெட்ரோல் : பெட்ரோல் எஞ்ஜின் மாடல்
பை - பியூயல் : பை-பியூயல் (பெட்ரோல் + சி . என். ஜி .) இஞ்ஜின் மாடல்
டீசல்: டீசல் என்ஜின் மாடல்

| **பொருள்: அளவுகள்** | **அலகு: மில்லிமீட்டர்** | |
|---|---|---|
| ஒட்டுமொத்த நீளம் | | 3800 |
| ஒட்டுமொத்த அகலம் | | 1562 |
| ஒட்டுமொத்த உயரம் | | 1883 |
| சக்கரத்தின் அடிப்பாகம் | | 2110 |
| டிராக் | முன்புறம் | 1345 |
| | பின்புறம் | 1330 |

| **பொருள்: நிறை (எடை)** | **அலகு: கிலோ** | |
|---|---|---|
| மொத்த நிறை (எடை) | பெட்ரோல் | 860 |
| | பை - பியூயல் | 975 |
| | டீசல் | 860 |
| வாகனத்தின் மொத்த நிறை (எடை) தரமதிப்பீடு | | 1600 |
| அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச ஆக்ஸில் எடை | முன்புறம் | 900 |
| | பின்புறம் | 1020 |

| பொருள்: என்ஜி ன் | டீசல் | பெட்ரோல் மற்றும் பை - பியூயல் |
|---|---|---|
| வகை | E08A (DOHC) | G12B (DOHC) |
| சிலிண்டர்களின் எண்ணிக்கை | 2 | 4 |
| போர் | 77.0 மிமீ | 71 மிமீ |
| ஸ்டிரோக் | 85.1 மிமீ | 75 மிமீ |
| பிஸ்டன் மாற்றுதல் | 793 செமீ $^3$ | 1196 செமீ $^3$ |
| அழுத்தத்தின் விகிதம் | 15.1 ± 0.4 : 1 | 9.9 : 1 |

| பொருள்: மின்பொருள் | | |
|---|---|---|
| ஸ்பார்க் பிளக்கு | பெட்ரோல் | BOSCH-FR6DC |
| | பை - பியூயல் | |
| பேட்டரி | | 12V 38B20R |
| ஃபியூஸ்கள் | | “ ஆய்வு மற்றும் பராமரிப்பு ” பகுதியைக் காண்க. |

| பொருள்: விளக்குகள் | | வாட் (WATTAGE) | பல்ப் எண். |
|---|---|---|---|
| முன் விளக்கு | | 12வோல்ட் 60/55வாட்ஸ் | H4 |
| பொஸிஷன் லைட்டுகள் | | 12வோல்ட் 5வாட்ஸ் | W5W |
| டர்ன் சிக்னல் லைட் | முன்புறம் | 12வோல்ட் 21வாட்ஸ் | PY21W |
| | பின்புறம் | 12வோல்ட் 21வாட்ஸ் | P21W |
| பிரேக்/டெயில் லைட் | | 12வோல்ட் 21/5வாட்ஸ் | P21/5W |
| ரிவர்ஸில் செல்வதைக் குறிக்கும் விளக்கு | | 12வோல்ட் 21வாட்ஸ் | P21W |
| லைஸன்ஸ் பிளேட் லைட் | | 12வோல்ட் 5வாட்ஸ் | W5W |
| உட்புற விளக்கு | | 12வோல்ட் 5வாட்ஸ் | C5W |

| பொருள்: சக்கரங்கள் மற்றும் டயர்கள் | |
|---|---|
| டயர் அளவு, முன், பின்புறம் மற்றும் உதிரி | 155R13 LT 8PR 90/89Q* |
| ரிம் அளவு | 13X4J |
| டயரின் காற்றழுத்தம் | டயரில் எவ்வளவு காற்று அடிக்க வேண்டும் என்பதை ஓட்டுநரின் அருகில் உள்ள டயர் தகவல் லேபிளில் காண்க. |

* எடை, வேகம் ஆகியவற்றுக்கான குறிப்பிடப்பட்ட விகிதத்தின்படி உங்களால் டயரைத் தயாரிக்க முடியவில்லை என்றால் கூடுதலான எடை, வேக விகிதத்தில் தயாரிக்கவும்.


| பொருள்: பரிந்துரைக்கப்படும் பியூயல் / லூப்ரிகேண்டுகள் மற்றும் திறன்கள் (தோராயமாக). | | | | |
|---|---|---|---|---|
| பியூயல் | பெட்ரோல் | | “ பியூயல் பரிந்துரை ” பிரிவைப் பார்க்கவும். | 30 லிட்டர் # |
| | பை - பியூயல் | பெட்ரோல் | | 5 லிட்டர் # |
| | | சி . என். ஜி | | 35 லிட்டர் x 2 டேங்குகள் # |
| | டீசல் | | | 30 லிட்டர் # |
| என்ஜின் ஆயில் | பெட்ரோல் | | பிரிவு வகைகள்: SG+, SH, SJ, SL, SM அல்லது SN<br>பாகுத்தன்மை : SAE 5W-30 | 5.2 L ( ஆயில் ஃபில்டரால் மாற்றியமைக்கவும் ) |
| | பை - பியூயல் | | | |
| | டீசல் | | சிந்தெடிக் ஆயில், தரம்: ACEA A5/B5<br>பிசுபிசுப்புத்தன்மை SAE 5W-30 | 3.4 லிட்டர் (எண்ணெய் வடிகட்டியின் மூலம் போட வேண்டும்) |
| என்ஜின் கூலண்ட் | | | “ ஆய்வு மற்றும் பராமரிப்பு ” பகுதியைக் காண்க. | 3.5 லிட்டர் (ரிசெர்வோ சேர்த்து) |
| மானுவல் டிரான்ஸ்மிஷன் ஆயில் | பெட்ரோல் | | “ எம்.ஜி.ஜி.ஓ 75W-80” | 1.4 லிட்டர் |
| | டீசல் | | | 1.3 லிட்டர் |
| பின்புற டிஃபரஷியல் ஆயில் | | “ டோட்டல்பினலஃப் ட்ரான்ஸ்லஃப் எல்.எல் 85W-140” | | 1.6 லிட்டர் |
| ப்ரேக் திரவம் | | நம்பிக்கையான மாருதி பிரேக் திரவம் அல்லது டாட் 3 | | “ ஆய்வு மற்றும் பராமரிப்பு ” பகுதியில் உள்ள குறிப்பின்படி எண்ணெய் அளவைப் பராமரிக்கவும். |

# இவ்வளவு ஃபியூவலை நிரப்ப முடியும் என்று பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட ஃபியூவல் டேங்க்கில் சற்று அதிகமாகவே உள்ளது. இந்த கூடுதல் இடமானது பாதுகாப்பு மற்றும் அறிவியல் காரணங்களுக்காக வழங்கப்படுகிற

# பாடி கட்டமைப்பிற்கான குறிப்புகள் (சேஸிஸ் வேறுபாடுக்காக)

**(பெட்ரோல் எஞ்ஜின் மாடலுக்காக)**
பின்வரும் பரிந்துரைகள், எல்லை நிபந்தனைகள் உறுதிசெய்யப்பட்ட பின்னரே கேப்-சேஸிஸ் வண்டியின் பாடி கட்டுமானம் செய்யப்படவேண்டும் :

(அ) **அளவுகள்** : உற்பத்தியாளர் தரும் கேப்-சேஸிஸ் வாகனம் மீது அமையவிருக்கும் லோட் பாடி/செயல்பாடு கீழ்க்குறிப்பிட்டுள்ள அளவுகளில் குறைந்தபட்ச/அதிகபட்ச அளவுடன் அமைய வேண்டும்.





77PM12003

(ஆ) **எடை மற்றும் அதன் பகிர்வு**:
கட்டிமுடிக்கப்பட்ட வண்டியின் அதிகபட்ச கெர்ப் எடை 1140 கிலோ மற்றும் 860 கிலோ எடை இருக்கும்படி லோட்/பாடி செயல்பாடு அமைக்கப்பட வேண்டும். முன்புற அச்சுக்கும் பின்புற அச்சுக்கும் உள்ள கெர்ப் எடை 1:46 என்ற அளவுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
பாடி கட்டுமானம் செய்பவர் வண்டி எடை, பேலோடைக் காட்டும் ப்ளேட்டை சி.எம்.வி.ஆர் விதி 122-ல் குறிப்பிட்டுள்ளபடி அமைத்து விடுவார்.

(இ) **பாடி வெளிப்பகுதிகள்**: வண்டியின் வெளீப்புறப் பரப்பில் கூர்முனை (அ) நீட்டிக் கொண்டிருக்கும் முனைகள் இல்லாதபடி லோட்/பாடி செயல்பாடு அமைக்கப்படும்; இப்படி இருந்தால் விபத்து நேரிட்டால் அதை உராய்பவர்களுக்கும் மோதுபவர்களுக்கும் தீவிர காயங்கள் ஏற்படலாம். முடிக்கப்பட்ட வண்டி இயக்கத்தில் இருந்தாலும் இல்லாமல் இருந்தாலும் இப்படிதான் அமைக்க வேண்டும். வெளிப்புற முனைகள்/நீட்டிக் கொண்டிருக்கும் பாகங்களில் குறைந்தபட்சம் 2.5 மிமீ ஆரம் இருக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. சி.எம்.வி.ஆர் விதி 124(1)-11-ல் குறிப்பிட்டுள்ள அளவுப்படி பாடி அமைக்கப்பட வேண்டும்.

(ஈ) **லைட்டிங், சிக்னலிங் கருவிகள்**: கேப்-சேஸிஸ் உடன் முகப்பு விளக்கு அசெம்பிளி கேப் மற்றும் பின்புற இணை விளக்குகள், தற்காலிக பேனல், பதிவு ப்ளேட் விளக்கோடு வரும். முகப்பு விளக்கு அசெம்பிளி அப்படியே இருக்க வேண்டும். பின்புற காம்பினேஷன் லேம்ப்குகள், ரெஜிஸ்ட்ரேஷன் பிளேட் விளக்குகள் மற்றும் பார்க்கிங் சென்சார்கள் (இவை வாகனத்துடன் கிளவ் பாக்ஸ் இருக்கும்) கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைக்கப்பட்ட விளக்கப்படம் ஏற்ப லோடு ஃபாடி / அப்ளிகேஷன் மீது பொருத்தப்படலாம்.

**உதாரணம்**




77PM12004

(உ) **ரிஃப்ளக்டிவ் டேப்**: 20 மிமீ-க்கு மிகாமல் உள்ள அகலமான சிவப்பு ரிஃப்ளெக்டிவ் டேப் ஒன்றை பாடி-பில்டர் வாகனத்தின் பின்புறம் ஒட்ட வேண்டும்; இது சி.எம்.வி.ஆர் விதி 104-ன்படி அமைந்திருக்க வேண்டும்.

(ஊ) **படிவம் 22A பகுதி II**: சி.எம்.வி.ஆர் விதி 47-ன்படி படிவம் 22A பகுதி IIஐ தர வேண்டும்.

(எ) பாடி ஃபேப்ரிகேஷன் செய்யும்போது மின்சார ஒயரிங், மின்கருவிகள், ப்ரேக் கனெக்ஷன், ப்ரேக் பைப்பிங், பியூயல் கனெக்ஷன், புகைபோக்கி அமைப்பு, சேசிஸ் கருவிகள் ஆகியவற்றை பாடி-பில்டர் தொடக்கூடாது.

**பொறுப்பாகாமை**: வண்டியின் சொந்தக்காரர்/பாடிபில்டர் சி.எம்.வி.ஆர் விதிமுறைகள் & மாநில மோட்டார் வாகன விதிகளின்படி சூபர் கேரி சேஸிஸ் வேரியண்டின் பாடி பேஃப்ரிகேஷனை செய்ய வேண்டும்.


உற்பத்தியாளர் பரிந்துரைப்படி இல்லாமலும் விதிகளின்படி இல்லாமலும் அமைந்துள்ள பேஃப்ரிகேஷன்/செயல்பாடு தொடர்பாக எழும் சட்டப் பிரச்சினைகளுக்கு வாகன உற்பத்தியாளர் எவ்விதத்திலும் பொறுப்பேற்க மாட்டார்.

**⚠ நிதானம்**

**உங்களது சூப்பர்-கேரி வண்டியை டெக்/பாடி ஃபேப்ரிகேஷன் வேலை முடியாமல் வைத்திருக்காதீர்கள்.**

**(டீசல் எஞ்ஜின் மாடலுக்காக)**
பின்வரும் பரிந்துரைகள், எல்லை நிபந்தனைகள் உறுதிசெய்யப்பட்ட பின்னரே கேப்-சேஸிஸ் வண்டியின் பாடி கட்டுமானம் செய்யப்படவேண்டும் :

(அ) **அளவுகள்** : உற்பத்தியாளர் தரும் கேப்-சேஸிஸ் வாகனம் மீது அமையவிருக்கும் லோட் பாடி/செயல்பாடு கீழ்க்குறிப்பிட்டுள்ள அளவுகளில் குறைந்தபட்ச/அதிகபட்ச அளவுடன் அமைய வேண்டும்.





77PM12001

(ஆ) **எடை மற்றும் அதன் பகிர்வு**:
கட்டிமுடிக்கப்பட்ட வண்டியின் அதிகபட்ச கெர்ப் எடை 930 கிலோ மற்றும் 860 கிலோ எடை இருக்கும்படி லோட்/பாடி செயல்பாடு அமைக்கப்பட வேண்டும். முன்புற அச்சுக்கும் பின்புற அச்சுக்கும் உள்ள கெர்ப் எடை 1.389 என்ற அளவுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
பாடி கட்டுமானம் செய்பவர் வண்டி எடை, பேலோடைக் காட்டும் ப்ளேட்டை சி.எம்.வி.ஆர் விதி 122-ல் குறிப்பிட்டுள்ளபடி அமைத்து விடுவார்.

(இ) **பாடி வெளிப்பகுதிகள்**: வண்டியின் வெளீப்புறப் பரப்பில் கூர்முனை (அ) நீட்டிக் கொண்டிருக்கும் முனைகள் இல்லாதபடி லோட்/பாடி செயல்பாடு அமைக்கப்படும்; இப்படி இருந்தால் விபத்து நேரிட்டால் அதை உராய்பவர்களுக்கும் மோதுபவர்களுக்கும் தீவிர காயங்கள் ஏற்படலாம். முடிக்கப்பட்ட வண்டி இயக்கத்தில் இருந்தாலும் இல்லாமல் இருந்தாலும் இப்படிதான் அமைக்க வேண்டும். வெளிப்புற முனைகள்/நீட்டிக் கொண்டிருக்கும் பாகங்களில் குறைந்தபட்சம் 2.5 மிமீ ஆரம் இருக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. சி.எம்.வி.ஆர் விதி 124(1)-11-ல் குறிப்பிட்டுள்ள அளவுப்படி பாடி அமைக்கப்பட வேண்டும்.

(ஈ) **லைட்டிங், சிக்னலிங் கருவிகள்**: கேப்-சேஸிஸ் உடன் முகப்பு விளக்கு அசெம்பிளி கேப் மற்றும் பின்புற இணை விளக்குகள், தற்காலிக பேனல், பதிவு ப்ளேட் விளக்கோடு வரும். முகப்பு விளக்கு அசெம்பிளி அப்படியே இருக்க வேண்டும். பின்புற இணை விளக்குகள், பதிவு ப்ளேட் விளக்குகள் லோகல் பாடி/செயல்பாட்டுடன்கீழே பரிந்துரைக்கப்பட்ட பொசிஷனில் (உயரம், அகலத்துடன்) அமையவேண்டும்.

**உதாரணம்**




77PM12002

(உ) **ரிஃப்ளக்டிவ் டேப்**: 20 மிமீ-க்கு மிகாமல் உள்ள அகலமான சிவப்பு ரிஃப்ளெக்டிவ் டேப் ஒன்றை பாடி-பில்டர் வாகனத்தின் பின்புறம் ஒட்ட வேண்டும்; இது சி.எம்.வி.ஆர் விதி 104-ன்படி அமைந்திருக்க வேண்டும்.

(ஊ) **படிவம் 22A பகுதி II**: சி.எம்.வி.ஆர் விதி 47-ன்படி படிவம் 22A பகுதி IIஐ தர வேண்டும்.

(எ) பாடி ஃபேப்ரிகேஷன் செய்யும்போது மின்சார ஒயரிங், மின்கருவிகள், ப்ரேக் கனெக்ஷன், ப்ரேக் பைப்பிங், பியூயல் கனெக்ஷன், புகைபோக்கி அமைப்பு, சேசிஸ் கருவிகள் ஆகியவற்றை பாடி-பில்டர் தொடக்கூடாது.

**பொறுப்பாகாமை**: வண்டியின் சொந்தக்காரர்/பாடிபில்டர் சி.எம்.வி.ஆர் விதிமுறைகள் & மாநில மோட்டார் வாகன விதிகளின்படி சூபர் கேரி சேஸிஸ் வேரியண்டின் பாடி பேஃப்ரிகேஷனை செய்ய வேண்டும். உற்பத்தியாளர் பரிந்துரைப்படி இல்லாமலும் விதிகளின்படி இல்லாமலும் அமைந்துள்ள பேஃப்ரிகேஷன்/செயல்பாடு தொடர்பாக எழும் சட்டப் பிரச்சினைகளுக்கு வாகன உற்பத்தியாளர் எவ்விதத்திலும் பொறுப்பேற்க மாட்டார்.

**⚠ நிதானம்**

**உங்களது சூப்பர்-கேரி வண்டியை டெக்/பாடி ஃபேப்ரிகேஷன் வேலை முடியாமல் வைத்திருக்காதீர்கள்.**